www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

පක්කම් 20

දිනමුරසු වාරමලර්

ஒக். 02-08, 1994 ரூபா 9/00

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 70



## ஆயுதம் + அதிகாரம்



கடற்புலிகள் ஒரு கண்ணோட்டம்

பிடியை விடுவார்களா புலிகள்?

எக்ஸ்ரே ரிப்போர்ட்

படங்களோடு ஒரு ரிப்போர்ட்



இலக்கிய நயம்



உறைபனியில் சிக்கிய குழந்தை

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
ஜனாதிபதித் தேர்தலைச் சந்திக்க
நாடு தயாராகிக்கொண்டிருக்கிறது.

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சிமுறை
தேவையில்லை என்று
பொதுத் தேர்தலில் சொன்னது
பொதுஜன முன்னணி.

அந்த ஆட்சிமுறையை
அறிமுகம் செய்து கொண்டுவந்த
ஐக்கிய தேசியக் கட்சியும்
அந்த ஆட்சிக்கு முற்றுப்புள்ளியிட
முழுச் சம்மதம் என்கிறது.

எனினும்- இரு பெரும் அணிகளும்
தேவையில்லை என்று சொல்லும்
ஓர் ஆட்சிமுறைக்காக
தேர்தல் நடக்கப் போகிறது.

பாராளுமன்றத்தின் மூலமாக
ஜனாதிபதி ஆட்சிமுறையை அகற்ற
ஆவன செய்திருக்க முடியும்.
இரு பெரும் கட்சிகளும்
முகம் கொடுத்துப் பேசி-விரைவாக
முடிவொன்றைக் கண்டிருந்தால்,
கால அவகாசம் போதாது
ஆட்சிமுறையை மாற்ற என்னும்
நிலை ஏற்பட்டிருக்காது.

விஷயம் என்னவென்றால்
பொதுஜன முன்னணிக்கு
ஜனாதிபதித் தேர்தல் தேவைப்படுகிறது.
வெகுஜன செல்வாக்கை வெளிப்படுத்த
பெரும்பான்மையான தொகை மக்கள்
தமக்கு ஆதரவு என்று
திட்டவட்டமாக எடுத்துச்சொல்ல
ஜனாதிபதித் தேர்தல் ஒரு களம்.

இதுதான் அரசியல்.
உடன்பாடு காணக்கூடிய சமயங்களிலும்
முரண்பாடுகள் முன்னே வந்து
ஏட்டிக்குப் போட்டியை
ஏற்படுத்தி விடுகின்றன.

ஜனாதிபதி ஆட்சிமுறை முடிவுக்கு
தமிழ்-முஸ்லிம் கட்சிகளும்
ஆதரவளித்து கை உயர்த்துகின்றன.

பிரேமதாசா இருந்தவரை
இதே கட்சிகளில் பல
ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு
விரோதமாக மூச்சுவிடவில்லை.

அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு
பிடித்தமானவற்றை-தாமும்
பற்றிக்கொண்டு பாராட்டுவதும்
ஆதரவு தெரிவிப்பதில்
நான் முந்தி-நீ முந்தி என்று
போட்டி போடுவதும்
தமிழ்-முஸ்லிம் கட்சிகளது
திசை வழியாக மாறிவருகிறது.

தற்போதைய நிலையில்
தமிழ்-முஸ்லிம் மக்களுக்கு
நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறை
பாதகமான விசயமல்ல.

தமிழ்-முஸ்லிம் மக்களது
வாக்கு வங்கிகளை நிராகரித்துவிட்டு
எவரும் ஜனாதிபதியாக முடியாது.

ஆனால்-தமிழ்-முஸ்லிம் வாக்குகள்
பெருமளவு பெறாத நிலையிலும்
பாராளுமன்றம் மூலம்
ஆட்சியைப் பிடிக்க முடியும்.

பாராளுமன்றத்திற்குச் செல்ல
இனவாதம் ஒரு வசதியான
பிரசார வடிவமாக இருந்த
காலங்களை மறக்க முடியாது.

தற்போது-நிலமை மாறியிருக்கிறது.
எனினும்-இனப்பிரச்சனை தீராதவரை
தமிழ்-முஸ்லிம் மக்கள்
தமது நலன்களின் பக்கம் நின்றே
சிந்திக்க வேண்டியவர்களாகிறார்கள்.

இன்று-பிரதமர் சந்திரிக்காவையும்
ஜனாதிபதியாக இருக்கும் டி.பி.விஜேதுங்காவையும்
பற்றிய கணிப்பீடுகளை வைத்துக்கொண்டு
ஜனாதிபதி ஆட்சி முறையைப்பற்றிய
முடிவுக்கு வருதல் விவேகமா?

துரதிஷ்டவசமாக-
தேர்தல் வெற்றி தோல்விகளை
கருத்தில் கொண்டே
நம் நாட்டு அரசியல் இயங்கிவருகிறது.

இவ்வாறான ஒரு சூழலில்
ஆட்சியதிகாரத்தை தீர்மானிப்பதில்
தமிழ்-முஸ்லிம் மக்களது வாக்குகளும்
குறிப்பிட்ட பங்கினை வகிக்கின்ற
நிலைமை இருப்பதுதான்
இனப்பிரச்சனை தீர்ந்து
அரசியல் தீர்வு எட்டப்படும்வரை
உகந்ததாக இருக்கும் என்று
ஒரு கருத்து நிலவுகிறது.

எனவே-இது குறித்து சிந்தித்து
தெளிவான முடிவுக்கு வர
சிறுபான்மை இனங்களின் நலன்களில்
அக்கறையுடையவர்கள்
உடனே முன்வரவேண்டும்.


ஜனாதிபதி ஆட்சிமுறையை
மாற்றுவதா-வேண்டாமா என்பது
இருபெரும் சிங்கள அரசியல் கட்சிகளது
பிரச்சனை என்பது போல
கைகட்டி நின்று வேடிக்கை பாராது
வேண்டிய கருத்தைத் தேடி
வலியுறுத்த நம்மவர்கள் முன்வருவார்களாக.

□□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

# ஆன்மீகம்



## இச்சையடக்கம்

"பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள். நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்." (1 கொரி-9:25) அப்பவுல் சொல்லுகிறார்: இச்சையடக்கத்தோடே ஓடுங்கள் என்று. கிறிஸ்தவர்களாகிய நம்முடைய வாழ்க்கையில் மிகவும் கவனமாக கடைப்பிடிக்க வேண்டியதொன்றாகும்.

"இச்சையானது கர்ப்பந்தரித்து பாவத்தைப் பிறப்பிக்கும். பாவம் பூரணமாகும்போது மரணத்தைப் பிறப்பிக்கும்" (யாக்-1:14,15) அநேகர் தங்கள் எண்ணங்களை வீணாக அலையவிட்டு கெட்ட சிந்தைகளினூடாக பாவம் செய்கின்றார்கள். அவர்களுடைய இருதயம் எப்பொழுதும் பாவ இச்சை நிறைந்ததாகவே காணப்படும். (ரோமர்-1:26) இதனிமித்தம் தேவன் அவர்களை இழிவான இச்சை ரோகங்களுக்கு ஒப்புக்கொடுப்பார். ஆகையால் நாம் எப்பொழுதும் எங்கள் எண்ணங்களையும் செயல்களையும் தேவ நடத்துதலோடு அடக்கி சாத்தானின் தீய எண்ணங்களை மேற்கொள்ள வேண்டும். கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். (கலா 5:24) என்று வேதம் சொல்கிறது. ஆகையால் நாமும் பாவ சிந்தனைகளுக்கு, பாவமான அசுத்த எண்ணங்களுக்கு இடம்கொடுக்காது கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக மாம்சத்தின் கிரியைகளை முறியடிப்போமாக.

ஜெயமணி வில்சன்.

## புறம் கூறாதீர்கள்

ஒருமுறை அண்ணல் நபி(ஸல்) அவர்கள் தமது மிஃறாஜ் பயணத்தின்போது ஒரு கூட்டத்தினரைக் கண்டார்கள். ஆண்கள், பெண்கள் பலர் தங்களுடைய மார்பகங்களினால் தொங்கிக்கொண்டிருந்தார்கள். இவர்கள் யாரென ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்களிடம் வினவியபோது "இவர்கள் குத்தலாக பேசுபவர்கள், கோள் மூட்டுபவர்கள்" என பதிலளித்தார்கள்.

அல்லாஹ்வுத் தஆலாவும் தனது திருமறையில் 'ஸூறதுல் ஹுமஸா' எனும் ஆயத்தில் அருளியுள்ளான். "புறங்கூறி, குறைபேசித் திரியும் ஒவ்வொருவருக்கும் கேடுதான்" என கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளான்.

புறம் என்றால் என்ன? ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வினவியபோது "ஒருவர்க்கு பின்னால் அவருக்கு மனப்பொருத்தமில்லாத விடயத்தை கூறுவது" என பதிலளித்தார்கள். "அவ்விடயம் அவரிடம் உண்மையில் இருந்தாலுமா? என மீண்டும் வினவ, "அவ்விடயம் உண்மையில் இருக்கும்போதுதான் புறம் ஆகும்" இல்லாத ஒன்றை கூறுவது அவதூறு ஆகும்" என விடையளித்தார்கள்.

இவ்வாறான பல எச்சரிக்கைகள் குர்ஆன், ஹதீஸ் வாயிலாக வெளியிடப்பட்டுள்ளன. நாம் யாரைப்பற்றி புறம் கூறுகின்றோமோ, நாம் புரியும் நல்லமல்கள் அவர்கட்கே உரித்தாகிவிடுகின்றன. புறம்,கோள் போன்றவற்றால் ஏற்படும் பல்வேறு விபரீதங்களையும் நாமறிவோம். ஆகவே, நாம் இவைகளை தவிர்த்து நற்பிரஜைகளாக வாழ திடசங்கற்பம் பூணுவோமாக!

ஏ.டபிள்யூ-எம்.பௌஸ்-ஏறாவூர்-03.

## கவிதைப்போட்டி இல-67

வந்து குவிந்தவற்றில் வாகை சூடியதும்
வியக்கப்பட்டவற்றில் இடம்

### பரிசுக்குரிய கவிதை

**தேசியம்**

ஆயுதம் தேசிய சின்னம்;
அழுகை தேசிய கீதம்
அராஜகம் தேசிய தொழில்
அநாதைகள் எம்-
தேசத்தின் சொத்து!

சோ.செல்வி
குருமன்காடு-வவுனியா.

**அவலங்கள்**

அமைதித் துடிப்பு
தொலைந்துபோன
வாழ்க்கைப்
படகினிலே
அவலங்களை
சுமந்துகொண்டு,
தினம் தினம்
அழுகையை
அறுவடை
செய்யும்
ஆத்மாக்கள்.

ஆரையூர்
இதயம்.

### வியக்கப்பட்டவை

**விடியுமோ எங்கள் வாழ்வு**

மொழிபேச வழியின்றி
விழியில் வழியும் நீருடன்
விதிவிட்ட வழியால்
வீதிக்கு வந்தோம்
விடியுமோ எங்கள் வாழ்வு-இல்லை
முடியுமோ எங்கள் வாழ்க்கை.

ம.கிருசாந்தினி-ஆரைப்பற்றை.

**மனிதம்**

மண் புதைத்த
மனிதத்தை
எங்குபோய்
தேடுவது?

ஏ.எச்.எம்.மொஜூத்
ஹிஜ்ரபுரம்.

**பிரபஞ்சத்தில் இன்று**

கொடுங்கோல் ஆட்சியிலே
கொடுந்துயர் படர்ந்துவர
சஞ்சலத்தில் வாழும் வாழ்வு
சமரசத்தில் என்று தீரும்
போராட்டம் போதுமடா
போக்கிடமும் தொலைந்ததடா
கதறி அழும் நாங்களிங்கு
களரி வாழ்வில் மீள்வதெப்போ?

தெ.லோஜனா-கொழும்பு-15.

**ஓயட்டும்...!**

ஓயாத ஒப்பாரி
ஓலம் போக்க
ஓயட்டும்
துப்பாக்கி
உறுமல் சத்தம்!
தீராத பகையென்று
எங்கேயுண்டு?
தாராள மனதோடு
வாழும்போது!

ஏ.அஹ்மது ஜுனைது
ஏறாவூர்-06.



**படிப்பினைகள்**

போர்..
புலப்பெயர்வு...
சமாதானம்...
மீள்வருகை....
மீண்டும்...
தொடருமா இந்த
நச்சு வட்டம்...?

க.இலங்கேஸ்வரன்
வவுனியா.

**சேரவேண்டும் காலனுலகு**

பட்ட துன்பம் போதுமையா பாழுலகில்-ஏன்
விட்டு வைத்தீர் எம்முயிரை, வேண்டுமெனின்
சுட்டுத்தள்ளும் இந்நொடியில் துயர் நீங்கி-நாம்
கட்டுக்கோப்பாய் சேரவேண்டும் காலன் உலகு.

வா.கோகிலா-கலஹா.

## கவிதைப் போட்டி இல-70



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள்.

சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=.

அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 08.10.1994.

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 70
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

**சோகம்!**

காலங்காலமாய் கதறியழும் வாழ்வே
காசினியில் எமக்கென்று சொந்தம்!
கருணையற்ற போரரக்கன் கரம் வந்து
எம்வாழ்வு கௌவியே செல்லும்!
ஓரகத்தில் ஒன்றெனவே வாழ்ந்திருந்த
நாமிங்கே காத்திட்ட சொந்தம்!
ஒரு நொடியில் மிடி தழுவி உடைந்ததிங்கே
உருவானது அனைவருக்குள் சோகம்!

பசறையூர் மல்லிகா பத்மநாதன்.

**அரங்கேற்றம்**

துயர ரேகைகளின்
துரித அரங்கேற்றம்
அழுகையாய்-இங்கு
அலைபாய்ந்த போதும்
மனித நேயம்
மலராதவரை
மறையாது நம் கண்ணீர்

கோ.பத்மநாதன்
கொட்டகலை.

**புதிய ஜாதி**

நாங்கள் புதிய ஜாதி
இன,மத,நிற பேதங்களில்லா
'அகதி'யெனும் தனி ஜாதி.
போர்த் தேசமே எங்கள் தாயகம்
முகாம்களே எமது புகலிடம்
பசியும், நோயும் எமக்குச் சாசுவதம்
வேதனையும் சோதனையும்
எங்கள் தேசியச் சொத்து!

மதுரா யோகேந்திரன்
திருக்கோவில்.

**புகையான உறவு**

வேர் பிடித்த வேதனைகள்
விழி கசிய வைத்தது ஏன்?
போர் உதிர்த்த நெருப்பினிலே
புகையான உறவு கண்டோ?

புவனேஸ்வரி ஆறுமுகம்-பசறை.

**'ஓய் வெப்போ'**

ஓயாத கடலலை போலே
ஓயாதோ கண்ணீர்?
ஓயாத போரே!
ஓய் வெப்போ கொடுப்பாய்?
அபலைகளின் மரணத்திலா?

றோஸ்-பண்டாரவளை.

**மரண ஒப்பாரி**

போர்த் தேசம் விட்டு
புறப்பட
உயிர்ப்பிச்சை கேட்டு
ஒப்பாரி

ந.ரதீஸ்வரன்
தம்பிலுவில்-02.

**அகதி**

சுடாதே!
சுடாதே!
நாங்கள்
அகதிகள்!

கவிக்குயில்
ஆரையம்பதி.

## வாசகர்சாலை

ஆணிதரமாக அரசியல் செய்திகளையும் புதிய சினிமா செய்திகளை வாரம்தோறும் வாசகர்களுக்கு தருவதில் உன் மிஞ்சிட முடியாது தினமுரசே. உன் 60வது இதழுக்கு என் வாழ்த்துக்கள்!

ஏ.ஜே.எம்.பைஸர்-பீர்சாய்பு வீதி.

□□

அபிமான தினமுரசே! தித்திக்க வைக்கும் பல உடன் செய்திகளைச் சுடச்சுட அள்ளி வழங்குவதில் நீ வல்லவன் என்று பேசிக் கொள்கிறார்களே. இதை தொடர்ந்தும் மேற்கொள்ள வாழ்த்துவதோடு வாரம்தோறும் எக்ஸ்ரே ரிப்போர்ட், ரசிகனின் தொடர் சிறுகதை, அரசியல் அலசல், நடுப்பகுதி... யாவும் மனதார வாழ்த்த வேண்டியவைகளே. தொடர உன் பணி!

கிண்ணியா மொகம்மட் ஷமீர்
குறிஞ்சிக்கேணி-03.

□□

அன்பின் தினமுரசே,
சுவை மிகுந்த செய்திகளை அள்ளி வழங்கும் தினமுரசே (தேன் முரசே)
நீ கொண்டுவரும் அத்தனை அம்சங்களும் அருமையிலும் அருமை. ரசிகனின் கொலை விழும் நேரம், இலக்கிய நயம், சினிவிசிட், மற்றும் மகாபாரதம் அத்தனை அம்சங்களும் அருமை. உனக்கு எனது சின்ன முத்தங்கள்.

திருமலை-பாலதம்பு.

□□

என் இனிய பொன் முரசே!
பட்டதாரிகள் முதல் பாமரர்கள்வரை படித்து, இரசிக்கும் வகையில் உன்னில் நீ தாங்கி வரும் செய்திகள்தான் எத்தனை எத்தனை? உன்னைப் படித்து, சுவைத்தவர்கள், மெய்மறந்து விழிமூட மறந்து வியப்பில் விண்ணை நோக்குமளவு எத்தனை 'மாய சக்தியை' நீ கொண்டுள்ளாய்? நானும் உன் அபிமான வாசகி என்பதில் பெருமையடைகிறேன். உன் பணி என்றும் இனிதே தொடர

பல்லாயிரக்கணக்கான முரசு வாசகர்கள்சார்பில் நான் என் இதயபூர்வமான வாழ்த்துக்களை சமர்ப்பணம் செய்கிறேன்!

எஸ்.தாஜுன் நிஸா றஹ்மான்
பிலியந்தலை.



என் ஆருயிர் முரசே...
நீ சுமந்துவரும் கொலை விழும் நேரம், பாப்பா முரசு, எக்ஸ்ரே ரிப்போர்ட், மருத்துவ விந்தைகள் என்பன என்னை உனக்கு அர்ப்பணித்துவிட்டன. உன்னையும் என்னையும் இனி யாராலும் பிரிக்க முடியாது முரசே.

பி.சி.குமார்-மாலிபொட.

□□

அன்பின் தினமுரசே!
வாரம் ஒருமுறை உன்னை நோக்கி வழிநோக்கும் எங்கள் மனதிற்கு இதமான அம்சங்களை தட்டிக்கொடுக்கும் நீ, உன் வண்ண இதழ்களை விரித்து உண்மை நிகழ்வினை எண்ணற்ற வாசகர்முன் வைக்கிறாய். உனதுசேவை மேலோங்க என் இனிய வாழ்த்துக்கள்.

இரா.யோகேஸ்வரன்-நமுனுகுல.

□□

அன்பின் தினமுரசே,
நீ சுமந்துவரும் ஆக்கங்கள் அனைத்தும் வெகு பிரமாதம். ரசிகனின் கொலை விழும் நேரம் விறுவிறுப்பாக உள்ளது. ஹரீரா அனஸின் இராணுவ வீரனும் அவனது காதலியும் சிறுகதை என் மனதை உருக வைத்தது. ஹரீரா அனஸிற்கு எனது பாராட்டுக்கள். உன்னில் என்றுமே குறைகாண முடியாது. உன் ஆக்கங்கள் அனைத்துமே வாசகர்களை கவர்ந்தது. உன் சேவை மென்மேலும் தொடர என் மனப்பூர்வமான நல்வாழ்த்துக்கள் என்றும் முரசிற்கு உண்டு.

செல்வி.எஸ்.விஜி-நவகம்புர.

□□

என் இதயம் கவர்ந்த முரசே! நீ ஒவ்வொரு வாரமும் தாங்கிவரும் அம்சங்களை பார்த்து நானும் எனது நண்பர்களும் பிரமிப்பு அடைகின்றோம். தேன் கிண்ணம், இலக்கிய நயம், பாப்பா முரசு என்பன என் இதயம் கவர்ந்தன. முரசே இன்னும் உன் புகழ் பரவிட என் வாழ்த்துக்கள்.

டி.சிவகுமார்-காரைதீவு.

□□

அன்பின் முரசே,
வாரம் தோறும் நீ சுமந்துவரும் அற்புத அற்புதமான அரசியல் அலசல்கள், சிறுகதைகள், புதுமைச் செய்திகள், கவிதைகள் இவைகள் யாவும் இனிமையோ இனிமை.

செல்வி.ஆர்.யோகராணி-பதுளை.

□□

முரசே நீ வாழ்க. இன்பமூட்டும் இனிய செய்திகளை நீ எமக்குத் தருகின்றாய். அதில் மகாபாரதம் என் மனதை கவர்ந்துள்ளது. நீ இன்னும் சிறப்பு பெற என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

கிருபாகரன்-மத்துகம.

□□

முரசில் பிரசுரமாகும் கவிதைப் போட்டி பல்லாயிரக் கணக்கானவர்கள் மத்தியில் தனி மதிப்பைப் பெற்று வருவது யாவரும் நன்கறிந்த விடயமாகும்! இதுவரை மொத்தம் 67போட்டிகள் வலம்வந்து எம் சிந்தனைக்கு விருந்தாகிவிட்டன!

நான் வேண்டிக்கொள்வது என்னவென்றால்.., கவிதைப்போட்டி இல:100 பூர்த்தியானதன் பின்பு, இதுவரை பரிசு பெற்ற (அந்த 100) கவிதைகளை மாத்திரம் (சிறிய) படத்துடன் தொகுத்து ஒரு சஞ்சிகையாகவோ அல்லது தினமுரசுடன் கூடிய ஒரு சிறப்பிதழாகவோ எமக்கு வழங்க வேண்டும் என்பதுதான்..!

ஏனென்றால்,
பரிசுக்குரிய கவிதைகள் அனைத்துமே சூழலைப் பிரதிபலிப்பதாக இருக்கின்றன.

சியானி நளீர்-கண்டி.

# படைகளை திருப்திப்படுத்திய பதிலடி நடவடிக்கை

# "அரசிற்கு அழுத்தம் கொடுக்கவே போர் நிறுத்தக் கோரிக்கை"

### போர் நிறுத்தம் கிடையாது

அரசு-புலிகள் சமாதானப் பேச்சுக்கள் பற்றிய ஆரவாரங்கள் தற்போது சற்று ஓய்ந்துள்ளன.

மன்னார் கடலில் கடற் கரும்புலிகளின் தாக்குதலையடுத்து யுத்த நிறுத்தம் பற்றி அரசு பரிசீலனை செய்யக்கூடிய நிலைகூட இல்லாமல் போய்விட்டது.

எனவே- ஜனாதிபதித் தேர்தலின் முன்பாக யுத்த நிறுத்தம் ஏற்படுவது பற்றிய பேச்சுக்கே இடமில்லை என்று தெரிகிறது.

படையினர் மத்தியில் புலிகள் தொடர்பாக இருந்த சந்தேகங்களை மன்னார் தாக்குதல் மேலும் அதிகப்படுத்தியிருக்கும் என்று அரச வட்டாரங்கள் கருதியிருப்பதால் தற்போதைக்கு போர் நிறுத்தம் பற்றிய பேச்சை எடுப்பதற்கே அவை விரும்பவில்லை.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் திரு. அநுருத்த ரத்வத்த பாதுகாப்பு படை முகாம்களுக்கு சென்று படையினரோடு பேசி, புலிகளுடனான பேச்சு முயற்சிகளுக்கு அவர்களது ஆதரவையும் கோரிவந்த நிலையில் மன்னார் கடற்தாக்குதல் இடம்பெற்றது.

இதனால் திரு.அநுருத்த ரத்வத்த அதிர்ச்சியடைந்ததோடு, படையினருக்கு அரசாங்கத்தின்மீது அதிருப்தி ஏற்படாத வகையில் பதிலடி நடவடிக்கை ஒன்றுக்கு முன்வந்ததாகக் கூறப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை- 25.09.94 அன்று அச்சுவேலிப் பகுதியில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை பிரதி பாதுகாப்பு அமைச்சரின் ஆசீர்வாதத்துடனேயே மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது.

### 4 புலிகள் பலி

டாங்கிகள், கவச வாகனங்கள், ஹெலிகள், பொம்பர்கள் உதவியோடு இராணுவத்தினர் முன்னேறிச் சென்றபோது பலத்த மோதல் ஏற்பட்டது.

புலிகள் தரப்பில் 30 பேரும் தமது தரப்பில் இரண்டுபேரும் பலியானதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. முன்னேறிச் சென்ற இராணுவத்தினர் நான்கு கிலோமீட்டர் தூரத்தை தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

ஆனால் புலிகள் இராணுவத்தின் கூற்றை மறுத்துள்ளனர்.

தமது தரப்பில் நான்குபேர் மட்டுமே கொல்லப்பட்டதாகவும், தமது தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் படையினர் பின்வாங்கிச் சென்றுள்ளனர் என்று புலிகள் யாழ்ப்பாணத்தில் கூறியுள்ளனர்.

### நம்பிக்கை வீழ்ச்சி

இதேவேளை அச்சுவேலி இராணுவ நடவடிக்கையின் பின்னர் யாழ் மக்கள் மத்தியில் கடந்த ஒருமாதகாலமாக நிலவிய சமாதான நம்பிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது.

அச்சுவேலி இராணுவ நடவடிக்கை பற்றி செய்தி வெளியிட்டுள்ள யாழ் குடாநாட்டு பத்திரிகைகளின் செய்திகளின்படி தாக்குதலில், பொதுமக்கள் ஆறுபேர் பலியாகியுள்ளனர். 35 பேர் படுகாயமடைந்துள்ளனர். 30 வீடுகள் அச்சுவேலிப் பகுதியில் சேதமாக்கப்பட்டுள்ளன.

ஆவரங்கால் சிவன்கோவில் மீதும் 'ஹெலி'த்தாக்குதல் இடம்பெற்றதாகவும், கோவில் சேதமடைந்ததாகவும் 'உதயன்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சிவன் கோவிலுக்குள் தஞ்சமடைந்த பொதுமக்களில் 20 பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### சந்திரிக்கா நிராகரிப்பு

அச்சுவேலித் தாக்குதலை அடுத்து கருத்து வெளியிட்டுள்ள 'ஈழநாடு' பத்திரிகை பிரதமர் சந்திரிக்கா போர் நிறுத்த கோரிக்கையை நிராகரித்துவிட்டதாக குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை அச்சுவேலித் தாக்குதலையும், அதன் விளைவுகளையும் சுட்டிக்காட்டி பிரசாரம் செய்துவரும் புலிகள் அமைப்பினர் வடக்கு-கிழக்கில் முப்படைத் தாக்குதல்கள் தொடர்கின்றன.

புலிகள்மீதும், பொதுமக்கள்மீதும் படை நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. சிறிலங்கா பிரதமருக்கு போர் நிறுத்த அவசியம் பற்றிக் கடிதம் மூலம் கூறப்பட்டபோதும் தாக்குதல்கள் நிறுத்தப்படவில்லை என்று 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது.

### இந்தியாவும் அங்கீகரிக்க வேண்டும்

புலிகள் அமைப்பின் அரசியல் ஆலோசகர் திரு.அன்ரன் பாலசிங்கம் வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டி ஒன்றில் "புலிகளின் சிவில் நிர்வாக முறையை இந்தியா உட்பட சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும். தமிழீழத்துக்கு மாற்றுத் திட்டம் இருந்தால் பரிசீலிக்கத் தயார். ஆனால் இதன் அர்த்தம் எமது மக்களது சுய நிர்ணய உரிமையை விட்டுக்கொடுப்பதல்ல", என்று தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்த கோரிக்கையானது அரசாங்கத்திற்கு அழுத்தத்தை கொடுத்துள்ளது என்றும் திரு.பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

### அழுத்தம் என்ன?

தாக்குதலை தொடர்வது- அதன்மூலம் புதிய அரசாங்கத்தை தர்ம சங்கடநிலைக்கு உள்ளாக்குவது.

படையினர் மத்தியில் போர் நிறுத்தத்திற்கு ஆதரவில்லாத நிலை இருப்பதால் அரசாங்கத்திற்கு மெல்லவும் முடியாத விழுங்கவும் முடியாத நிலை ஏற்படும்.

போர் நிறுத்தம் ஒன்றை அரசு உடனடியாக மேற்கொள்ள முடியாத நிலை இருப்பதால், போர் நிறுத்தம் அவசியம் என்பதை புலிகள் தொடர்ந்து வற்புறுத்துவர். அரசு போர் நிறுத்தத்திற்கு தயார் இல்லை என்பதால் சமாதான சூழல் ஏற்பட அரசே தடை என்று புலிகள் கூறமுடியும்.

மறுபுறம் நீண்டகாலப் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களிடம் போர் நிறுத்தக் கோரிக்கையை முன்வைக்கும் புலிகளுக்கு அனுதாபம் ஏற்படும்.

அதே சமயம் படையினரின் நடவடிக்கைகளால் பொது மக்கள் பாதிக்கப்படும்போது புலிகள் பதிலடி நடவடிக்கையில் ஈடுபடுவர். தொடர்ந்து படையினர் பொதுமக்களை தாக்கும்போதும், இராணுவ நடவடிக்கைகளில் பொதுமக்களும், அவர்களது உடமைகளும் பாதிப்படையும்போதும் புதிய அரசாங்கம் மீது இருக்கும் நம்பிக்கை இயல்பாகவே குறையத் தொடங்கும்.

இவ்வாறான ஒரு நிலையை உருவாக்கவே புலிகள் விரும்புவார்கள் என்று தெரிகிறது.

"போர் நிறுத்தக் கோரிக்கை அரசிற்கு அழுத்தம் கொடுத்திருப்பதாக" திரு. பாலசிங்கம் தெரிவித்துள்ள கருத்தும் அதனையே வெளிப்படுத்துகிறது.

### பிரதமருக்குத் தெரியாதா?

இதேவேளை அச்சுவேலி இராணுவ நடவடிக்கை பற்றி பிரதமருக்கு தெரிந்திருக்கவில்லை.

தற்போது இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள அவர் விரும்பியிருக்கமாட்டார் என்றும் அரசாங்க கட்சி வட்டாரங்களில் பேசப்படுகிறது. இதில் எந்தளவு உண்மை இருக்கக்கூடும் என்று தெரியவில்லை.

### பிரதிநிதிகள் டம்மிகள்

புலிகளோடு முதற்கட்ட பேச்சை நடத்த அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ள பிரதிநிதிகள் பற்றி நம்பிக்கையீனங்கள் நிலவுகின்றன.

திரு.லயனல் பெர்னான்டோ தவிர ஏனையோர் மக்களால் அறியப்படாதவர்கள்.

முதல்கட்ட பேச்சில் புனர்நிர்மாண பிரச்சனைகள் பற்றியே பேசப்படும் என்பதால் அரசியல்வாதிகள் அல்லாதோர் நியமிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

ஆனால், புனர்நிர்மாணப் பணிகள் பற்றி பேசுவதாக இருந்தாலும் புலிகளின் நிர்வாகத்தின் கீழ் புனர்நிர்மாணப் பணிகள் மேற்கொள்ள அரசாங்கம் முன்வருமா என்று தெரியவில்லை.

தமது நிர்வாக முறையை அங்கீகரிக்க வேண்டும் என்று கோரும் புலிகள் புனர்நிர்மாணப் பணிகளும் தமது நிர்வாக முறையின்கீழ் நடைபெறுவதையே அனுமதிப்பர்.

அதே சமயம் தொடர்ந்து படைகள்-புலிகள் மோதல்கள் இடம்பெறுமானால் வடக்குக்கு மின்சாரம் வழங்கும் திட்டமும் பின்தள்ளப்படும் எனவும் தெரிகிறது.

### ஜனாதிபதித் தேர்தல்

எப்படியோ ஜனாதிபதித் தேர்தல், முடிவடையும்வரை புனர்நிர்மாணப் பணிகளோ, போர் நிறுத்த முயற்சிகளோ, பாதைத் திறப்போ சாத்தியமில்லை என்றே கருதப்படுகிறது.

வேண்டுமானால் அவை பற்றிய பரபரப்பான பேச்சுக்கள்- செய்திகள் அடிபட்டுக்கொண்டிருக்கலாம்.

## புலிகளுக்கு பொலிஸ் அதிகாரி எச்சரிக்கை

(சுவிஸ் நிருபர்)

சுவிட்ஸர்லாந்தில் உள்ள அகதிகள் திணைக்கள உயரதிகாரி புலிகள் அமைப்பின் நிதி சேகரிப்பு நடவடிக்கைகள் குறித்து கண்டித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் சுவிஸின் சகல நகரங்களிலும் தமிழ் மக்களிடம் வற்புறுத்தியும், கட்டாயப்படுத்தியும் நிதி சேகரித்துவருவதாக சுவிஸ் அகதிகள் திணைக்கள பிரதம அதிகாரி ஊர்ஷ் செடெக்கர் பத்திரிகைகள், வானொலி மற்றும் தொலைக்காட்சி செய்திகள் மூலம் அறிவித்துள்ளார்.

சுவிஸ் நகரான சூரிச்சின் ஐந்தாவது வலயப் பகுதியை மையமாக வைத்து புலிகள் அமைப்பினர் இயங்கிவருவதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

பொலிஸ் அதிகாரியான பீட்டர் லேமன் இதுபற்றிக் கூறும்போது சுவிசில் தமிழ் மக்களிடம் நிதி சேகரிப்பு தொடர்பாக கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சுவிசில் தமது இயக்கம் கட்டாயப்படுத்தி நிதிவாங்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதாக வெளியாகும் தகவல்கள் பொய்யானவை என்று சுவிசிலுள்ள புலிகள் அமைப்பு பிரதிநிதி தெரிவித்திருக்கிறார்.

## அரசியல்வாதிகளின் ஆசை

அரச பத்திரிகை நிறுவனம் ஒன்றில் புகுந்து கொள்ள அரசியல்வாதிகள் சிலர் ஒற்றைக்காலில் நிற்பதாக தெரிகிறது.

வாரத்தில் குறைந்தது மூன்று நாட்களாவது அறிக்கை விடுபவர் என்று அவரது கட்சியினராலேயே கேலி செய்யப்படும் கிழக்கு மாகாண அரசியல்வாதியொருவர் இணை ஆசிரியர் பதவிக்கு ஆசைப்படுவதாக அறியப்படுகிறது.

சம்பந்தப்பட்ட துறை பிரதி அமைச்சர் காதிலும் தமது ஆசையை மேற்படி அரசியலாளர்கள் போட்டுவைத்துள்ளார்களாம்.

இதே சமயம், கடந்த அரசாங்க காலத்தில் இருந்த அமைச்சர்களுக்கு படு விசுவாசமாக இருந்த சிலர் தற்போது தலைகீழாக மாறி நிற்கிறார்களாம். புதியவர்கள் சிலரை தமது உறவினர்கள் என்னுமளவுக்கு சென்றுள்ளார்களாம். எனினும் புதியவர்களுக்கு இவர்கள் பற்றி தெரிந்தேயிருக்கிறதாம். எல்லாம் ஒரு பொது நோக்கமாக்கும்.

## புறக்கணிக்கப்படும் மட்டக்களப்பு மாவட்டமும்! பாதிக்கப்பட்டோர் ஆசிரிய நியமனமும்!!

## 5 வருடங்களாக ஏமாறும் விண்ணப்பதாரிகள்

(ஏறாவூர் நிருபர்)

பயங்கரவாத செயற்பாட்டினால் கொல்லப்பட்டோர் குடும்பங்களில் தங்கியிருப்போருக்கு பயிலுநர் ஆசிரிய நியமனம் வழங்குதல் என்ற 1989.07.13ம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் உறவினர்களை இழந்து மேற்படி ஆசிரிய நியமனத்திற்கு விண்ணப்பித்த சுமார் 290பேர் கடந்த 5 வருடங்களாக தமக்கு நியமனம் கிடைக்கும் என எதிர்பார்த்து ஏமாந்துபோய் இருக்கிறார்கள்.

மட்டக்களப்பு கல்வித் திணைக்களம் இதுவிடயமாக கடந்த 5 வருடங்களில் 3 தடவைகள் இவ் விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து தெரிவுகள் இடம்பெற்று அப்பெயர்ப் பட்டியல் கல்வி அமைச்சுக்கும், மாகாணக் கல்வி அமைச்சுக்கும் ஏற்கனவே அனுப்பப்பட்டிருந்தது. எனினும் நியமனம்தான் இன்னமும் வழங்கப்படவில்லை.

இதே வர்த்தமானி அறிவித்தலுக்கமைய ஏனைய மாவட்டங்களில் பாதிக்கப்பட்டோருக்கான ஆசிரிய நியமனங்கள் முன்னரே வழங்கப்பட்டுவிட்டதாகவும் மட்டக்களப்பு மாவட்டமே புறக்கணிக்கப்பட்டிருப்பதாகவும் இந்த விண்ணப்பதாரிகள் வேதனையுடன் தினமுரசுக்குத் தெரிவிக்கின்றனர்.

இது விடயமாக மட்டக்களப்பில் இடம்பெற்ற ஜனாதிபதி இடம்பெயர் சேவைக்கும், கல்வி அமைச்சுக்கும், மாகாணக் கல்வி அமைச்சுக்கும், ஜனாதிபதிக்கும், மாவட்டப் பா.உ.ஆகியோருக்கும் இவ் விண்ணப்பதாரிகள் கூட்டாக பல வேண்டுகோள்களை விடுத்திருந்தும் எதுவித பலனும் கிட்டவில்லை.

மேற்படி நியமனத்திற்குத் தாங்கள் பொருத்தமானவர் என்பதை உறுதிப்படுத்த இவர்கள் பல்வேறு தஸ்தாவேஜுகளைப் பெறுவதற்காக கிராம சேவையாளர், பிரதேச செயலாளர், சமாதான நீதிவான், பிறப்பு இறப்புப் பதிவாளர், பாதுகாப்பு உயரதிகாரி, மற்றும் கல்வித்திணைக்கள அதிகாரி ஆகியோரிடம் மாதக்கணக்கில் அலைந்து திரிந்தே இந்த வகையான ஆவணங்களைப் பெற்றுச் சமர்ப்பித்தனர் என்பது தெரிந்ததே.

இது விடயமாக புதிய அரசாவது பாதிக்கப்பட்டோருக்கான ஆசிரிய நியமனத்தை வழங்கி பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு விமோசனம் பெற்றுத்தராதா என ஏமாந்து போயுள்ள விண்ணப்பதாரிகள் கண்ணீருடன் காத்திருக்கிறார்கள். ■

## காகித விலை இறங்கலாம்!

சமய விவகாரம், கலாசார அலுவல்கள் அமைச்சு, அச்சடிக்க உதவும் காகிதங்களின் விலையில் கணிசமான அளவு குறைப்பதற்கு கருதுவதாகத் தெரிகிறது. எழுத்தாளர்களுக்கு ஊக்கமளிக்கவும் புத்தகங்களின் விலைகளைக் குறைக்கவும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவிருப்பதாக பிரதி அமைச்சர் வீ.ஏ.சுரவீர தெரிவித்தார்.

சுங்கவரித் தீர்விலிருந்து காகிதத்துக்கு விலக்களிப்பதன் மூலமாகவோ, வெளியீட்டாளர்களுக்கு காகிதம் வழங்கும்போது விலை குறைப்பதன் மூலமாகவோ வெளியீடுகளின் விலைகளைக் கணிசமாகக் குறைக்க முடியும் என்று அமைச்சர் சொன்னார்.

## "இந்தியா கொள்கையை மாற்றவேண்டும்"

## திலீபன் நினைவு தினத்தில் புலிப் பிரமுகர்

விடுதலைப் புலிகள் இயக்க முக்கிய உறுப்பினரான திலீபனின் ஏழாவது நினைவு தினம் 26.09.94 அன்று யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

அரச அலுவலகங்கள் மூடப்பட வேண்டும் என்று புலிகள் அறிவித்தனர். கடைகளும் மூடப்பட்டிருந்தன.

யாழ்-கோட்டைப் பகுதியில் அஞ்சலித் தோரணங்கள் காணப்பட்டன.

திலீபனின் மூன்றாவது நினைவு தினமான (26.09.90)இல் யாழ் கோட்டையை தாம் கைப்பற்றியதாகவும், யாழ் கோட்டை அழிக்கப்படவேண்டும் என்பதில் திலீபன் ஆவலாக இருந்தார் என்றும் புலிகள் யாழ்ப்பாணத்தில் வெளியிட்ட அஞ்சலி செய்தியில் தெரிவித்துள்ளனர்.

திலீபன் நினைவுநாள் கூட்டமொன்றில் புலிகளின் காவல்துறை பொறுப்பாளர் பா.நடேசன் உரையாற்றும்போது திலீபன் மரணம் இந்தியாவின் போலித்தனத்தை அம்பலப்படுத்தியுள்ளது.

திலீபனது மரணத்தோடு, இந்தியாமீது தமிழீழ மக்கள் வைத்திருந்த நம்பிக்கை சிதறுண்டது என்று கூறினார்.

மேலும் பா.நடேசன் தமதுரையில், "இந்திய அரசு தனது வெளிநாட்டுக் கொள்கையை மாற்றிக்கொள்ளவேண்டும். தமிழர் போராட்டத்தில் தலையிடாமல் தமிழீழத்தை அங்கீகரிக்க வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

பா.நடேசனின் உரையை புலிகளின் குரல் வானொலியும், புலிகளது ஈழநாதம் தினசரியும் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டன.

திலீபன் நினைவாக யாழ்ப்பாணத்திலும் வன்னிமாவட்டத்திலும் பல்வேறு நினைவு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பெருந்திரளான மக்கள் பங்கேற்றனர்.

## கால்நடை பாதுகாப்பு-புலிகள் உதவி

வடபகுதியில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் கால்நடைகளை பாதுகாத்து பராமரிக்க புலிகள் அமைப்பின் தமிழீழ பொருளாதார மேம்பாட்டு நிறுவனம் உதவி வருகிறது.

கால்நடைகளுக்கு தேவையான தடுப்பூசிகளும் வழங்கப்படுகின்றன.

இதுவரை பதினோராயிரம் கோழிகளுக்கு யாழ் குடாநாட்டில் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. கடந்த மாதம் இந்த நடவடிக்கை ஆரம்பமானது.

மாடுகளுக்கு தொண்டை அடைப்பான் நோய்வராமலும் தடுப்பூசிகள் போடப்படுகின்றன.

நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு கடனுதவி வழங்குவதிலும் த.பொ. மேம்பாட்டு நிறுவனம் ஈடுபட்டுவருகிறது.

## குற்றமில்லாத ஒட்டுக்கேட்டல்

தக்க காரணங்களைக்காட்டி பாதுகாப்பு அமைச்சு, தொலைத்தொடர்பு அமைச்சின் அனுமதி பெற்று தொலைபேசி ஒட்டுக்கேட்பது சட்டத்துக்குட்பட்டதாகும்.

அண்மையில் அவ்வாறு பெறப்பட்ட அனுமதியுடன் ஓரிலக்கம் சுழற்றப்பட்டது. அவ்விலக்கத்தில் பதிலிறுத்தவர் திரு.ஏ.ஜே. ரணசிங்க அவர்களே! ஆனால் அழைப்பு விடுத்தவர் திரு.ரணசிங்கவின் குரலைக் கேட்டதும் மறுவார்த்தை இன்றி தொலைபேசியை வைத்துவிட்டாராம். திரு.ரணசிங்க ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிட உத்தேசித்துள்ளாராம்.

## தமிழ்- முஸ்லிம் சமூகங்கள் மத்தியில் மீண்டும் அச்சநிலை

## கடத்தல் சம்பவங்கள் அதிகரிப்பு!

(ஏறாவூர் நிருபர்)

ஓட்டமாவடி, ஏறாவூர் பகுதி வாசிகளில் விறகு வெட்டி வரச்செல்லும் ஏழைத் தொழிலாளிகள் வண்டில் மாடுகள் வெலிகந்தை, கடவத்தைமடு பகுதிகளில் புலிகளால் கடத்திச் சென்று தடுத்து வைக்கப்பட்டு பணயப் பணம் பெறப்பட்டபின் விடுவிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விதம் கடத்திச் செல்லப்பட்டுள்ள மாட்டு வண்டில்களும், தொழிலாளர்களும் ஒருவர் தலா ரூபா 5,000/= பணயப் பணம் புலிகளுக்குச் செலுத்தியபின் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விதம் சுமார் 20 மாட்டு வண்டில்களும், தொழிலாளர்களும் தலா ரூபா 5,000/= செலுத்தித் தம்மை விடுவித்துக் கொண்டுள்ளனர்.

மேலும் பத்திற்கு மேற்பட்ட வண்டில் மாடுகள் இன்னமும் பணயப் பணம் செலுத்தப்படாததால் புலிகள் தடுத்து வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இவை ஏறாவூர் வாசிகளுக்குச் சொந்தமானவையாகும்.

இத்தகைய நடவடிக்கைகள் தமிழ் பேசும் சமூகங்கள் மத்தியில் மீண்டும் அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளன.

தமிழ்-முஸ்லிம் சமூக ஒற்றுமையை கிழக்கில் ஏற்படுத்த ஆர்வம் கொண்டோரும் இவ்வாறான சம்பவங்களால் வேதனைப்படுகின்றனர்.

அரசியல் தலைவர்களும் இதுபற்றிக் கவனித்ததாகவோ கவலைப்பட்டதாகவோ தெரியவில்லை.

## மாட்டுவண்டியில் புலிகள்

திருகோணமலையில் மாட்டுவண்டியில் சென்று புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளார்கள்.

21.09.94 அன்று திருகோணமலை பள்ளிக்குடியிருப்பில் படையினர்மீது புலிகள் தாக்குதல் நடத்தினார்கள். படையினர் மூவர் பலியானதாகவும், ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் செய்தி வெளியிட்டுள்ள புலிகள், மாட்டு வண்டியில் சென்றே தாக்குதலில் ஈடுபட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# பலம் குறைந்த எதிரணி

## உறுப்பினர்கள் சிலரது நிலைப்பாடு கேள்விக்குறி!

(கண்டி நிருபர்)

மத்திய மாகாண சபையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களுள் எண்மர் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 21ம் திகதி கொண்டுவரப்பட்ட மத்திய மாகாண சபை முதலமைச்சர் மீதான நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பாக அதனை எதிர்த்து நின்றதால் எழுந்த சர்ச்சைமீது இந்த எண்மரின் நிலை என்னவாகும் என்பதே இப்பொழுது கேள்வி.

இந்த எண்மர் குழுவில் திரு.ஆர். தங்கவேல், திரு.எ.கதிரேஷன், திரு.என். கந்தையா, திரு.எல்.வெள்ளையன், திரு. எஸ்.ரெங்கநாதன், திரு.எ.விமலவன், திரு.எல்.அருள்சாமி, திரு.எம்.நடராஜா, ஆகியோர் இடம்பெறுகின்றனர். இ.தொ.கா. தலைமைப்பீடம் இந்தத் தீர்மானம் தொடர்பாக எடுத்த நடவடிக்கைமீது அன்று ம.மா.சபை உறுப்பினரானவரும் இன்று பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவருமான திரு.காமினி திசாநாயக்காவின் பக்கமே இருந்து நம்பிக்கையில்லா பிரேரணையை ஆதரித்ததாலேயே பிரஸ்தாப எட்டுப் பேரும் இதற்கு எதிராக நின்று செயல்பட்டனர். இ.தொ.கா.தலைமைப்பீடம் இந்த எண்மர் தொடர்பாக அவர்களை இற்றைவரை ஓரக்கண் பார்வையோடு சகல சருமங்களிலும் அனுசரிக்கின்றது. இது இவ்வாறிருக்க எண்மர்களில் தீவிரமாக இருந்து செயல்படும் திரு.ஆர்.தங்கவேல் இ.தொ.காவின் வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டவர். ஆனால் அண்மையில் அங்குரார்ப் பணம் செய்து வைக்கப்பட்டதும் திரு. எம்.எஸ்.செல்லச்சாமியின் தலைமைத் துவத்தையும் கொண்டதுமான இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரசின் பொதுச் செயலாளராக இருந்து வருகிறார். இதே போன்று நுவரெலியா மாவட்ட உறுப்பினரான சட்டத்தரணி திரு.எஸ்.அருள்சாமி கடந்த பொதுத் தேர்தலில் பொ.ஜ.ஐ. முன்னணி சார்பில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டி யிட்டார். இதேபோன்று திரு.எஸ். ரெங்கநாதனும் திரு. செல்லச்சாமியின் தொழிற்சங்கத்தில் உபதலைவர்களுள் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் எண்மர் குழுவில் எஞ்சியிருக்கும் ஐவரும் மத்திய மாகாண சபையில் எதிர்காலத்தில் எத்தகைய நடைமுறையைப் பின்பற்றுவார்கள் என்பது புரியாத நிலையில் இருந்துவருகிறது. ஆனால் மாகாண சபையில் இ.தொ.கா சார்பில் இரு புதிய முகங்கள் இடம்பெற இருப்பதால் மொத்தமாக உள்ள 12 பேரில் இந்த எண்மர் நிலை இ.தொ.காவைப் பொறுத்தமட்டில் பிசுபிசுப்பாகவே இருக்கும் என்றும் நம்பப்படுகின்றது. ஐ.தே.கட்சியின் முன்னாள் தொழிற்சங்கவாதியும் முன்னாள் நுவரெலியா பிரதி மேயருமான திரு.வீ.புத்திரசிகாமணி திரு. காமினி திசாநாயக்காவின் அரசியல் சீடராக இருப்பதால் திரு.காமினியின் ஆதரவுடனேயே அண்மையில் ம.மா.சபையின் கைத்தொழில், கால்நடை அபிவிருத்தி உணவு, வர்த்தக, இந்து கலாசார, தமிழ் கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டார். மாகாண சபையில் அங்கம் வகித்த டி.யு. என்.எஃப். உறுப்பினர்களில் 9 பேரில் ஆறுபேர் ஆளும் கட்சியைச் சேர்ந்த ஆசனங்களுக்கு மாறியதால் ம.மா.சபையில் எதிரணியின் பலம் இப்பொழுது சிறிது குறைந்துவிட்டது. என்றாலும் இப்பொழுதுள்ள சூழ்நிலையில் ம.மா.சபையின் ஆட்சிப்பலம் முன்னிருந்ததை விடவும் பலமாக இருப்பதில் இ.தொ.காவுக்கு எதிராக இயங்கும் உறுப்பினர்களின் நிலைப்பாட்டிலேயே சந்தேகங்கள் இப்பொழுது ஏற்பட்டுள்ளதாக மாகாண சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## பாதிக்கப்பட்டுள்ள கல்வி நிலை!

## துர்ப்பாக்கிய மக்கள்!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு தென்புறத்தேயுள்ள இருநூறுவில், பாவற்கொடிச்சேனை, 8ம் கட்டை உன்னிச்சை ஆகிய ஊர்களைச் சேர்ந்த சுமார் 1200 மாணவர்களின் கல்வி நிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருநூறுவில் அ.த.க.பாடசாலையில் ஆண்டு 1-5 வரையான வகுப்புக்கள் உள்ளன. ஆனால் தமது பிள்ளைகள் பாடசாலைக்குப் போவதும் வருவதும்தான்; எதுவித முன்னேற்றங்களும் இல்லை; பாடசாலைக்கு ஆசிரியர்கள் காலை 11 மணிக்கு வந்து 12 மணிக்குப் போய் விடுவதாகப் பெற்றோர் தெரிவிக்கிறார்கள்.

பாவற்கொடிச் சேனை அ.த.க.பாடசாலையில் ஆண்டு 1-8 வரையான வகுப்புக்கள் உள்ளன. இரு ஆசிரியர்களே இங்குள்ளார்கள். இங்கும் மேலுள்ள பாடசாலை யின் நிலையேதான் காணப்படுகிறது.

8ம் கட்டை உன்னிச்சை அ.த.க.பாடசாலை கடந்த காலங்களில் சிறந்த முறையில் இயங்கிற்று. இந்நிலை அண்மைக் காலங்களின்போது முற்றாகவே பாதிக்கப்பட்டுள்ளது. இராஜதுரை நகர், கரவெட்டி ஆறு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மாணவர்களும் இப்பாடசாலைக்கு வந்தே கல்விகற்க வேண்டிய நிலையுள்ளது. எனினும் இப்பகுதிப் பாடசாலைகளில் காணப்படும் நிருவாகச் சீர்கேடு காரணமாக மாணவர்களனைவரும் தமது எதிர்காலத்தில் திக்கற்ற நிலைக்குள்ளாவார்கள் என்பது திண்ணம்.

இது விடயமாக மட்டக்களப்பு- இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மாவட்டக் கல்விப் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளது. எனினும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

## வடமேல் மாகாண சபையில் இந்து கலாசார அலு வலர் இல்லை

(குருணாகல் நிருபர்)

குருணாகல், புத்தளம் மாவட்டங்களை உள்ளடக்கிய வடமேல் மாகாண சபையில் இந்து கலாசார அலுவலர் இல்லாதது பெருங் குறையாக உள்ளது. இந்துக்கள் அதிகமாக வாழும் இம்மாகாணத்தில் தம் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அவர்கள் வேறு வழிகளை நாடவேண்டி உள்ளது.

கடந்த தேர்தல் காலத்தில் உடனடியாக இந்து கலாசார அலுவலர் நியமிக்கப்படுவார் என வாக்குறுதிகள் வழங்கப்பட்டபோதும் இன்னும் நியமிக்கப்படவில்லை.

விரைவில் இதற்கான ஒரு அலுவலர் நியமிக்கப்படவேண்டுமென இங்குவாழ் தமிழர்கள் எதிர்பார்க்கின்றனர். ■

## தமிழ்மீதென்ன கோபம்?

(திருமலை நிருபர்)

வடக்கு-கிழக்கு மாகாண அரசால் நடத்தப்பட்ட பிராந்திய சாகித்திய விழாவையொட்டி ஒழுங்குபடுத்தப்பட்ட நாடகப் பயிற்சிக்கூடத்தில் பங்குபற்றியோருக்கு வழங்கப்பட்ட சான்றிதழ்களில் தமிழ் மருந்துக்குக்கூட இடம்பெறாதது ஏன்? இவ்வாறு 'முரசு' நிருபரிடம் வந்து முறையிட்டார்கள் நாடகப் பயிற்சியில் பங்குபற்றியோர்.

தமிழ் மொழி அமுலாக்கல் சீராக இடம்பெறுவதில்லை என்று ஒரு புறம் நாம் முழங்கிக்கொண்டிருக்க, தமிழர்களுக்கு தமிழர்களாலேயே நடத்தப்படும் தமிழ் நாடகப் பயிற்சிச் சான்றிதழ்கள் ஆங்கிலத்திலேயே வழங்கப்படுகிறது என்றால் இந்த அடிமைப் புத்தியை யாரிடம் சொல்லி அழுவது? என்றும் அவர்கள் வினவினார்கள்.

ஜூலை 29 தொடக்கம் 31 வரை நடத்தப்பட்ட இப்பயிற்சிக்கான சான்றிதழில் வட-கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் திரு.எஸ்.பற்குணமும் கிழக்குப் பல்கலைக்கழக கலைத்துறைத் தலைவர் கலாநிதி.சி.மௌனகுருவும் கையெழுத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ●

### பொத்துவில் புகார்கள்

## தமிழ் வளர்த்தவர் தலை எங்கே?

பல வருடங்களுக்கும் மேலாக பொத்துவில், வட்டிவெளி வீதியில் அமைந்துள்ள முத்தமிழ் வித்தகர் விபுலாநந்தர் சிலையின் தலையைக் காணவில்லை. அத்துடன் இதன் சுற்று மதிலும் தூர்ந்துவிட்ட நிலையில் அதில் பொதுஜன முன்னணி தேர்தல்கால சுவரொட்டிகளையும் காண முடிகிறது. ஒரு தமிழ் வளர்த்த உத்தம புருஷனுக்கு ஏன் இந்த உதாசீனம்? இதனை தாபித்தவர்கள் தக்க நடவடிக்கை எடுத்து அதனை மீண்டும் புனரமைக்க மக்கள் சார்பாக தினமுரசு வாயிலாக வேண்டுகிறேன். ●

## மைதான நடுவில் மின் கம்பம்

பொத்துவில் மெதடிஸ்த தமிழ் மகா வித்தியாலய மைதான நடுவில் மின்கம்பம் நடப்பட்டு மின் வழங்கலும் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் மைதானம் வீதியாகவும் மாறிவிட்டது. இதனால் மைதானத்தில் விளையாடும் மாணவர்களுட்பட ஏனைய வீரர்களும் பல பிரச்சனைகளை எதிர்நோக்குவதால் பாடசாலை அதிபர் மற்றும் நலன் விரும்பிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நாடி மின்கம்பத்தை அங்கிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு தினமுரசு வாயிலாக வேண்டுகிறேன்.

க.முரளிதரன்-பொத்துவில்-03.

## ஜோசப்வாஸ்புரம் மக்கள் குறை தீருமா?

(குருணாகல் நிருபர்)

குருணாகல் மாவட்டத்தில் கல்கமுவை நகரை அண்மித்ததாக அமைந்துள்ளதும், நீண்ட வரலாற்றினையும் கொண்டதுமான தமிழ் கத்தோலிக்க மக்கள் வாழும் எழில்மிகு கிராமமே ஜோசப்வாஸ்புரம், குருணாகல் மாவட்டத்தில் உள்ள ஒரேயொரு தனித் தமிழ் கிராமமும் இதுவே.

இங்கு வாழ் மக்கள் கல்கமுவை நகருக்கு சென்றுவர பஸ் சேவை இல்லை. தார் போடப்பட்ட பாதை வசதிகள் இல்லை. கடினமான பாதை வழியே பயணம் செய்ய வேண்டிய நிலை. மிகப் பழைய கிராமமான இங்கு இதுவரை மின்சார வசதி இல்லை. இங்குள்ள தேவாலயத்திற்கும் மின்சாரம் இல்லை. அரசியல்வாதிகள் வாக்குறுதிகளை வழங்கினாலும், இதுவரை நிறைவேற்றப்பட்டதாக இல்லை. இக்கிராம மக்கள் குறை தீருமா? சம்பந்தப்பட்டவர்களும், வடமேல் மாகாண சபையும் இக்கிராம விடயத்தில் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். ■

## பிரதேச சபையில் தமிழ் தெரிந்தவர் பற்றாக்குறை!

(கண்டி நிருபர்)

அக்குறணைப் பிரதேச சபையில் தமிழில் கருமம் பார்க்கக்கூடியவர்கள் இல்லையென புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன. 70சத வீதமான முஸ்லிம்கள் வாழும் அக்குறணைப் பிரதேசத்தில் பிரதேச சபையில் அங்கம் வகிக்கும் 14 உறுப்பினர்களில் 9பேர் முஸ்லிம்கள். தமிழர் ஒருவர் இவர்கள் அனைவரும் தமிழ்பேசுபவர்கள். 4பேர் சிங்களவர்.

மாதாந்த கூட்டத்தின்போது உறுப்பினர்களின் உரைகள் தனிச் சிங்களத்திலேயே அடுத்த கூட்டத்தின்போது தட்டச்சுப் பிரதிகளாக வழங்கப்படுகின்றன. தமக்கு தமிழில் வழங்கப்படவேண்டுமென பலரும் விண்ணப்பித்தாலும் அவ்வாறு வழங்கப்படுவதில்லை எனவும், தாம் கேட்டால் உரையின் சுருக்கத்தை தமிழில் எழுதித் தருவதாகவும் இந்தச் சபையில் அங்கம் வகிக்கும் உறுப்பினரான ஜனாப் ஏ.எம்.எம். சிம்ஸான் முரசுக்குத் தெரிவித்தார். தமிழ் தட்டச்சு மூலம் இந்த உரைகள் ஹன்ஸார்ட்டாக தரவேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார்.

## கட்டிட வசதி கிடைக்குமா!

(புத்தளம் நிருபர்)

புத்தளம் மாவட்டத்தின் கொந்தாந்தீவுக்கு அருகாமையில் உள்ள கட்டைக்காடு என்னும் கிராமத்தில் உள்ள றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயத்தில் 800 மாணவ, மாணவிகள் கல்வி பயின்று வருகிறார்கள்.

ஆனால் இப்பாடசாலையில் 80 அடி நீளம் 20 அடி அகலம் கொண்ட இரண்டு கட்டிடம் மட்டுமே உள்ளன. இக் கட்டிடத்தில் 800 மாணவர்களுக்கு படிக்க முடியுமா? இப்பாடசாலையில் ஆண்டு-01 தொடக்கம் ஆண்டு-13வரை உண்டு.

கட்டிட வசதி இல்லாமையால் மாணவர்கள் மர நிழலிலும், தற்காலிகமான ஓலைக் கொட்டிகளிலும் பாடத்தை படித்து வருகிறார்கள். அதுமட்டுமா? இப்பாடசாலைக்கு தளபாட வசதி இல்லாமையும் ஒரு முக்கிய குறையாகும்.

ஆகவே இக்குறைகளை நிவர்த்தி செய்யும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தினமுரசு மூலமாகவும் மாணவர் ஆசிரியர்கள் சார்பாக வேண்டுகிறோம்.

## அக்குறணையில் பாதை வேலைகள் அரை குறையாய்...

(அக்குறணை நிருபர்)

அக்குறணையில் தேர்தல் காலங்களில் தடல் புடலாய் ஆரம்பித்த பாதை வேலைகள் அனைத்தும் முடக்கம் கண்டுள்ளன. அக்குறணை ஆறாம் கட்டையில் இருந்து புளுகொஹத்தன்ன எனுமிடத்திற்குச் செல்வதற்கென அமைக்கப்பட்ட குறுந்தூர பாலமொன்று இரு பக்க கட்டுக்கள் மாத்திரம் கட்டப்பட்ட நிலையில் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. கொந்தராத்துக்காரர்கள் ஒதுக்கப்பட்ட பணம் முடிவடைந்துள்ளது என கை விரிக்கின்றனர். சம்பந்தப்பட்ட விடயங்களுக்குப் பொறுப்பான பரிசோதக அதிகாரிகளின் கண்களிலும் இந்த அரைகுறை வேலைகள் மறைந்திருப்பது புதுமையே. ●


### விளம்பரப் பகுதி



**மலையாள மாந்திரீகம்**

27 வருடங்களாக மலையாள மாந்திரீக துறையில் நுணுக்கமாக நான் கற்றறிந்த வகையில் இக்காலங்களில் அவ்வப்போது அவரவர் குறைகளுக்கு என்ன பரிகாரம் என அச்சொட்டாக அவ்வேளைகளிலே மலையாள பகவதி வெளிச்ச வீடாக எனக்கு காட்டிக் கொடுக்கின்றது.

இதையொட்டியே வளர்ந்த எனது நிறுவனம் வரையறுக்கப்பட்ட கம்பனியாக மாறியது. அத்துடன் நவீன உலகத்துக்கு தகுந்தவாறு என்னிடம் மாந்திரீகம், ஜோதிடம், கைரேகை இவைகளுக்கான அதி அற்புத கம்பியூட்டர் உண்டு. உங்கள் குறை என்ன? காதல் தோல்வியா? கல்யாணம் நடக்கவில்லையா? நினைத்தது நினைத்தவாறு நடக்கவேண்டுமா? காதலுக்காக சாவா? வாழ்வா என நினைப்பதை விட்டு என்னை சந்திக்கலாமே.

இவ்வாண்டு மாந்திரீக சந்தியின் வெற்றி பெற்ற ஜபிதா இதோ?

இவ்வாண்டு மலையான மாந்திரீக காந்த சக்தியும் வெற்றியும்:

- நிறைவேறாத காதல் வசியம்- 100/97
- கடல் கடந்து செயல் புரியும் காதல் வசியம்- 100/97
- கணவன் மனைவி பிணக்கு- 100/45
- பெற்றோர் விரும்பாத காதல்-100/87
- குத்தகை குடியிருப்போர் பிரச்சனை-100/33
- தீரா ஆஸ்துமா நோய்- 100/100
- திருமணத் தங்குதடை நிவர்த்தி-100/97
- குடிபோதை நிவர்த்தி- 100/97
- கல்வி ஞான விருத்தி- 100/72
- சகல வியாபார விருத்தி- 100/83
- மீன்பிடி, பண்ணை, ஆடு,மாடு,கோழி வளர்ப்பு- 100/27
- புத்திர பாக்கியம்-100/33
- பிசாசு தோஷம், சூனிய நிவர்த்தி-100/97

கொழும்பில் மாதந்தோறும் மாதக் கடைசியில் 30,31 திகதிகளில் தான தர்மமும் துர்க்கை உச்சாட பூசை காலை 10 மணிமுதல் மாலை 6 மணிவரை நடைபெறும். அன்று நிச்சயம் உண்மை அறியலாம்.

| தலைமைப்பீடம் | கொழும்பு இல்லம்- |
|---|---|
| P.K.சாமி JDGAN<br>(மாந்திரீகச் சக்கரவர்த்தி)<br>சிறீ துர்க்காதேவி ஆலயம்<br>32, தினச்சந்தை காம்பிளக்ஸ்<br>நுவரெலியா. | இல: 162,<br>கொட்டாஞ்சேனை வீதி,<br>கொட்டாஞ்சேனை.<br>கொழும்பு-13. |
| தொலைபேசி: 052-2508,052-3039 | தொலைபேசி: 342463, 342464 |

**நவராத்திரி கொடி பொம்மைகள்!! 10% விசேஷ கழிவு**

நவராத்திரிக்கு வேண்டிய கொடிபொம்மைகள் அனைத்தும் தயாராகிவிட்டன. எமது விசேட விலை குறைப்பு விற்பனையில் பெற்றுக்கொள்ளுங்கள். உங்கள் அன்பிற்குரியவருக்கு நவராத்திரி பரிசா 'கொடி பொம்மை பரிசு செட்டை' (Gift Set) கொடுக்கலாம்.

| | |
|---|---|
| நளினி ஸ்டோர்ஸ்<br>70, செட்டியார் தெரு<br>கொழும்பு-11<br>தொலைபேசி: 435492 | NALINI STORES<br>No. 70, Sea Street,<br>COLOMBO-11<br>T.Phone: 435492 |

எமது விசேட நவராத்திரி கொடி பொம்மை காட்சியறை (Show Room) மற்றும் விற்பனை கூடத்திற்கு விஜயம் செய்யுங்கள்.

| | |
|---|---|
| நளினி பிக்சர் பெலஸ்<br>இல.102, செட்டியார் தெரு,<br>கொழும்பு-11<br>தொ.பேசி: 329065 | NALINI PICTURE PALACE<br>No.102, Sea Street,<br>Colombo-11<br>T.Phone: 329065 |

- மொத்த வியாபாரிகளுக்கு விஷேச கழிவு.
- எங்களிடம் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட கோவில்களுக்கு வேண்டிய விக்கிரகங்கள், திருவாச்சி, குடை, தீபவகைகள், பித்தளை மணி, தூய்மையான கவரிமான் முடியில் வெண்சாமரை முதலியவை,
- பரத நாட்டிய அணிகலன்கள்,
- என்றென்றும் உங்கள் எண்ணங்களில் மறவா வர்ணப்படங்களை அழகிய முறையில் பல பாகங்களிலிருந்து தருவிக்கப்பட்ட பிரேம்களில் பிறேமிங் செய்து கொள்ள,
- சுவாமிப் படங்கள் பிரேம் செய்து கொள்ள
- எவர் சில்வர் பொருட்கள்
- அழகிய இளம்மாதர் அணிந்து மகிழ கவரிங்க அணிகலன்கள்.
- ஹொங்கொங்கிலிருந்து தருவிக்கப்பட்ட சிலைட், பேஸ்ட் வகைகள் மற்றும் லிப்ஸ்ரிக், கியூடெக்ஸ், பொட்டு, மஞ்சல் வகைகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!**

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

| | |
|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா 440/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் ரூபா 225/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் ரூபா 115/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

| | |
|---|---|
| தினமுரசு வாரமலர்<br>த.பெ.இல:1772<br>கொழும்பு | THINAMURASU VAARAMALAR<br>P.O.BOX: 1772<br>COLOMBO |

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

**வீடியோ படப்பிடிப்பில் முன்னணி நிறு வனம்**

**VICTOP RECORDING STUDIO**

**356, GALLE ROAD, WELLAWATTE, COLOMBO-6**

இல.358, J.T. Complex இல் வெகுவிரைவில் எமது நிறுவனத்தால் புதிய ஸ்ரூடியோ ஒன்று திறக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் எமது அன்பர்கள் வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம்.

அதுமட்டுமல்ல, மங்களகரமான நிகழ்ச்சிகளை சிறந்த வீடியோ கமராக்களில் பதிவுசெய்வதோடு, ஸ்டில் புகைப் படங்களையும் சிறந்த முறையில் எடுத்துத் தருவோம்.

மற்றும் மங்கள நிகழ்ச்சிகளுக்கு தேவையான அலங்காரப் பொருட்கள் (மேக்கப் செற்) வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

* T.V.—டெக் வாடகைக்கு
* 24 மணி நேரம் குளிரூட்டப்பட்ட எயர்போட்டிற்கான வான் சேவீஸ்.

உங்கள் மின்சார உபகரணங்கள் பழுதடைந்துவிட்டதா? 592453, 078 69749 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் இல்லத்தில் உங்கள் கண்முன் திருத்தித் தரப்படும்.

**பயிற்சி வகுப்புக்கள் புதிய பிரிவுகள் ஆரம்பம்**

கேக் வகைகள்
சிற்றுண்டிகள்
கறி சோறு வகைகள்
ஸ்டொக்கினட் பூக்கள்
(Stocking net Flowers)
சில்க் ரிபன் பூக்கள்
(Silk Ribbon Flowers)
ஒக்றோபர் 7ம் திகதிக்கு முன் நேரில் வந்து சந்திக்கவும்.

Niranjani Selvarajah
55, Vivekananda Hill
Kotahena, Colombo-13.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## நாரதர்

தம்மைப் பற்றிய அரசியல்- இராணுவ ரீதியிலான கணிப்புக்களையெல்லாம் பல தடவைகள் பொய்யாக்கியிருக்கிறார்கள் புலிகள்.

ஒரு மாத காலமோ, ஒரு வாரமோ புலிகள் பற்றி அடிபடுகின்ற செய்திகள், கணிப்புகள், வியாக்கியானங்கள் யாவற்றையும் புலிகளது ஒரு மணி நேரத் தாக்குதல் தலைகீழாக்கி விடுவதுண்டு.

இம்முறையும் அப்படித்தான் நடந்திருக்கிறது.

நமது மதிப்பிற்குரிய விமர்சகர்கள் பலர் புலிகள் தமது போர்வீச்சை நிறுத்திவைத்துவிட்டதாக மூச்சுப் பிடித்துக் கூறிக்கொண்டிருந்தார்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக, பிரபா காட்டுக்குள் போய் தனது உறுப்பினர்களுக்கு பேச்சுச் சூழல் பற்றி எடுத்துக் கூறினார், சண்டை நடவடிக்கைகளை நிறுத்த உத்தரவிட்டார் என்றெல்லாம் ஒரு செய்தி நிறுவனம் கூறியது.

அரசின் வெகுஜனத் தொடர்பு சாதனங்களும் அச் செய்தியை முக்கியம் கொடுத்து வெளுத்து வாங்கியிருந்தன.

புலிகள் என்றால் காட்டுக்குள்தான் இருப்பார்கள் என்பது மாதிரியான ஒரு மனநிலைதான் நமது ஜனாதிபதி முதல் செய்தியாளர்கள் சிலர்வரை காணப்படுகிறது.

அதனால்தான் பிரபாவை காட்டுக்கு அனுப்பிவைத்து கதை எழுதுகிறார்கள்- செய்தி போடுகிறார்கள்.

புலிகளது பிரதான முகாம்கள் காட்டுக்குள் இருக்கவேண்டிய சூழல் தற்போது இல்லை.

சூழல் கூட தெரியாதளவுக்கு காதில் விழும் எதனையும் செய்தியாக்கிவிடுவதுயொரு அதிர்ச்சிதரும் செய்தி கிடைக்கும் என்று பிரதமரோ, பிரதி பாதுகாப்பு அமைச்சரோ நம்பியிருக்கவில்லை.

முதல் வாரம் அரசின் நல்லெண்ணத்தை வரவேற்று கடிதம் அனுப்பிய பிரபாகரன், மறுவாரம் அரசின் கடற்படையை தாக்க கரும்புலிகளை அனுப்பிவைப்பார் என்று எதிர்பார்ப்பது சற்றுச் சிரமம்தான்.

அதே சமயம், பிரசார ஆரவாரங்கள் 'எல்லாம் நன்றாகவே இருக்கின்றன' என்று காட்டிக்கொண்டாலும்கூட கடற்படையினர் வடபகுதிக் கடலில் தாக்குதல்களை நடத்தியே வந்தனர்.

கடற்படையினரின் தாக்குதல் பற்றிப் புலிகள் யாழ்ப்பாணத்தில் வெளியிட்ட செய்திகளும் முரசில் வெளிவந்திருந்தன.

கடற்படையினர் மட்டுமல்ல, இராணுவத்தினரும் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை கிழக்கில் மேற்கொண்டனர்.

முல்லைத்தீவில் விமானத்தாக்குதல், ஷெல்லடி போன்றவையும் இடம்பெற்றன.

புதிய அரசாங்கம் பதவி ஏற்ற பின் நடந்த படைகள்- புலிகளின் மோதல் பற்றிய செய்திகள் சர்வ சாதாரண நிகழ்வுகளாக ஒரு ஓரத்தில் தள்ளப்பட்டன.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை படைகள்-புலிகள் மோதல் பற்றி அலட்சியமா இருக்கலாம்.

ஆனால், தனது உறுப்பினர்கள் பலியாவது குறித்து பிரபா கண்டும் காணாமல் இருக்க முடியாது. அப்படி இருந்தால் அவரது 'வீரத் தலைவர்' இமேஜ் பறிபோய் விடும். உறுப்பினர்களை தன்னைச் சுற்றி விசுவாசத்தோடு வைத்திருக்க முடியாமல் போகும்.

கடைசிப் பொழுதை தலைவரோடு

எனவே-பிரபா தனது உறுப்பினர்கள் பலியாகட்டும் என்று பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அப்படியிருந்தால் அவர் தனது இடத்தை தக்கவைக்கவும் முடியாது.

எனவே-மன்னார் கடற்தாக்குதலில் போர் நிறுத்தத்திற்கு நிர்ப்பந்தப்படுத்தும் தந்திரம் உள்ளடங்கியிருந்தாலும்கூட,

பதிலுக்கு பதில் என்னும் புலிகள் இயக்க தாக்குதல் மரபைப் பேணுகின்ற நிலைப்பாடும் இருக்கிறது.

"கடலில் எமது மக்களை தாக்கும் படையை அழிப்போம்" என்று உணர்ச்சியூட்டப்பட்டவர்கள்தான் தற்கொலைத் தாக்குதலுக்கு சென்றார்கள்.

"தமிழீழம் தாகம். தமிழீழ மக்களை காப்பது கடமை." என்பதுதான் தற்கொலைத் தாக்குதலுக்கான மனபலத்தை கொடுக்கும் உந்து சக்தி.

போர் நிறுத்தத்தைக் கோரும் தந்திரம் கருதி தம் உயிரை பலியிடும் உணர்ச்சி வேகம் ஏற்படமுடியாது.

போர் நிறுத்தம் கோரும் புலிகள், தமது பலவீனம் கருதி அதனைக் கோரவில்லை என்று காட்ட கடற்தாக்குதல் பயன்பட்டுள்ளதை மறுக்கமுடியாது.

போர் நிறுத்தம் இல்லாமல் பேசினால் இவ்வாறான வேறு தாக்குதல்கள் நிலமையை நெருக்கடிக்கு உள்ளாக்குமோ என்று அரச தரப்பு யோசிக்க வைத்திருப்பதும் உண்மைதான்.

தமது பலத்தை வெளிப்படுத்துவதும், அரசை அவ்வாறு யோசிக்க வைப்பதும் பிரபாகரனின் தாக்குதல் திட்ட நோக்கங்களில் ஒன்றாக இருந்திருக்கலாம்.

ஆனால், தற்கொலைத் தாக்குதலுக்கு சென்று, உயிரை விடப்

இந்த நம்பிக்கைதான் தனக்கு அடுத்த இடத்தில் இருந்த மாத்தையாவைக்கூட எதிர்ப்பில்லாமல் பிரபா சுலபமாக அகற்றவும் காரணமாக இருந்தது.

இந்த நம்பிக்கை என்பது புலிச் சவாரி மாதிரித்தான்.

ஏறி உசுப்பி விட்டாயிற்று.

புலி போய்க்கொண்டிருக்கிறது. சோர்விலோ, இனிப் போதும் என்றோ பிரபா இறங்க நினைத்தாலும் புலி நினைக்காது.

புலிச் சவாரியை நிறுத்திவிட்டு பிரபா சுலபமாக திரும்பிவர முடியாது என்பதே பிரபாவுக்குள்ள நெருக்கடி.

யாழ்-குடாநாட்டில் இப்போது மயானங்களே அதிகமாக இருக்கின்றன. பலியானவர்கள் யாவரும் இளம் வயதினர்- சிறுவர்கள்.

அது மட்டுமல்ல தற்போது புலிகள் அமைப்பில் ஆயுதம் தாங்கியுள்ளவர்களில் அதிகளவானவர்களும் சிறு வயதினர்தான்.

சாவு, மோதல், மயானம், பழிக்குப்பழி, தமிழர் தாயகம் தமிழீழம், தலைவர் பிரபாகரன் என்பவற்றைத் தவிர வேறு எதனையும் வெளியுலகில் அறியாத புதிய தலைமுறை ஆயுதம் வைத்திருக்கிறது.

ஆயுதத்தோடுதான் வாழ்க்கை. ஆயுதமில்லாத வாழ்க்கை பற்றி அந்த தலைமுறைக்கு கற்றுக்கொடுப்பது உடனடி சாத்தியமல்ல.

திடீரென்று போய் தலைவர் தமிழீழத்தை கைவிட்டு விட்டார் என்று அவர்களிடம் சொன்னால் நிலமை என்னாகும் என்பது வெளியே இருந்து எழுதும் விமர்சகர்களுக்கு தெரியாமல் இருக்கலாம்.

அமுதர் போன்ற தலைவர்களையே தூக்கிவீசிய இளம் இரத்தச் சூடான

கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இயங்கும் பொலிஸ், நீதிமன்றம், மற்றும் நிர்வாக அமைப்புக்கள் யாவும் துப்பாக்கிக் குழாய்களில் இருந்து பிறந்தவை. துப்பாக்கிகளால் பாதுகாக்கப்படுபவை.

ஆகவே- ஆயுதத்தை போடுவது என்பது சகல அதிகாரங்களையும் கைவிடுவதற்கு ஒப்பாகும்.

அதற்கு புலிகள் முன்வருவது நடக்கக்கூடியதா?

அப்படி நடக்கவேண்டுமானால் புலிகளது நிர்வாக அதிகார அமைப்புக்களை அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும்.

புதிய சட்டங்களை புலிகள் இயற்றியுள்ளார்கள்.

முன்னைய சில சட்டங்களை தூக்கி குப்பையில் போட்டும் இருக்கிறார்கள்.

அவற்றை அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும்.

புலிகளது காவல் துறையில் உள்ளவர்களை வடக்கு-கிழக்கு பொலிஸ் படையாக அறிவிக்கவேண்டும்.

உதாரணமாகச் சொல்வதானால், தற்போது தமிழீழ காவல்துறை பொறுப்பாளராக உள்ள நடேசனை குறைந்த பட்சம் வட பிராந்திய பொலிஸ் மா அதிபராகவேனும் நியமிக்க வேண்டியிருக்கும்.

சமீபத்தில் வெளிநாட்டு செய்தியாளர்களுக்கு யாழ்ப்பாணத்தில் வைத்து பேட்டியளித்த புலிகளது ஆலோசகர் திரு-அன்ரன் பாலசிங்கம் மேற்கண்ட அர்த்தத்தில்தான் பேட்டியளித்துள்ளார்.

"புலிகளது நிர்வாக வடிவங்களை இலங்கை-இந்திய அரசுகள் அங்கீகரிக்க

# ஆயுதம்+அதிகாரம்

## பிடியை விடுவார்களா புலிகள்?



### எக்ஸ்ரே ரிப்போர்ட்

இலாபகரமான தொழிலாகியும் வருகிறது.

ஆனால், நம் நாட்டு வெகுஜன தொடர்பு சாதனங்களும் அவற்றை மறுபிரசுரம் செய்வதுதான் வேடிக்கை.

அரசும்-புலிகளும் ஒருவரை ஒருவர் எவ்வளவு தூரம் நம்புகிறார்கள் என்பதெல்லாம் ஒரு புறமிருக்க,

அரசும்-புலிகளும் அன்னியோன்யம் ஆகிவிட்டது மாதிரி பிரசாரம் செய்வதைத் தவிர வேறு பணியில்லை என்பது மாதிரி அரச வெகுஜன தொடர்பு சாதனங்கள் நடந்துகொள்வதுதான் சுவாரசியம்.

ஆனால், மன்னார் கடலில் ஏற்பட்ட அதிர்வோடு அரச பிரசார சாதனங்களும் சற்று ஆடித்தான் போயின.

பாரிய தாக்குதல் ஒன்றை அரசுகூட புலிகளிடம் இருந்து எதிர்பார்க்கவில்லை.

பிரபாவின் கடிதம் ஆராயப்படுகிறது என்று சொல்லி, கடிதத்தின் விபரத்தைக்கூட வெளியிடாமல் புதிர் போட்டுக்கொண்டிருந்த அரசாங்கத்திற்கு மன்னார் கடல் அதிரடி செமர்த்தியான அதிர்ச்சிதான்.

மறுநாள் பாராளுமன்ற கூட்டம். குறித்த நேரத்திற்குக் கூட பிரதமர் வரமுடியாத அளவுக்கு படை அதிகாரிகளோடு கடல் அடியைப் பற்றி தீவிரமாக விவாதித்து யோசிக்கவேண்டி ஏற்பட்டது.

அரசாங்கம் புலிகளை முழுதாக நம்பிவிடவில்லை.

ஆனாலும் புலிகளிடமிருந்து இப்படி கழித்து-புகைப்படமெடுத்துவிட்டு தற்கொலை தாக்குதலுக்கு செல்லும் புலிகள் பற்றிய செய்திகளை இப்போதுதான் சிங்கள மக்கள் அறிகிறார்கள்.

ஆனால்-இது மிகப் பழைய செய்தி. புலிகளது முதலாவது தற்கொலைப் போராளி முதல் இன்றுவரை பலியான தற்கொலைப் போராளிவரை பிரபாவோடு சாப்பிட்டு, பிரபாவோடு புகைப்படம் எடுத்த பின்னரே தாக்குதலுக்கு சென்றனர்.

ராஜீவைக் கொன்ற தனுகூட படமெடுத்திருக்கலாம். அது பத்திரமான படமாக இருக்கும்.

"நீங்கள் முன்னே செல்லுங்கள்- நான் பின்னே வருவேன்" என்று பிரபா சொல்லியனுப்புவது வழக்கம்.

பூநகரி 'தவளைத் தாக்குதல்' பற்றிய வீடியோ படத்தில் பிரபா அவ்வாறுதான் கெரில்லாக்களுக்கு கூறி விடைகொடுக்கிறார்.

தலைவர் உத்தரவுக்கு கட்டுப்பட்டு முன்னாலே செல்லும் அர்ப்பணிப்புள்ள- கட்டுக்கோப்புள்ள உறுப்பினர்களை உருவாக்குவது சுலபமான விசயமல்ல.

இயக்கங்களுக்கு ஆட்சேர்ப்பது சுலபம்.

ஆனால், இயக்கத்திற்காக எதையும் செய்யத் துணியும், இயக்க விசுவாசம், தலைமை விசுவாசம் கொண்ட உறுப்பினர்களை உருவாக்குவது கடினம்.

பிரபாகரன் அதில் வெற்றி பெற்றுள்ளமை விவாதத்திற்கு அப்பாற்பட்டது.

போவதை முன் கூட்டியே தெரிந்துகொண்டு, புன்முறுவலோடு சென்ற புலி உறுப்பினர்கள் தமது உயிரை தந்திரம் கருதி அர்ப்பணிக்கவில்லை.

போர் நிறுத்தத்திற்கு அல்ல, 'போரிலே வென்று தமிழீழம் காணும்' நாள்வரும் என்ற நம்பிக்கையோடு அதற்கு தமது தலைவர் வழிகாணுவார் என்ற நம்பிக்கையோடு அவர்கள் உயிரை விட்டுள்ளார்கள்.

இதுதான் புலிகள் அமைப்பின் உள் நிலவரம்.

சூழலுக்கு ஏற்ப தலைவர் சில வேளைகளில் பேச்சுவார்த்தை பற்றிப் பேசுவார். அது சமாதானத்திற்கு புலிகள் எதிரிகள் அல்ல என்று நிரூபிப்பதற்காகத்தான்.

ஆனால்-"தமிழீழமே ஒரே தீர்வு. முடிந்த முடிவு." என்பதை தலைவர் ஒரு நாளும் மறவார்.

"மாற்றுத் திட்டம் இருந்தால் பரிசீலிப்போம்" என்று தலைவர் கூறினாலும், தமிழீழத்துக்கு குறைந்த மாற்றுத்திட்டம் எல்லாவற்றையும் அவர் நிராகரிப்பார்.

இப்படித்தான் ஒவ்வொரு புலிகள் இயக்க உறுப்பினரும் தமது தலைவர் பிரபாவைப் பற்றிய நம்பிக்கையோடு வளர்ந்திருக்கிறார்கள். வளர்க்கப்பட்டுள்ளார்கள்.

இந்த நம்பிக்கைதான் புலிகள் பற்றி உலகம் வியப்பதற்கான ஆதார சக்தி.

பருவத்தை கடந்து வந்த பிரபாகரனுக்கு தெரியாமல் போகாது.

ஒரு வகையில் சொல்வதானால் பிரபா தானே உருவாக்கிய நச்சு வட்டத்திற்குள் இருந்து வெளியே வருவது சுலபமான காரியமல்ல.

மேலும்-பிரபாகரன்கூட அரசாங்கத்தை முழுதாக நம்பிவிடக்கூடியவருமல்ல.

எனவே- பேச்சுவார்த்தை பற்றி பேசுவதில் உள்ள சுலபம் மாதிரி பேச்சுவார்த்தையில் பேசித்தீர்க்க வேண்டிய விடயங்கள் சுலபமாக இருக்காது.

ஆயுதத்தை புலிகள் கைவிடச் சொல்வதுதான் அரச தரப்பின் முதல் முயற்சியாக இருக்கும்.

ஆனால்-ஆயுதம் என்பது புலிகளைப் பொறுத்தவரை வெறுமனே தற்காப்பு சம்பந்தப்பட்ட விசயமல்ல.

ஏனைய இயக்கங்கள் ஆயுதங்களை கீழே வைக்கத் தயார் என்று சொல்லலாம். செய்யவும் முயலலாம்.

அந்த அமைப்புத் தலைவர்களது பாதுகாப்பை அரசு உத்தரவாதம் செய்தால் போதுமானது. அடுத்த நிமிடமே பெரும்பாலும் ஆயுதங்களை கொடுத்துவிடுவார்கள்.

ஆனால், புலிகளைப் பொறுத்தவரையில் ஆயுதம் தற்காப்பு சம்பந்தப்பட்டது மட்டுமல்ல. அதிகாரம் சம்பந்தப்பட்டதாகவும் இருக்கிறது.

தற்போது வடக்கே புலிகளது

வேண்டும்" என்று அவர் சொல்லியுள்ளார்.

அவற்றையெல்லாம் அரசாங்கமோ, பிரதமரோ அங்கீகரிப்பதாக ஒரு வாதத்திற்கு வைத்துக்கொண்டால் தென்னிலங்கையில் நிலமை என்னாகும்?

'சந்திரிக்கா புலிகளிடம் நாட்டைப் பிரித்துக்கொடுத்துவிட்டார்' என்ற பிரசாரம் வெகு சுலபமாக பஞ்சில் பற்றிய நெருப்பாக பரவும். அது ஆட்சிக்கே ஆபத்தாக முடியும்.

பூநகரியில் உள்ள இராணுவ முகாமை அகற்றுவதே அரசை நெருக்கடிக்கு உள்ளாக்கும் என்று பிரதமர் சந்திரிக்கா யோசிக்கவேண்டியிருக்கிறது.

இந்த நிலையில் புலிகளது நிர்வாக வடிவங்களை ஏற்பதோ, அவற்றின் கரங்களில் சிவில் நிர்வாகத்தை வடக்கு-கிழக்கில் ஒப்படைப்பதோ நினைத்தும் பார்க்க முடியாத ஒன்று.

மறுபுறத்தில், மிகுந்த ஆரவாரமாக தமிழீழ நீதி, நிர்வாகம், அதிகாரம் என்று உருவாக்கப்பட்ட அமைப்புக்களை புலிகள் கலைத்துவிடுவது சாதாரணமாக நடக்கக் கூடியதல்ல.

அப்படிச் செய்தால் அது புலிகள் தம்மையே தாம் கேலி செய்வதைப்போலவே அமையும்.

புலிகளது நிர்வாக அமைப்புக்கள் வழங்கியுள்ள தீர்ப்புக்கள், நடைமுறைகள் யாவும் தலைகீழாக மாறுவதை புலிகள் எப்படி அனுமதிக்கப் போகிறார்கள்?

(தொடர்ச்சி மறுபக்கம்)



திருவானமலையில் நகரத்தின் செயலர் நல்லாத்தான் மாட்டுப்பட்டுப் போனாராம். கையை இதம்பதமாத்தான் நீட்டிப் போட்டார். விசயம் விரைவிலை நாறப்போகுதாம்.

வரப்போகும் தேர்தலிலை போட்டி மிட்டும் ஒரு குழு ரெண்டு பக்கத்தாலையும் நல்லா வாங்கிச் சேர்க்கிற ஐடியாவிலை இருக்கிறதா பரவலாய் பேசுகினம். வாக்குகளை உடைச்சு விடுறதுக்கு கைமாறா ஏதாவது பார்த்துத் தாருங்கோ எண்டு கேட்பினமாக்கும். இல்லாட்டி பெரிய 'பைவ் ஸ்டார்' ஹோட்டலிலை ரிப்போர்ட்டர்மாரைக் கூப்பிட்டு குளிரவைக்க ஏது காசு? சரியான கேள்விதான்.

"எதிர்வரும் தேர்தலிலை போட்டி போடுற நோக்கம் இருக்குதோ?" இந்தக் கேள்வியைப் போய் குமாரரிடம் கேட்டிருக்கினம். ஏற்கனவே செலவை எண்ணி வாக்கு வரவை ஒப்பிட்டுப் பார்த்து உடைஞ்சு போயிருக்கிற மனுசனுக்கு விசர் வருமோ வராதோ. வரும்தானே? என்ன பதில் சொன்னவராம் தெரியுமோ? "உந்த விசர் கூத்திலை நான் இறங்கமாட்டன்." இந்த அறிவு ஒரு இரண்டு மூண்டு மாசத்துக்கு முந்தியே வந்திருந்தா எவளவு நல்லா இருந்திருக்கும்?

தமிழ் இயக்க முக்கியஸ்தர் ஒருத்தர் மட்டக்களப்பு பக்கம் சுடப்பட்டவரல்லோ. அந்த இயக்கம் தமிழில் விட்ட கண்டனங்களிலை ரெண்டு எழுத்தாரைப் பற்றி மூச்சே விடேல்லையாம். ஆங்கிலப் பேப்பருக்கு மட்டும்தான் ரெண்டு எழுத்தார் பற்றி கண்டிச்சு அறிக்கை கொடுத்தவையாம். அதைத்தான் முரசும் எடுத்துப் போட்டதாம். முந்தி கூட்டான கட்சியை என்ன கிழி கிழிச்சவை. அமுதர் கொலையாளிகளை கண்டிக்க துப்பில்லை எண்டு துள்ளினவை. இப்ப பார்த்தியளோ தாங்களே வாலைச் சுருட்டிக் கொண்டிருக்கினம்.

வடக்கு-கிழக்கு சபை செயலர் தோதான அதிகாரக் கோணம் பார்த்து பக்கம் மாறுகிறவர். பெரிய பொறுப்பிலை இருக்கிறவைக்கு மூன்று ஆசையையும் தீர்த்து வைக்க விநியோக வேலையும் செய்கிறவர். இப்ப தமிழ் பத்திரிகை ஒண்டிலை முந்தித் தான் 'சல்யூட்' போட்ட ஆக்களை கிழிச்சுப் பலதும் பத்தும் எழுதுகிறாராம். விரைவில இவர் 'கோணம்' வெளிவர வேண்டிய இடத்திலை வெளிவருமாம். கணேசா-என்-நாதர் உனக்கேன் வம்பு? அதிகாரிக்கு ஏனய்யா அரசியல்?

## அதிரடி அய்யாத்துரை

ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலை ஜால்ரா சத்தம் கொஞ்சம் அதிகமாகத்தான் கேட்குது பாருங்கோ. மறைந்த தலைவர் ஒருவரின் நினைவு நாளுக்கு தமிழிலை 'கொமண்ட்' கொடுத்தவர் ஏறக்குறைய அரசியல் கூட்டம் ஒண்டு நடத்திப் போட்டார். மதியான பிரசாரமோ?

தரமான தமிழ் பேசும் அறிவிப்பாளர்கள் இருந்தும் சிலர் கண்டு கொள்ளுற மாதிரித் தெரியேல்லை. உப்பிடித்தான் தொலைக்காட்சியிலை கிரிக்கெட் 'கொமண்ரி'யிலை அரவிந்த டி.சில்வா பந்தைப் பிடிக்க, தமிழிலை கொமண்ரி சொன்னவர் "மாகாநாம அழகாக பிடித்துவிட்டார்" எண்டு சொல்லித் தொலைத்தவர் பாருங்கோ. அவர் வேறை சோலி ஏதாவது பார்த்துக்கொண்டிருந்தாரோ தெரியேல்லை. தமிழுக்கு கிடைக்கிறதே 'அவுட்டாகும்' நேரம்தான். அதையும் சரியா பயன்படுத்தாட்டி எப்பிடி? சகல விசயத்திலையும் இதைக் கவனிக்க வேணும்.

திங்கமானவர் செய்துள்ள முதல்பணி தனது ஆதரவாளர் ஒருவருக்கு மதுக்கடை வியாபார அனுமதி வாங்கிக்கொடுத்திருக்கிறதுதானாம். திருவானமலையிலை விசயமறிஞ்ச சிலர் முகம் சுளிக்கினமாம்.

யாழ்ப்பாணத்திலை ரெண்டு எழுத்தார் பாஸ் முறையை நீக்கிப்போட்டினம் எண்டு ஒரு வதந்திச் செய்தி பரவினது. உடனே கொழும்பிலை இருக்கிற யாழ்பகுதி ஆட்கள் தங்கடை சொந்த பந்தம் வரப்போகுதெண்டு வழிமேல் விழிவைச்சு காத்திருந்தவையாம். கடைசியாப் பார்த்தா தளர்த்தவும் இல்லை. கழட்டவும் இல்லை. பாஸ் முறை இல்லையெண்டா எல்லாச் சனமும் பாஸாகியீடும் எண்டு ரெண்டு எழுத்தாருக்கு தெரியும்தானே. நல்லாத்தான் தளர்த்துவினம் போங்கோ!

உடலை வருத்தி பக்தியையோ பாசத்தையோ காட்டக்கூடாது. அது வெளி வேசமாவும் மாறிப்போடும். நெஞ்சை உருக்கினால் போதும். இதுதான் ஆழ்வார்களின் பொலிசி. இதோ பூதத்தாழ்வார் பாடல் ஒன்டு.

"அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா-நன்புருகி
ஞானச் சுடர்விளக்கு ஏற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்"

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# கடற் புலிகள் ஒரு கண்ணோட்டம்



இலங்கையில் ஆயுதம் ஏந்திப் போராட ஆரம்பித்த சகல தமிழ் அமைப்புக்களுக்கும் கடற்போக்குவரத்துப்பாதை முக்கியமானதாகவே இருந்து வந்திருக்கிறது.

இயக்கத் தலைவர்கள் மற்றும் முக்கியமான உறுப்பினர்களை ஆயுதப் படையினரும், பொலிசாரும் தேடி வலை விரித்தபோது, கடற்போக்குவரத்து கைகொடுத்தது.

தமிழகத்தில் போய் தரையிறங்கிய போராளிகளை தமிழக மக்கள் தழுவி வரவேற்றனர்.

கடலும், தமிழகமும் இல்லையென்றால் தமிழ் இயக்கங்களின் தலைவர்களில் பலர் எப்போதோ அரச படைகளிடம் சிக்கியிருப்பார்கள். பிரபாகரனும் அதில் அடக்கம்தான்.

## கண்ணிவெடி முதல் கரும்புலிகள் வரை



29.8.93- கிளாலிக் கடலில் கடற்படைப் படகை மோதிய கரும்புலி மதன் புறப்படும் முன்னர் பிரபாவோடு எடுத்த புகைப்படம்.

ஆரம்பத்தில் தமிழ் இயக்கங்களிடம் கடற்போக்குவரத்து வசதிகள் எதுவுமே இருக்கவில்லை. படகுகளும் கிடையாது.

யாழ்ப்பாணத்திலிருந்து கடத்தல் தொழிலில் ஈடுபட்டவர்களது உதவியோடு அவர்களது படகுகளில் போராளிகளும் தமிழ்நாட்டுக்குத் தப்பிச்சென்றனர்.

காலப்போக்கில் வங்கிக்கொள்ளைகள் போன்ற நடவடிக்கைகள் மூலம் கிடைத்த நிதிமூலமாக படகுகள், சக்திவாய்ந்த இயந்திரங்கள் என்பவற்றுடன் இயக்கங்களும் தமது சொந்த கடற்போக்குவரத்தை ஆரம்பித்தன.

ஆரம்பத்தில் இலங்கைக் கடற்படையினரும் நவீன படகுகளையோ உத்திகளையோ கொண்டிருக்கவில்லை. அதனால் திறமைமிக்க படகோட்டிகளையும், சக்திவாய்ந்த எஞ்சின்களையும் நம்பியே கடற்போக்குவரத்தில் இயக்கங்கள் ஈடுபட்டன.

கடற்படையினர் துரத்தினால் அதிவேகத்தில் லாவகமாக தப்பிச் செல்லும் படகோட்டிகளுக்கு கடத்தல் வட்டாரங்களில் நல்ல மரியாதையோடு அதிக சம்பளமும் கிடைத்து வந்தது.

அப்படியான திறமையான 'ஓட்டிகள்' சிலர் பின்னர் இயக்கங்களில் இணைந்து கொண்டனர்.

கடற்போக்குவரத்தைப் பொறுத்தவரை ஆரம்பத்தில் இருந்தே ஏனைய இயக்கங்களைவிட புலிகளுக்கே அதிக சாதகம் இருந்தது.

ரெலோ இயக்கத் தலைவர்களாக இருந்த குட்டிமணி, தங்கத்துரை ஆகியோர் வடமராட்சியை சேர்ந்தவர்கள். அதனால் அவர்கள் அடிக்கடி தமிழ்நாட்டுக்கு சென்றுவரவும், தலைமறைவாகவும் முடிந்தது.

குட்டிமணி-தங்கத்துரை ஆகியோர் கைது செய்யப்பட்ட பின்னர் பிரபாகரன் அணியினருக்கே அந்த வாய்ப்பு கூடுதலாக இருந்தது. காரணம் பிரபாவும் வடமராட்சியைச் சேர்ந்தவராகவே இருந்தார்.

எனினும் ஏனைய தமிழ் இயக்கங்களும் அதிநவீன இயந்திரப் படகுகளை கொண்டிருந்தன.

இந்தியப் பயிற்சியும், இந்திய அரசின் ஆயுதமும் கிடைத்தபின் தமது போக்குவரத்துப் படகுகளில் தற்காப்பு ஆயுதங்களை இயக்கங்கள் பொருத்தத் தொடங்கின.

ஆனாலும், கடற்படையினர் நவீன ரக ஆயுதங்களையும், நவீன ரோந்துக் கப்பல் வசதிகளையும், பெற்றுக்கொண்டதால் அவற்றோடு மோதும் பலம் இயக்கங்களிடம் காணப்படவில்லை.

பல படகுகள் கடற்படையால் தாக்கப்பட்டன.

முக்கியமான உறுப்பினர்கள் பலரை இயக்கங்கள் பலவும் கடலில் பறிகொடுத்தன.

இயக்கங்களின் பிளாஸ்ரிக் படகுகளில் அடுக்கிவைக்கப்பட்டிருக்கும் 'டீசல்கான்களில்' கடற்படையினர் ஏவும் குண்டுகள்பட, படகு பற்றி எரியும். படகில் இருப்பவர்கள் கடலில் குதித்து தப்ப முயல்வர். சிலர் கடற்படையினரால் வளைத்து பிடிக்கப்படுவர்.

பிளாஸ்ரிக் படகுகளில் உள்ள மோட்டார் இயந்திரங்களது அதிகூடிய ஒலியை வைத்தே படகுகள் எந்த வழியில் செல்லுகின்றன என்று மோப்பம் பிடிக்கும் நவீன கருவிகளும் கடற்படை வசம் இருக்கின்றன.

இதனால், கடற்படைக் கப்பல்களை கண்டவுடன், சக்திவாய்ந்த இயந்திரங்களை நிறுத்திவிட்டு, நவீன கருவிகளின் காதில் விழுந்து மோப்பம் பிடிக்க முடியாத சக்தி குறைந்த மோட்டார் இயந்திர உதவியோடு கடற்படை கப்பல் நிற்கும் பகுதியைக் கடப்பதும் உண்டு.

எப்படியோ 1991ம் ஆண்டின் பிற்பகுதிவரை கடற்படையோடு மோதும் அணிவரிசை ஒன்றை புலிகள் உட்பட எந்தவொரு அமைப்பும் உருவாக்கவில்லை.

1991ம் ஆண்டின் பிற்பகுதியில் புலிகள் அமைப்பினரால் 'கடற்புலிகள்' என்னும் அமைப்பு புலிகள் இயக்கத்தில் ஒரு முக்கிய பிரிவாக அறிவிக்கப்பட்டது.

வடமராட்சியைச் சேர்ந்தவரும் பிரபாவின் நம்பிக்கைக்கு உரியவருமான சூசை என்பவர் கடற்புலிகளது தளபதியாக நியமிக்கப்பட்டார்.

புலிகள் இயக்கத் தலைவர் பிரபா கடற்புலிகளது வளர்ச்சியில் தீவிர கவனம் செலுத்தினார்.

பெண் உறுப்பினர்களும் கடற்புலிகள் அமைப்பிற்கு திரட்டப்பட்டனர்.

கடலில் வைத்து தாக்குதல் நடத்தும் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.

'கடல்கண்ணி' வெடிகளை புதைத்து கடற்படைக்கு இழப்புக்களை உருவாக்கும் தாக்குதல் முறையில்தான் கடற்புலிகளது நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

கண்ணி வெடியில் ஆரம்பித்து கரும்புலிகள் தாக்குதல்வரை புலிகளின் கடற்புலிகளின் நடவடிக்கைகள் விரிவடைந்துள்ளன.

இவ்வாறு கடற்புலிகள் ஒரு பிரதான சக்தியாக வளருவதற்கு கடல் வலயத் தடைச் சட்டமும் ஒரு முக்கிய காரணமாக இருந்தது.

யாழ் குடாநாட்டை சுற்றிவளைத்து புலிகளை அந்த முற்றுகைக்குள் இருந்து மீள முடியாமல் படையினர் வியூகம் வகுக்க வேண்டுமானால் கடலில் கவனம் செலுத்த வேண்டும்.

கடல் வழியாக முற்றுகையை உடைத்து புலிகள் வெளியேறிச் செல்லும் சாத்தியத்தை தடுக்க வேண்டும்.

இதன் அடிப்படையில் யாழ் குடா நாட்டில் பூநகரியில் முகாம் அமைத்த படையினர் புலிகளது தரைவழிப் போக்குவரத்தை தடுத்ததோடு கடல்வழிப் போக்குவரத்தை தடுக்கவும் கடல் ரோந்துகளை அதிகப்படுத்தினர்.



கடற்புலிகளின் படகு ஆயுதம் பொருத்தப்பட்ட நிலையில்! விளக்கம் கொடுப்பது சூசை.

கிளாலி கடல் பாதை வழியாக பொதுமக்களோடு சேர்ந்து புலிகளும் பயணம் செய்வதைத் தடுக்க நாகதேவன் துறையில் கடற்படையின் முகாம்களும் அமைக்கப்பட்டன.

கடல்வலயத் தடைச் சட்டமும் அமுலில் இருந்ததால் புலிகளது படகுகளை இனம்கண்டு தாக்குவதும் கடற்படைக்கு சுலபமாகவே இருந்தது.


எனவேதான்-குடாநாட்டு முற்றுகை எப்போது நிகழ்ந்தாலும் அதனை உடைத்துச் செல்லும் கடல்பரப்பை இழக்கக்கூடாது என்று பிரபா நினைத்தார்.

கடலில் புலிகளது பலம் உருவாக்கப்படுவதன் மூலம் ஒரு கல்லில் இரு மாங்காயும் கிடைக்கும்.

1. குடாநாட்டு முற்றுகையை உடைத்து தலைமை வெளியேறும் வாய்ப்பு.
2. ஏனைய பகுதிகளோடு தொடர்பு, விநியோகம் என்பவற்றை பேணிக்கொள்வது. குறிப்பாக தமிழ் நாட்டோடு விநியோகப்பாதையை பராமரிப்பது.

இந்த இரண்டு பிரதான கடமைகளும் புலிகள் இயக்க நலன்களோடு பின்னிப் பிணைந்தவை.

அதே சமயம், மீனவர்களை துன்புறுத்துவதை தடுப்பது, கடலில் பலியான உறுப்பினர்கள் நினைவாக பழிக்குப் பழி தீர்ப்பது, கடல்வளத்தை காப்பது போன்ற காரணங்கள் கூறப்பட்டும் தாக்குதல்கள் நடந்துவருகின்றன.



29.8.93 பருத்தித்துறையில் 'டோரா' படகு கரும்புலிகளால் தாக்கப்பட்டது. அதிலிருந்து எடுக்கப்பட்ட ஆயுதங்கள் பிரபாவின் பார்வையில்..

கிளாலிக் கடல் ஏரியில் பயணிகளது படகுகளுக்கு புலிகளது ஆயுதம் தாங்கிய படகுகள் பாதுகாப்பு கொடுக்கின்றன.

ஆயினும், கடற்படை திட்டமிட்டு வந்து தாக்குதல் தொடுத்தால் புலிகளது படகுகளால் பயணிகளை காப்பாற்ற முடியாது என்பதை பயணிகளே அறிந்துவைத்துப் பேசிக்கொள்கிறார்கள்.

'கரும்புலித் தாக்குதல்' போன்ற நடவடிக்கைகள், எதிர்பாராத நேரத்தில் அதிரடிகள் போன்றவையே கடற்புலிகளால் மேற்கொள்ளக்கூடியவையாகும்.

கடற்படையின் நவீனரக படகுகளை நேருக்கு நேர் எதிர்கொண்டு கடலில் சமர் புரிய புலிகளிடம் வசதி போதாது.

கடற்போரில் புலிகள் நம்பியிருக்கும் பிரதான ஆயுதங்கள் மூன்று. அவையாவன;

1. கடற்கண்ணி வெடிகள்
2. மனிதக் குண்டுகள்
3. கடற்படையின் பலவீனங்கள்.

இந்த மூன்று ஆயுதங்களும் கடற்படையை கலக்கியிருப்பது உண்மைதான்.


எந்த நவீனரகப் படகு என்றாலும்;

அதில், பொருத்தப்பட்டுள்ள ஆயுதங்கள் எத்தகைய சக்திவாய்ந்தவையாக இருந்தாலும் மோதிச் சாகவரும் தற்கொலை தாக்குதலை எதிர்கொள்வது கடினம்.

மனிதக் குண்டை தடுக்க வழி காணும்வரை நவீன படகுகள் இருந்தாலும் கடற்படையினர் நிம்மதியாக ரோந்தில் ஈடுபடமுடியாது.

மீனவர்களை தாக்கியும், வள்ளங்களை நாசப்படுத்தியும் சமயத்தில் கடற்படையினர் நடத்தும் அத்துமீறல்கள் புலிகளுக்கு தார்மீக பலம் கொடுக்கின்றன. ■

## சூசை எங்கே?



சூசையோடு பிரபா

கடற்புலிகளது முதல் தளபதி சூசை வடமராட்சியைச் சேர்ந்தவர். நல்ல வாட்ட சாட்டமான தோற்றம். கடந்த மூன்று நான்கு மாதங்களுக்கு முன்னர் புலிகளது உள்நாட்டு, வெளிநாட்டு பிரசார வெளியீடுகளில் சூசையின் பெயரும், படமும், அவர் பற்றிய செய்திகளும் வெளியாகிக்கொண்டிருந்தன.

ஆனால் கடந்த இரண்டு மாதமாக சூசை பற்றிய பேச்சையே காணவில்லை.

சமீபத்திய மன்னார் கடல் தாக்குதல் செய்திகளிலும் சூசையின் பெயர் அடிபடவில்லை.

இதேவேளை கொழும்பில் இருந்து வெளியாகும் 'யுக்திய' வார இதழில், சூசை உட்பட இன்னும் சில புலிகள் முக்கியஸ்தர்கள் பிரபாகரன் உத்தரவுப்படி சிறைபிடிக்கப்பட்டுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.

எனினும், அச் செய்தியை முரசால் உடனடியாக ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

## எக்ஸ்ரே ரிப்போர்ட் தொடர்ச்சி

தமிழீழ நீதிமன்றத்தில் இருந்து பிரபாகரனது படத்தை அப்புறப்படுத்தும் காட்சியை கற்பனை செய்துபார்க்கக்கூட புலிகள் தயாராக இருக்கமாட்டார்கள்.

இன்னொரு விடயத்தையும் நாம் கவனிக்க வேண்டும்.

புலிகள் அமைப்பு தன்னை பலமுள்ள ஒரு அமைப்பாக நிலைநிறுத்திக்கொண்டே பேச்சுக்கு வருகிறது.

எனவே-அரசாங்கம் சாடைமாடையாகக் கூட மிரட்டல் தொனியில் பேச முடியாது.

இன்னும் சொல்வதானால் தனது ஆளுமைக்கு உட்பட்ட ஒரு பகுதியின் பிரதிநிதிகளோடு பேசுவது போலக்கூட அரசாங்கம் புலிகளோடு பேசமுடியாது.

கிட்டத்தட்ட இன்னொரு நாட்டின் பிரதிநிதிகளோடு பேசுகின்ற தன்மையோடுதான் பேச முடியும்.

எனவே-புலிகள் தமது கோரிக்கைகளை பலமாக வற்புறுத்தவே செய்வர்.

தற்போதைய நிலையில் புலிகள் பேச்சை முறித்தால் புலிகளைவிட அரசுக்கே நஷ்டம் அதிகம்.

தனிப்பட்ட முறையில் சந்திரிக்காவுக்கும் அதனால் வாக்கு நஷ்டம்.

எனவேதான் உடனடியாக பேச்சின் முக்கிய கட்டத்தை ஆரம்பிக்காமல் ஜனாதிபதித் தேர்தல் முடியும்வரை மட்டை போடும் ஆட்டக்காரர்கள் நால்வரை அரசாங்கம் தனது பிரதிநிதிகளாக இறக்கிவிட்டிருக்கிறது.

புலிகள் தரப்பில் இருந்தும் திணற வைக்கும் பந்து வீச்சு உடனடியாக இடம்பெறாது என்று அரச தரப்பு நம்பினாலும்கூட, மன்னார் கடற்தாக்குதல் போன்ற பந்துக்கள் 'எங்கே புலிகள் அவசரப்பட்டு ஆட்டத்தை உடனே குழப்பி விடுவார்களோ' என்று அரசாங்கத்தை யோசிக்க வைக்கின்றன.

ஆட்டம் நட்போடு ஆரம்பித்தாலும் முடிவு சுபமாக இருக்குமா என்பதே இன்றைய பெறுமதிமிக்க கேள்வியாக இருக்கிறது. ●

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# புலிகளால் மூழ்கடிக்கப்பட்ட எம்.வி.சாகரவர்த்தன

# ஒரு அத்தியாயத்தின் அஸ்தமனம்!

அலசுவது-இராஜதந்திரி

போர் நிறுத்தம் ஒன்றைக் கொண்டுவந்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு.வே.பிரபாகரன், பிரதம மந்திரி திருமதி.சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் கோரியிருந்தார்.

இக்கோரிக்கைக்கு சந்திரிகா அரசின் பதிலுரை கிடைக்குமுன்னரேயே மன்னார்- சிலாவத்துறைக் கடலில் 'எம்.வி.சாகரவர்த்தன' என்ற கடற்படை ரோந்துப் படகொன்று புலிகளினால் கடந்தவாரம் மூழ்கடிக்கப்பட்டுள்ளதுடன் அதிலிருந்த படையினர் பலரும் உயிரிழந்திருக்கலாம்; அல்லது புலிகளின் வசம் சிக்கியிருக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்குவந்த பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட முதலாவது முக்கிய தாக்குதலாகவே 'எம்.வி.சாகரவர்த்தன' படகின் மூழ்கடிப்புக் காணப்படுகின்றது.

பி.பி.ஸி. தொலைக்காட்சி இத்தாக்குதல் பற்றி விமர்சிக்கையில், "உலகில் 'கடற்புலிகள் என்ற பிரிவு இலங்கையில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திடமே காணப்படுகின்றது. இந்நிலையில் இலங்கையின் வடபகுதிக் கடற் பிரதேசத்தில் இயங்கிவரும் கடற்புலிகள் பிரிவு, இலங்கைக் கடற்படையினருக்கு ஓர் அச்சுறுத்தலாக இயக்கி வருவதுடன், கடலிலும் புலிகளின் ஆதிக்கத்தை விரிவுபடுத்தியதாக இருக்கக் காணப்படுகின்றது" எனக் குறிப்பிட்டிருந்தது.

வடக்கு-கிழக்குப் பிரச்னையை சமரசமான முறையில் அணுகவேண்டுமென்றே சந்திரிகா குறிப்பிட்டுள்ளார். தாம் கூறியதன் அடிப்படையிலேயே வடபகுதிக்குக் கொண்டு செல்லப்படுவதற்கு தடை விதிக்கப்பட்டிருந்த அத்தியாவசியப் பொருட்கள் பலவற்றின் மீதான தடையை சந்திரிகா நீக்கியிருந்தார்.

சந்திரிகாவின் இந்த நல்லெண்ண அணுகுமுறைக்கு மதிப்பளிக்கும் விதத்திலேயே தமது காவலிலிருந்த பத்துப் பொலிஸ்காரர்களை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் விடுதலை செய்திருந்தனர்.

இதனையடுத்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனும், பிரதமமந்திரி திருமதி.சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவும் தத்தமது நிலைப்பாடுகளை விளக்கும் கடிதங்களையும் பரிமாறியிருந்தனர்.

இக்கடிதங்களில் சந்திரிகா, பிரபாகரன் ஆகியோர் தமது நல்லெண்ண நடவடிக்கைகள் பற்றி பிரஸ்தாபித்திருந்ததுடன், அரசுக்கும், புலிகளுக்குமிடையிலான முதற்சுற்றுப் பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்து தமது அக்கறையையும் வெளியிட்டிருந்தனர்.

முதற் சுற்றுப் பேச்சுக்களை ஆரம்பிக்கும் விதத்தில் புலிகளின் தரப்பில் பிரதிநிதிகளை நியமிக்கும்படி பிரதமர் சந்திரிகா, புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனிடம் கேட்டிருந்தார்.

திரு.பிரபாகரன், பிரதமரின் இக்கோரிக்கைக்கு ஏற்ப கரிகாலன், இளம்பரிதி,ஆர்.ரவி, டொமினிக் என்ற தமது நான்கு பிரதிநிதிகளை ஆரம்பச் சுற்றுப்பேச்சுக்களை நடத்தும் விதத்தில் நியமித்திருப்பதாக அறிவித்திருந்தார்.

கூடவே பிரதமருக்கு தாம் எழுதிய கடிதத்தின் இறுதியில் போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவதன் அவசியத்தை திரு.பிரபாகரன் வலியுறுத்தியிருந்தார்.

"சுமுகமான பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதற்கு போர் நிறுத்தம் ஏற்படுவது மிகவும் அவசியமானதாகின்றது. எனவே போர் நிறுத்தம் பற்றி. பிரதமர் சந்திரிகா கூடுதல் அக்கறை செலுத்தவேண்டும்" என்று திரு.பிரபாகரன் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

சந்திரிகா, பிரபாகரன் ஆகியோருக்கிடையிலான கடிதப் பரிவர்த்தனை மற்றும், இருசாராரும் வெளிப்படுத்திய நல்லெண்ண அணுகுமுறைகள் என்பன இனப்பிரச்னைத் தீர்வு குறித்த சாதகமான சூழ்நிலைகளை உருவாக்கி வருவது போன்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்திய தறுவாயிலேயே புலிகளினால் கடற்படை ரோந்துப்படகான 'எம்.வி.சாகரவர்த்தன' மூழ்கடிக்கப்பட்டுள்ளது.



விடுதலைப் புலிகளின் கடற்படையணி.

1984ம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் ஆட்சிக் காலத்தில் வெள்ளோட்டம் விடப்பட்டதே இந்த 'எம்.வி.சாகரவர்த்தன' என்ற கடற்படை ரோந்துப்படகாகும்.

மறைந்த முன்னாள் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலியினாலேயே 'எம்.வி.சாகரவர்த்தன' முதன் முதலாக வெள்ளோட்டம் விடப்பட்டிருந்து.

லலித் அத்துலத் முதலியின் படை பல விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழேயே 'எம்.வி.சாகரவர்த்தன' கொழும்பு டொக் யார்ட் (Colombo Dockyard) நிறுவனத்தினரால் தயாரிக்கப்பட்டிருந்தது.

> “நான் பல துயரகரமான அனுபவங்களை சந்தித்துள்ளேன். இருந்தபோதிலும் எனக்கு வாழ்க்கை வெறுத்துப் போகவில்லை. துயரகரமான ஒரு நிலைமைக்கு என்னை ஆளாக்கிய சூழலை மாற்றவேண்டும் என்ற வெறி என்னுள் ஏற்படுகின்றது.”
>
> —சந்திரிகா—

வடக்கே கடல், ஆகாய, தரை மார்க்கமாக விரிவான தாக்குதல்களை மேற்கொள்ளும் விதத்தில் பல்வேறு ரகத்திலுமான விமானங்கள், ஹெலிகாப்டர்கள், மற்றும் இராணுவ சாதனங்கள் என்பன லலித் அத்துலத் முதலியினால் பெருந்தொகையாக வாங்கிக் குவிக்கப்பட்டிருந்தன.

'ஒக்ஸ்போர்ட்' பல்கலைக்கழக (OXFORD UNIVERSITY) கல்விமான் என்றும், இலங்கையின் ஒரு சிறந்த சட்டத்தரணி என்றும் லலித் அத்துலத் முதலி தென்னிலங்கையில் கணிக்கப்பட்டிருந்தார்.

ஆயினும் அவர் தேசிய பந்தோபஸ்த்து அமைச்சராகவிருந்து மேற்கொண்ட பணிகள் எதிலும் அவர் பெற்ற உயர் கல்வியின் பிரதிபலிப்பைக் காண முடியாதிருந்தது.

உலகின் உன்னத பல்கலைக்கழகங்களில் ஒன்றான ஒக்ஸ்போர்ட்டில் கல்வி பயின்ற பலரும் சிறந்த ஜனநாயக வாதிகளாகவும், நல்ல சிந்தனையாளர்களாகவும் கலாரசிகர்களாகவுமே விளங்கியுள்ளனர்.

ஆனால் அமரர் லலித் அத்துலத் முதலி தமது ஒக்ஸ்போர்ட் உயர் கல்வியை ஒரு புறத்தே மூட்டை கட்டிவைத்துவிட்டவர் போலவும், போர்க்குணம் நிரம்பிய ஒரு படைத் தளபதி போன்றுமே தேசிய பந்தோபஸ்த்து அமைச்சர் பதவியை வகித்திருந்தார்.

இலங்கையின் இராணுவ பலம் தற்போது பெருமளவு அதிகரித்திருக்கின்றது. வடக்கு-கிழக்கில் யுத்த நிலை தொடர்ந்து நீடித்து வருகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளும் ஒரு பெரும் இராணுவ சக்தியாக வளர்ச்சியடைந்துள்ளனர்.

இத்தகைய நிலைமைகளுக்கு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் ஆசீர்வாதத்துடன் மறைந்த தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி மேற்கொண்டிருந்த இராணுவ விஸ்தரிப்பு நடவடிக்கையே முக்கிய காரணமாக விளங்கியிருந்தது.

1984ம் ஆண்டில் வெள்ளோட்டம் விடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள 'எம்.வி.சாகரவர்த்தன' என்ற ரோந்துக் கப்பல் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் பெயரை உள்ளடக்கியதாகவே இருக்கின்றது.

இந்நிலையில் ஜே.ஆர்.ஜயவர்த்தனாவின் ஆட்சிக்காலத்தில் ஆரம்பமான 'இராணுவ அணுகுமுறைகளின் ஆரம்பத்தைக் குறிப்பதாகவே 'எம்.வி.சாகரவர்த்தன' ரோந்துக்கப்பல் விளங்கியிருந்தது.

1984ம் ஆண்டு கடற்படையினரின் கைக்கு வந்த 'சாகரவர்த்தன' ரோந்துக் கப்பல் சரியாக பத்து வருடங்களின் பின்னர் தற்போது 1994ம் ஆண்டில் மூழ்கடிக்கப்பட்டுள்ளது.

1983ம் ஆண்டு இடம்பெற்ற இனக் கலவரத்தையடுத்தே, ஜே.ஆர்.ஜயவர்த்தனா தலைமையிலான அன்றைய ஐ.தே.க. அரசு இராணுவ நடவடிக்கைகளை விஸ்தரித்திருந்தது.

இந்த விஸ்தரிப்பு கடந்த பத்துவருட காலத்தில் பல்வேறு பரிமாணங்களையும் பெற்றிருக்கின்றது.

இந்நிலையில் கடந்த பத்து வருடகாலமாக கடற்படையினரின் பாவனையிலிருந்த 'சாகரவர்த்தன'வின் மூழ்கடிப்பு ஓர் அத்தியாயத்தின் முடிவைக் குறிப்பதாகவே இருக்கின்றது.

புலிகள் போர் நிறுத்தத்தை வலியுறுத்தியுள்ள அதேசமயம் தமது பலத்தையும் நிரூபிக்கும் வகையிலேயே 'சாகரவர்த்தன'வை மூழ்கடித்துள்ளனர் என்று பாதுகாப்பமைச்சின் முக்கியஸ்தர்கள் தெரிவித்துள்ளனர்.

மறுபுறத்தே அரசியல் ரீதியாக வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு ஒரு தீர்வு காண்பதைப் பற்றிச் சிந்திக்கையில் 'சாகரவர்த்தன' வெள்ளோட்டம் விடப்பட்ட காலத்திலிருந்து கடந்த பத்து வருட காலமாக நிலவிய அபாயகரமான யுத்தக் கெடுபிடிகள் மேலும் தொடரத்தான் வேண்டுமா? அக்கெடுபிடிகளும் 'சாகரவர்த்தன' போன்று மூழ்கடிக்கப்படக்கூடாதா' என்றே எண்ணத் தோன்றுகின்றது.

கடற்படை ரோந்துப் படகான 'சாகரவர்த்தன' மீதான தாக்குதல் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், சந்திரிகா அரசுக்குமிடையிலான நல்லெண்ணங்களைப் பாதித்துவிடாதா? எனவும் பேசப்படுகின்றது.

ஆனால் இந்த ரோந்துக் கப்பல் மீதான தாக்குதலானது வடக்கே காணப்படும் யுத்தக் கெடுபிடியை புதிய ஆட்சியாளர்கள் நன்கு எடைபோட உதவுவதாகவே விளங்குகின்றது.

வடக்கே தரை, ஆகாய மார்க்கமாக படையினரின் பலம் அதிகரித்துக்காணப்படும் அதேவேளை, புலிகள் எந்தவகையிலும் பலவீனமடைந்திருக்கவில்லை என்பதை உணர்த்துவதாகவே கடந்தவார ரோந்துக்கப்பல், மூழ்கடிப்புக் காணப்படுகின்றது.

இந்நிலையில் அரசியல் அணுகுமுறைகளை முன்னெடுக்கும் முயற்சிகளில் ஆர்வங்காட்டுவோருக்கு கடந்தகால யுத்தக் கெடுபிடிகள் எவ்வளவு தூரம் முதிர்ச்சியடைந்துள்ளன என்பதனையே இக்கப்பல் மூழ்கடிப்பு விவகாரம் புலப்படுத்துகின்றது.



வடக்கு-கிழக்கு நிலவரத்தைப் பொறுத்தவரை ஆட்சியாளர்கள் புதிய அரசியல் அணுகுமுறைகளையே கையாளவேண்டியவர்களாக இருக்கின்றனர்.

வடபகுதிக்கு கொண்டு செல்லப்படுவதற்குத் தடை விதிக்கப்பட்ட பொருட்கள் பெரும்பாலானவற்றின் மீதான தடையை விலக்கி, நல்லெண்ண அணுகுமுறைகளில் தமது ஆர்வத்தை வெளியிட்டிருக்கும் பிரதமர் சந்திரிகா, வடக்கே மின்சாரம், நீர்பாசனம் மற்றும் வேறு புனருத்தாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாகவும் அறிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நல்லெண்ண அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை நடத்தி, வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு ஒரு நிரந்தரத் தீர்வை எட்ட வேண்டுமென்ற நோக்கமே சந்திரிகாவிடம் காணப்படுவதை அவரது கடந்த ஒரு மாதகால ஆட்சி புலப்படுத்துவதாக இருக்கின்றது.

இன்றைய யுத்த நிலவரத்துக்கு சந்திரிகா எந்த வகையிலும் பொறுப்பாளியல்ல. கடந்த கால ஆட்சியாளர்களின் குறுகிய இனவாத அரசியல் கொள்கைகளும், இராணுவ ரீதியிலான அணுகுமுறைகளுமே வடக்கு-கிழக்கு நிலவரம் இன்று மோசமடைந்திருப்பதற்கு முக்கிய காரணங்களாக இருக்கின்றன.

இந்நிலையில் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு மனிதாபிமான ரீதியில் தீர்வொன்றைக் காண்பதற்கு இராணுவ ரீதியிலான அணுகுமுறைகள் எந்த வகையிலும் உதவமாட்டாதென்பதனையே கடந்தகால அனுபவங்கள் புலப்படுத்துவனவாக இருக்கின்றன.

இலங்கையில் இன்று ஒவ்வொரு குடிமகனும் யுத்தக் கெடுபிடியினாலும், பயங்கரவாத நடவடிக்கைகளினாலும் பாதிப்படைந்திருக்கும் நிலை காணப்படுகின்றது.

பிரதமர் சந்திரிகாகூட அண்மையில் 'இந்தியா டுடே' என்ற (India Today) சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியொன்றில் தனிப்பட்ட முறையில் தமது சொந்த வாழ்க்கையைக் கூட பயங்கரவாதச் சம்பவங்கள் எவ்வளவு தூரம் பாதித்துள்ளன என்பதை தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார்.

சந்திரிகா பதின்நான்கு வயதுச் சிறுமியாக இருக்கும்போது அவரது தந்தையாரான முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

பின்னர் சந்திரிகாவின் 42வது வயதில் அவரது கணவரான திரு.விஜயகுமாரதுங்க கோரமான முறையில் கொலையுண்டிருந்தார்.

சிறுமியாக இருந்தபோது தந்தையாரையும், பின்னர் குடும்ப வாழ்வில் தமது கணவரையும் துயரகரமான முறையில் பறிகொடுத்த சந்திரிகா, 'இந்தியா டுடே'க்கு இப்படிக் கூறியிருந்தார்: "நான் பல துயரகரமான அனுபவங்களைச் சந்தித்துள்ளேன். இத்தகைய அனுபவங்களில் இருந்து மீளமுடியுமா? என்று பல சமயங்களில் எனக்கு சந்தேகம் வந்ததுண்டு. இருந்த போதிலும் எனக்கு வாழ்க்கை வெறுத்துப்போகவில்லை. மனிதர்களிடம் கசப்பு ஏற்படவில்லை என்பதை உணரும் போது எனக்கே ஆச்சரியாமாக இருக்கின்றது. என்னுள் ஒரு காருண்யம் புகுந்த மாதிரி இருக்கின்றது. துயரகரமான ஒரு நிலைமைக்கு என்னை ஆளாக்கிய சூழலை மாற்ற வேண்டும் என்ற வெறி என்னுள் ஏற்படுகின்றது."

சந்திரிகாவின் மேற்குறிப்பிட்ட எண்ணக்கருத்துக்கள் அவரது மனநிலையைப் படம் பிடித்துக்காட்டுவதாக இருக்கின்றன.


சந்திரிகாவின் மனநிலையிலே இன்று இலங்கையில் ஆயிரம், ஆயிரம் அநாதைகளும், அபலைகளும் ஒரு நிரந்தர அமைதிக்காகவும், சமாதானத்துக்காகவும் ஏங்கித் தவித்தவர்களாக இருக்கின்றனர்.

இந்நிலையில் முழு நாட்டினரதும் அமைதிக்கு ஓர் அபாயகரமான சவாலாக இருக்கும் வடக்கு-கிழக்கு யுத்தத்தை தொடர்ந்து நீடிப்பதைவிட, விரைந்து ஒரு முடிவுக்குக் கொண்டு வரவேண்டுமென்பதனையே கடற்படைக்கப்பல் 'சாகரவர்த்தனவின்' மூழ்கடிப்பு பிரதமர் சந்திரிகாவுக்கு உணர்த்தியிருக்கும் எனக் கருதிக்கொள்ள முடிகின்றது. ●

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# சிற்றிடை அழகு -சிறப்பாகும் வழிகள்

ருக்கா நாதன்



1. கால்களை நன்றாக அகல மாக்கிக்கொண்டு வலது கையை மடக்கி பின்நோக்கி வைத்துக் கொள்ளுங்கள். பின்பு இடுப்போடு வலது பக்கம் லேசாக சாயுங்கள். அதேபோல் இடது பக்கமும் சாயுங்கள். இப்படிச் செய்வதால் இடுப்பின் பக்க வாட்டில் உள்ள சதைதொய்வு அடையாமல் சமசீராக மடிப்பு விழாமல் இருக்கும். தினமும் 10 தடவை செய்யவும்.

2. கால்களை நன்றாக அகல மாக்கிக்கொள்ளுங்கள். உடம்பை வலது பக்கம் சாய்த்து முழங் கையை மடித்து தலையின் பின்பக்கம் இரு கைகளின் விரல்களை சேர்த்துக்கொள்ள வேண்டும். இதேபோல் இடது பக்கமும் உடம்பை சாய்த்து செய்தல் வேண்டும். இப்படி 10 முறை செய்தால் இடுப்பின் பின் பகுதி அழகான தோற்றத்தைக் கொடுக்கும்.

3. கால்களை நன்றாக அகல மாக்கிக்கொள்ளுங்கள். வலது பக்கம் உடலைச் சாய்த்து இடது பக்க மணிக்கட்டை இடுப்பின் மேல் நோக்கி அழுத்திக்கொண்டு வலது கையால் வலது முழங் காலை அழுத்திப் பிடிக்கவும்.

4. கால்களை நன்றாக பரப்பி வைத்துக்கொண்டு உடலை இடுப்போடு குனிந்து மடித்துக் கைகளை முழங்காலுக்கு பின் னால் விறைப்பாக நீட்டினால் வயிற்றிலும் இடுப்பிலும் தேவை யற்ற சதைகுறையும்.

5. கால்களை நன்றாக பரப்பி வைத்துக் கொள்ளுங்கள். இடுப் போடு கீழே குனிந்து இடது கையால் வலதுகால் பாதத்தைத் தொட வேண்டும். வலது கை மேல்நோக்கி ரொம்ப விறைப் பாக இருக்கவேண்டும். இடது கால் பாதத்தை வலது கை யால் தொடவேண்டும். தினமும் பத்து முறை செய்தால் இடுப்பு சமச்சீராக வரும்.

6. தரையில் மல்லாக்காகப் படுத்துக்கொள்ள வேண்டும். தலையையும் தோளையும் உயர்த்திக் கால்களை ஒன்று சேர்த்து மேல் நோக்கி நீட்ட வேண்டும். இதனால் தொடைசம்பந் தப்பட்ட சதை விறைப்பாக இருக்கும்.

## புதிய ஆபரணம்



திருடர்கள், வழிப்பறிக் கொள்ளைகள் இப்போது அதிகமாகிவரும் காலம். தங்க நகைகளோடு வெளியே நடமாடுவதற்கே அச்சமாக இருக்கும். இந்தியாவில் பம்பாய் மாநிலத்தில் உள்ள கல்லூரி மாணவிகள், வேலைக்குச் செல்லும் பெண்கள் மத்தியில் ஒரு புதிய ஆபரண நாகரிகம் அறிமுகமாகியுள்ளது. அதுதான் தோல் நகைகள். செம்பு கம்பிகளுடன் தோல் இணைத்து தைக்கப்பட்ட இந்த ஆபரணங்களுக்கு சரியான கிராக்கி.

கழுத்திலும், காதிலும், கைகளிலும் அணிவதற்கு ஏற்ற வகையில் இவை தயாரிக்கப்படுகின்றன.

இப்போது பம்பாயில் எங்கும் இளம்பெண்கள் நாடுவது தோல் ஆபரணங்களே...டட்டடாய்ங்....!

**தினமுரசு-அருள் ஜுவலர்ஸ் இணைந்து வழங்கும் தங்க நகைப் பரிசுத்திட்ட முடிவுகள்**

**பக்கம்-20**

## இது சமையலறைச் சமாச்சாரம்

சமையலறை அதிககவனமாக இருக்கக் கூடிய இடம்.சமையலில் ஈடுபடும் ஒவ்வொரு பெண்ணும் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். இந்த கவனத்தை சரியானபடி பின்பற்றினால் பெரும்பாலான விபத்துக் களை தவிர்த்துவிடலாம். பெரும்பாலும் சமையலறையில் கவனக்குறைவாலேயே விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆனால் அதிகமாக தீ விபத்துக்களே ஏற்பட்டு பிரச்சனைகளை உருவாக்குகிறது. அதிகப் படியான இலகுவான ஆடைகளை உடுத்திக் கொண்டு அடுப்பின் அருகே செல்லுதல் ஆபத்தை விளைவிக்கும். பருத்தியினாலான ஆடைகளை அணிந்து கொண்டு சமையல் செய்வதன் மூலம் ஓரளவு விபத்திலிருந்து தப்பலாம்.

இந்த வகையில் முதலில் எண்ணை வகைகளை பயன்படுத்தும்போது சற்று கூடுதல் கவனம் தேவை. வாணலியில் சிலர் முக்கால்பாகம் எண்ணை விட்டு அதில் சிப்ஸ் முதலியன பொரித்தெடுப்பது, இந்த மாதிரி யான செயல்களிலேயே ஆபத்து மிக அருகில் உள்ளது. அதிக எண்ணை வாணலியில் இருப்பதால் அதில் உபயோக படுத்தும் உணவுப் பொருட்கள் எந்த வகையிலும் ஈரமாக இருக்கக்கூடாது.

இதனை அடுத்து எந்த வேலைக்காக வாணலியில் எண்ணை ஊற்றி பயன்படுத் தினோமோ அந்த வேலை முடிந்தவுடன் உடனடியாக வாணலியை தகுந்த பொருட் களின் உதவியால் இறக்கி வைக்கவேண்டும். இப்படி வைக்கப்படும் வாணலி பக்கம் குழந்தைகள் வராத வண்ணம் பாதுகாப்பான இடத்தில் வைக்க வேண்டும்.

கேஸ் சிலிண்டரை பயன்படுத்தும்போது ஏதேனும் குறைபாடுகள் ஏற்படலாம். இந்த மாதிரி ஏதேனும் அறிகுறிகள் தென்பட்டால் சம்பந்தப்பட்ட கேஸ் ஏஜென்சிக்கு உடனே விபரம் தெரிவித்து, என்ன குறைபாடு என்பதை கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த மாதிரியான விஷயத்தில் அலட்சியம் செய்தால் பெரிய ஆபத்துக்கள் விளையும் சாத்தியக்கூறுகள் உண்டு.

சமையலறையில் உபயோகப்படுத்தும் அத்தியாவசிய பொருட்களை வைக்க பயன் படுத்தும் அலுமாரிகள் சமையல் செய்யும் போது மிக அருகிலேயே இருக்கவேண்டும் என்பதற்காக, அடுப்பின் மேல் பாகத்தில்



உணவு வகைகளை போடும்போது அதிகமான எண்ணை காரணமாக சில துளிகள் தெறித்து வெளியே விழும் வாய்ப்புண்டு. இதனால் துணிகள் பற்றி எரியும் அபாயம் ஏற்படலாம். ஆகவே, வாணலியில் போதிய அளவு எண்ணைதான் விடவேண்டும்.

அடுத்து எண்ணை சரியான பக்குவ சூட்டினை அடைந்தவுடன் காயவைத்த சிப்ஸ்களை போட்டு எடுக்கவேண்டும். இந்த சிப்ஸ்களில் ஓரளவு ஈரமிருந்தால் எண்ணை தெறித்து தீவிபத்து ஏற்படும் வாய்ப்புள்ளது. ஆகவே, எண்ணை பொருட்களில் பயன் இருக்கும்படி செய்தல் கூடாது. இப்படி யிருந்தால் அவசரத்தில் ஏதேனும் பொருட்கள் எடுக்க நேரிடும் போது ஆடையில் தீப்பற்றிக் கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இந்த அலுமாரிகள் தனிப்பட்ட இடத்தில் அல்லது பக்கவாட்டில் இருக்கும்வண்ணம் அமைக்க வேண்டும். இப்படி தனிப்பட்ட கவனத்தை சமையலறையில் மேற்கொள்ளும் போது பெரும்பாலான விபத்துக்களை தவிர்க்கலாம்.

## லேடீஸ் ஸ்பெஷல்

## கர்ப்பகாலத்தில்...

*கர்ப்பமாக இருக்கும் பெண்களுக்கு சுலபமாக குழந்தை பிறக்க வேண்டும் என்று கவலை இருக்கும். வலி இல்லாமல் குழந்தை பெறவேண்டும் என்று நினைக்கும் பெண்கள் எளிய உடற்பயிற்சியை செய்ய வேண்டும். தினமும் சிறிது தூரம் நடக்க வேண்டும். மெல்ல மூச்சை இழுத்து மெல்ல மூச்சை விடும் பயிற்சியை செய்யலாம்.*

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது-சுகந்தினி

### ரவை பணியாரம்

**தேவையான பொருட்கள்:**

ரவை-1/2 கிலோ
தேங்காய்-பாதி
மாவு- 2 பெரிய கரண்டி
வெல்லம்-200 கிராம்
அப்பச்சோடா-சிறிதளவு
எண்ணெய்-1/2 லீற்றர்

**செய்முறை:**

சிறிதளவு தண்ணீரில் ரவையை ஒருமணி நேரம் ஊறவிடவும். பின்னர் மாவு, அப்பச் சோடா, தேங்காய்த் துருவல், வெல்லம் சேர்த்து நன்றாகக் கரைத்துக்கொள்ளவும். வாணலியில் எண்ணெய் ஊற்றிக்கொதிக்க விடவும். எண்ணெய் கொதித்ததும் ரவை மாவைக் கரண்டியில் எடுத்து, ஒரே அளவில் ஊற்றி, இருபுறமும் வெந்ததும் எடுத்து விடவும். இதுவே ரவை பணியாரம்.

### உழுந்து சட்னி

**தேவையான பொருட்கள்:**

உழுத்தம் பருப்பு-50 கிராம்
தக்காளி-04
சிறிய வெங்காயம்-10
பச்சை மிளகாய்- 05.

**செய்முறை:**

உழுத்தம் பருப்பை வாணலியில் போட்டு, பதமாக வறுத்து எடுத்துக்கொள்ள வேண்டும். வெங்காயம், தக்காளியைப் பொடியாக நறுக்கி வாணலியில் போட்டு வதக்கி எடுத்து மெதுவாக அரைக்க வேண் டும். உழுத்தம் பருப்பை தனியாக அரைத்துக் கொள்ளவும்.

பிறகு வாணலியில் சிறிது எண்ணெய் விட்டு, கடுகைப் பொரியவிட்டு, அதில் சிறிது கறிவேப்பிலை போட்டுத் தாளிக்கவும். பிறகு தேவையான அளவு தண்ணீரும், உப்பும் சேர்த்து எல்லாவற்றையும் கலந்து, சூடு வந்ததும் இறக்கிவிடவும். இப்போது உழுத்தம் பருப்பு சட்னி ரெடி. இட்லி, தோசை போன்றவற்றிற்கு சுவையாக இருக்கும்.

### பொட்டுக்கடலை பொரியல்

**தேவையானவை:**

வெங்காயம்- 2 பெரியது
பச்சை மிளகாய்- 5
உப்பு- சிறிது
கடுகு- சிறிது
எண்ணெய்- 50 கிராம்
பொட்டுக்கடலை- 50 கிராம்
கறிவேப்பிலை, மல்லி- சிறிது

**செய்முறை:**

பொட்டுக்கடலையை மிக்ஸியில் போட்டு நைஸாக அரைத்துக்கொள்ள வேண்டும். சட்டியை வைத்து எண்ணெய் ஊற்றி கொதிக்கும் போது கடுகு, கறிவேப்பிலை போட்டு தாளித்து நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாயைப் போட்டு உப்பு சேர்த்து நன்றாக வதக்க வேண்டும். எண்ணெய் கொஞ்சம் அதிகமாகவே விடவேண்டும். வதங்கியவுடன் அரைத்து வைத்திருக்கும் கடலை மாவை போட்டு நன்றாக கிளற வேண்டும். கிளறி இறக்கியவுடன் கொத்தமல்லி இலையைக் கிள்ளிப் போட்டு கிளறி மூடிவைக்க வேண்டும். முட்டைப் பொரியல்போல் சுவையாக இருக்கும். திடீர் விருந்தாளிகளுக்கும் உதவும்.


## நீங்களும் தைக்கலாம் எஸ்.எஸ்

**18 வயதுப் பெண் பிள்ளைக்கான பிளவுஸ்**

| | |
|---|---|
| முன்பக்க அளவு: | 18 அங்குலம் |
| நீளம்: | 30 அங்குலம் |
| பின்பக்க அளவு: | 18 அங்குலம் |
| கை. நீளம்: | 15 அங்குலம் |
| அகலம்: | 24 அங்குலம் |

**முன்பக்க சட்டையின் ஒரு பகுதியினை வெட்டும்முறை:**

18 அங்குல அளவிலான துணியினை எடுத்து சமனாக மடித்துக்கொள்ளவும். மடித்த அப்பகுதிகளுக்கு A,B,C,D எனக் குறிக்குக. Aயிலிருந்து 2 அங்குலம் உள்நோக்கி அளந்து E எனக் குறிக்குக. Eயிலிருந்து 4 அங்குலம் அளந்து Gஎனக் குறிக்குக. Gயிலிருந்து பதிவாக 7 1/2 அங்குலம் அளந்து Hஎனக் குறிக்குக. Aயிலிருந்து 6 அங்குலம் பதிவாக கிழ்நோக்கி Fஎனக் குறிக்குக. இப்பகுதிகள் படம் 1ல் காட்டியவாறு அமைந்தனவா என்று உற்று நோக்கிப் பாருங்கள். அப்பகுதிகளை வெட்டவும். பின்னர் Gயிலிருந்து 4 அங்குலம் அடையாளமிடுக. சட்டையின் நடுப்பகுதியில் 4 அங்குலம் அடையாளமிட்டு படம் 1இன் வளைவுப்படி வெட்டவும்.




படம் 1


இவ்வாறு பின் பக்கத்தையும் வெட்டி எடுக்கவும்.

- **குறிப்பு:** பின் கழுத்துப் பகுதியை 1/2 அங்குலம் பதித்து வெட்டினால் போதும். (படம் 2ன் அமைப்பு)


**கையினை வெட்டும் முறை:**

(படம் 3ஐ கவனத்திற்கொள்க)

24 அங்குல அகலமும், 15 அங்குல நீளமுமான துணியினை எடுத்து அகலப்பகுதியை சமனாக மடிக்கவும். மடித்த பகுதிகளுக்கு A,B,C,D எனக் குறித்துக் கொள்ளவும். Aயிலிருந்து 3 அங்குலம் வளைவாக Eஎனக் குறித்துக்கொண்டு Eயிலிருந்து செங்குத்து வடிவமாக கீழ்நோக்கி Dயிலிருந்து 6 அங்குலம் கழிவாகும்படி Fஎனக் குறித்து கையை வெட்டுங்கள்.




படம் 3



படம் 2

இவ்வாறு வெட்டிய பகுதிகளில்,

முதலாவதாக மூட்டப்படவேண்டிய பகுதி வளைவாக வெட்டிய துண்டுகளை வெட்டிய அப்பகுதிகளோடு பொருத்தவும். அதன்பின்னர் தோள் மூட்டு பகுதிகளை மூட்டவும். இதனையடுத்து கழுத்துக்கு 3/4 அங்குல குறோஸ் பீஸ் வெட்டி உருட்டித் தைக்கவும். முன்பக்கத்திற்கு திறந்து பூட்டுவதற்கு சுகமாகவும் அழகாகவும் அமைக்க 1 1/2 அங்குல துணியினை எடுத்து வெளிப்புற மாக வைத்து தைத்து உட்புறமாக தையல் இடவும். இதன்பின் அப்பகுதிகளுக்கு பட்டின் போட்டு தைக்கவும். பின்னர் படம் 3 கையினை எடுத்து பொருத்தப்பட்ட சட்டையின் கைப்பகுதியின் மத்தியில் சிறு சுருக்கிட்டு தைத்துக்கொள்ளவும். இப்போது சட்டையின் அமைப்பு வந்துவிட்டதா? சட்டையை பொருத்தியபின்னர் கீழ் பக்கத் தினை சிறிது சரித்து வெட்டவும். வெட்டிய பின்னர் 1/4 அங்குல மடிப்பு போடவும்.

## முரசின் பரிசு

பார் அந்த 50 அதிஷ்டசாலிகள்?

**தினமுரசு நடத்தும் பரிசுப் போட்டி.**

- *50 பேர் அதிஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.*

**முரசின் பரிசு**
**கூப்பன் இல 9**
**உண்மை—நேர்மை—வெளிப்படைத்தன்மை**

- *பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.*
- *பரிசுக் கூப்பன்களை 1-25 வரை பத்திரமாக சேர்த்து வைக்க வேண்டும்.*
- *நாம் அனுப்பச் சொல்லும் போது 25 கூப்பன்களையும் அனுப்பி வைக்கலாம்.*
- *மிக்ஸி- ரைஸ் குக்கர்கள்-இட்லி குக்கர்கள், கைக் கடிகாரங்கள், நவீன ரக இல்லப் பொருட்கள் என்பன பரிசுகளாக வழங்கப்படவுள்ளன.*
- *இன்றுமுதல் கூப்பன்களை சேகரிக்க ஆரம்பியுங்கள். உங்கள் அதிஷ்டத்தைப் பரிசீலிக்கலாமே.*

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# தரையிறங்க மாட்டாமல் அலைந்த விமானம் வீட்டுக்கூரையில் இறங்கி அமர்ந்தது



ஃப்புளொரிடா மாநிலத்திலுள்ள ஜாக்சன்வில்லி பல்கலைக்கழக விமானிகள் பயிற்சிக் கழகத்தில் பயிலும் மாணவன் அரிக் அர்னோல்ட். போதுமான அளவு பயிற்சியினைப் பெற்றவர்தான். அன்று அவருடைய காதலி செரில் ஸ்மித்தை- இரு இருக்கைகள் மட்டும் கொண்ட பயிற்சி விமானத்தில் ஏற்றிக் கொண்டார். இருவருக்கும் 23 வயதாகிறது.

இருவரும் இரு மணி நேரம் வரை ஆகாயத்தில் சுற்றி வட்டமிட்டனர். செரிலுக்கு இதுவே முதல் விமானப் பயணம். மாநகர சபை விமானத் தளத்தில் விமானத்தை பக்குவமாக இறக்க அரிக் முயன்றார். தரையிலிருந்து சுமார் 1,500 அடி உயரத்தில் 100 மைல் வேகத்தில் பறந்து வரும்போது விமானத்தின் ஒரே இயந்திரம் இயங்க மறுத்துவிட்டது.

பல தடவைகள் முயற்சித்தும் முடியாது போகவே அருகே தென்பட்ட சதுப்பு நிலத்தில் இறக்கிவிட எத்தனித்தார். விமானம் தரையைத் தொடுவதற்கு சில நொடிகளிருக்கையில் மின்சக்தி விநியோகக் கம்பிகளில் மோதும் அபாயம் ஏற்படப்போவதை உணர்ந்து-தனது திறமை எல்லாவற்றையும் பிரயோகித்து விமானத்தை மேலே கிளப்புவதில் வெற்றிகண்டார்.

இருப்பினும் அதேவேளையில் வீசிய வேகமான காற்று விமானத்தை உந்தித் தள்ளிச் சென்று அருகே இருந்த ஒரு வீட்டுக்கூரையின்மீது இருத்திவிட்டது. விமானத்தின் இயந்திரம் முற்றாகப் பழுதடைந்த போதிலும் தீப்பிடிக்கவில்லை. அதுமட்டுமல்லாமல் அரிக்கும் செரில்லுக்கும் ஒரு சிறுகாயம் கூட இல்லாமல் தப்பிவிட்டனர்.

அந்த வீட்டில் கூட எவரும் இருக்கவில்லை. அயலிலுள்ள ஒருவர் ஏணியினைக் கொண்டுவந்து இருவரையும் தரையிறக்கி விட்டார். "இத்தகைய விபத்திலிருந்து இருவரும் தப்பிப் பிழைத்தது விந்தை என்றே பலரும் கூறுகின்றனர். "எங்களுக்கும் இது பெரும் புதுமையாக்வே தோன்றுகிறது" என்று காதலர்கள் இருவருமே கூறுகின்றனர்.




கூரையின் மீது விமானத்தைப் பார்வையிடும் பொலிஸ்காரர், இடது புறம் அதிர்ச்சியில் அரிக்-செரில்

## தகவல் பெட்டி தகவல் பெட்டி தகவல் பெட்டி தகவல் பெட்டி

## சூப்பர் அம்மா

# வெளிவந்துவிட்டன 16 வெளியீடுகள்! 17வது வெளியீடும் ரெடி!!



'நாமிருவர் நமக்கொருவர்' என்ற சுலோகம், மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் உலகின் பல நாடுகளிலும் பரவலாகப் பயன்படுத்தப்படும் இக்கால கட்டத்தில் 'பதினாறும் பெற்று பெருவாழ்வு கண்ட' ஒரு தாய் தன் வயிற்றில் 17வது குழந்தையைச் சுமந்து கொண்டிருக்கிறாள்.

இங்கிலாந்தில் லிங்கொன் நகரைச் சேர்ந்த 36 வயதான நிக்கோலா பிரிடாம் என்ற பெண்மணி 1976ல் கெவின் என்ற தச்சுத் தொழிலாளியை மணந்துகொண்டார். அப்போதிருந்தே "வருடா வருடம் விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகள் நடைபெறுவதைப் போன்று நிக்கோலா குழந்தைகளைப் பெற்று வருகிறாள்" என்று அவள் கணவன் மகிழ்ச்சியுடன் கூறுகிறார்.

"இத்தனை பேருக்கும் உணவு ஊட்டுவதற்கே கெவினின் வருமானம் போதவில்லை. இருப்பினும் குழந்தைப் பேறைக் கட்டுப்படுத்த இருவருக்குமே முடியாதிருக்கிறதே" என்று நிக்கோளா 17வது தடவையாகக் கருவுற்றிருக்கிறாள் என்று கேள்வியுற்ற அவர்களுடைய அயலிலுள்ள ஒருவர் கூறினார்.

கடைசிப் பையன் ஒலிவர் பிறந்து 18 மாதங்களே ஆகின்றன. அவனுடைய கண்ணில் கோளாறு ஏற்பட்டுள்ளது. இரண்டு தடவைகள் சத்திர சிகிச்சை செய்தும் குணம் காணாமல் அந்தப் பச்சிளம் பாலகனுக்கு மூன்றாவது சத்திர சிகிச்சை செய்யப்படவிருக்கிறது.

இதற்கிடையே தற்போது தயாராகிவரும் 17வது குழந்தையை பத்திரமாக பிரசவிக்கும் ஏற்பாடுகளிலும் கவனம் செலுத்தவேண்டியும் உள்ளது.


18வது வெற்றிகரமான வெளியீடும் இருக்குமா என்று கேட்டபோது இருவரும் சிரிக்கிறார்கள்.

பிரசவ நிறுத்த யோசனை உடனடியாக பரிசீலிக்கப்படுவது நல்லது.

## என்ன இது?

இவை இரண்டும் குறைபாடு கொண்ட கைகள் என்று நீங்கள் நினைத்தால் அது தப்பு.

இவை இரண்டும் கைபோல் உருவான 'கரட்'. மரக்கறி வகையில் சத்தான கரட் வியப்பான வகையில் உற்பத்தியாகிய நாடு கனடா. ஆண்டு 1940. நவம்பர் 5.



## நாய் ட்ரைவ் இன்



நீங்கள் ஆசையுடன் செல்லமாக வளர்க்கும் நாய்க்கு காய்ச்சல் வந்துவிட்டதா? உங்கள் மோட்டார் காரில் அதனை ஏற்றிக்கொண்டு இந்த நாய் மருத்துவமனைக்குச் செல்லலாம்.

வண்டியிலிருந்தவண்ணம் உணவு பரிமாற வசதிபடைத்த 'டிரைவ் இன்' உணவகம்; காரிலிருந்தவண்ணம் பணம்பெற வசதியான 'டிரைவ் இன் பாங்க்' போன்று இது 'டிரைவ் இன் நாய் மருத்துவமனை.'

வண்டியிலிருந்த வண்ணமே திறந்தவண்ணமிருக்கும் மருத்துவமனையின் ஜன்னல் கதவோரம் காத்திருக்கும் ஊழியரிடம் உங்கள் நாயைக் கொடுக்க வேண்டியதுதான். அங்குள்ள மருத்துவர்கள் அந்த நாயின் உடலைப் பரிசோதித்து உடனடியாக நோயின் தன்மையினைக் கூறிவிடுவார்கள். உடனடி மருத்துவமானாலும் சில நிமிடங்களில் மருந்து கொடுத்து உங்கள் நாயுடன் உங்களை அனுப்பிவிடுவார்கள். அல்லது உள்ளனுமதிக்கப்பட்டு மருத்துவம் தொடர்வதனாலும் அப்போதே கூறிவிடுவார்கள். ஒரு பழைய உணவு விடுதி இப்பொழுது நாய் டிரைவ் இன் மருத்துவமனையாக்கப்பட்டுள்ளது.

இந்த வசதி கலிபோர்னியாவிலுள்ள சான் பெர்னாண்டோ வலி நகரில்.

நம் நாட்டிலும் செல்ல நாய் வளர்ப்பு அதிகமாகி வருவதால் நாய்களுக்கான வைத்தியர்கள் சளையாக சம்பாதிக்கிறார்கள். காலக்கிரமத்தில் நாய் 'டிரைவ் இன்' மருத்துவமனை இங்கும் லாபகரமான தொழிலாகலாம்.

www.padippakam.com

## கிசு-கிசு நியூஸ்-3

### தினசரி மாலையில்

சென்னை மயிலாப்பூரில் நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் தினமும் மாலையில் கஸ்தூரமான நடிகையை காண முடிகிறது. நீச்சல் கற்றுத் தேர்ந்த கஸ்தூரமானவர் தனது பிரிய நடிகர் ஒருவருக்கு கற்றுக்கொடுக்கவே தினசரி அங்கு ஆஜராவதாகத் தகவல்.

### ஓட்டம்

வளர்ந்துவரும் சிரிப்பு நடிகர் அவர். என்ன காரணமோ தெரியாது. சிரிப்பு நடிகையோடு நடித்து முடித்தால் போதும் இடத்தைக் காலி பண்ணிவிடுகிறார். படப்பிடிப்புக்கு வெளியே அவர்களோடு பேச்சும் இல்லை கீச்சும் இல்லையாம். முன் ஜாக்கிரதை நடிகைக்கு இருக்கலாம். இவருக்குமா? வடிவழகர் அவ்வளவா? அதுதான் விழிப்பாக்கும்.

பம்பாய் ரீ.வி. உலகில் பிரபலமானவரும், இந்திப் படங்கள் பலவற்றில் வெகு பெருமதனத்தோடு நடித்தவருமான நடிகை கமல்காந்து நடிகர் ராகுல்பாலைத் துரத்தித் துரத்தி 'லவ்' பண்ணுகிறாராம். கமல் காந்து பூஜாபேடியின் கவர்ச்சிக்கும் சவால்விடத் தயாராகி வருவதும் இன்னொரு முக்கிய செய்தி!

### கௌதமியின் அனுபவம்

"எனது அப்பா டாக்டர். அம்மா? அவரும் டாக்டர். நல்ல பண்பாடான குடும்பம் எமது குடும்பம்.

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்று 70 படங்களில் நடித்துவிட்டேன். நான் உண்டு என் வேலை உண்டு என்று இருந்து வருவதால் சினிமாத் துறையில் கசப்பான அனுபவம் எதுவும் எனக்கு ஏற்படவில்லை" என்கிறார் கௌதமி.

### பெட்ரும் சீனில்...

மேல் நாட்டில் ஒரு பெட்ரும் காட்சியைக்கூட கலைநயத்தோடு எடுப்பார்கள். ஆனால், இங்கே கதாநாயகிக்கு சேலையைக் கட்டிவிட்டுகட்டிலில் உருட்டிசேலையைக் கொத்தாகக் கவ்வி உருவுவான். ஒருத்திக்கு முட்டி வரை 'ஸ்கர்ட்' போட்டு விட்டு, காமராவை காலுக்கு அடியில் வைத்து 'ஷூட்' பண்ணுவார்கள். இப்படி பொரிந்து தள்ளுவது யார் என்கிறீர்களா? அட...தம்பி... உள்ளே வெளியே புகழ் இன்ஸ்பெக்டர்தான்.



சிவா-ராதிகா-அருணாஸ்ரீ
படம்-ராணி மகாராணி

### பரு ரகசியம்

'வசந்தகால பறவை' 'மவுனமொழி' போன்ற படங்களில் நடித்தவர் கன்னட நடிகை ஷாலி. ஷாலியின் முகத்தில் 'பருக்கள் ஆக்கிரமித்துவிட்டன. அதற்கான காரணத்தை நாட்டு மக்கள் அறிந்துகொள்ளும் வகையில் ஷாலியே கூறுகிறார் கேளுங்கள்: "எனக்கு கொஞ்சம் மேக்கப் அலர்ஜி உண்டு. அடிக்கடி மேக்கப் பவுடர் பூசிக்கொள்வதால் இப்படி என் முகம் காட்சியளிக்கிறது" என்கிறார். அப்பாடா...இப்போதுதான் நிம்மதி.



### முகப்பில்

பிரபுதேவா-ரோஜா

படம்-ராசையா

அசத்துவது-ரஜினி

### மொழி மாறும் புத்திரன்

மம்முட்டி மலையாளத்தில் நடித்த 'பிரம்ம புத்திரன்' படத்தை அதே பெயரில் தமிழில் மொழிமாற்றுகிறார்கள். அமைதியானவன்தான். ஆனால் தன் தாயை யாராவது அவமதித்தால் தாங்கமாட்டான். முரடனாக மாறி போராடியே தீருவான். என்பதுதான் கதை. தாயாக நடிக்கிறார் சவுகார் ஜானகி. கவர்ச்சிக்கு வஞ்சகம் பண்ணாமல் இந்தி நடிகை அனுக்கிரகா நடிக்கிறார். விரைவில் திரைக்கு வந்து விடுவார் 'பிரம்ம புத்திரன்'.



### வே...

'ஜென்டில்மேன்', ... அர்ஜுனுக்கு ... ஒரு வேடத்தில் ... வேண்டும். அத... 'கர்ணா' படத்தி... ஜோடிகளும் செ... ஒருவர் வினிதா... 'தலைவாசல்' ... செல்வா திரைக்க... படம்தான் 'கர்ணா'. டெல்லி, பம்பாய் ... நகரங்களில் ஆட... காட்சிகள் பட...

### "பொண்ணு பார்த்...

பார்த்திபனிடம் துணை இயக்குநராக இரு... கதை-திரைக்கதை, வசனம் எழுதி இயக்கும்படம் '... சரி, கதாநாயகன் யார்? அதுவும் சாட்சாத் ... ஜோடி, சுபாஷ்ரீ. இன்னொருபுது நடிகையும் உ...

ஆர்.வி.உதயகுமாரும் பாடல் எழுத ஒப்புக் கொண்டுள்ளார். இசையமைப்பதும் ஒரு புதுமுகம். பெயர்-கீர்த்தி.

### தொட்டால் போச்சு

முதல் இரவு. மணமகனுக்கு பல கனவு. பஞ்சணையை நெருங்கி மணமகளை தொட முயல, அவளோ, "நீ தொடாதே தொட்டாயானால் பொல்லாதவளாகிவிடுவேன் என்று எச்சரிக்கிறாள். மணமகன் பிரபு. மணமகள் கனகா. காட்சி இடம்பெறும் படம் 'ஜல்லிக்கட்டுக்காளை'.

பாண்டியராஜன்
படம்-மனைவி ஒரு மகாலட்சுமி

### சுற்றிவரும் சிங்காரி

அவனோ மண் பானை செய்யும் தொழிலாளி. அவன்மீது மையல் கொண்டாள் ஒரு சிங்காரி. அவளது பெயர் ரத்னம். ரத்னத்தை துரத்துகிறான். துரத்திப் பாடுகிறான். "மாமா...மாமா கொடிவேத்த வைகல வைகல வா வா மாமா, பானை விளையும் கையாலே எல்லை விளையும் காலம் எப்போ" என்று தாபத்தோடு பாடுகிறான். ரத்னமாக நடித்து நெப்போலியன். சுற்றிவரும் சிங்காரியாக நடித்து புது நடிகை சாந்தினி. படம்-மணிரத்னம் விரைவில் வருகிறது திரைக்கு.

### 'நாட்டுக்கு நல்ல தீர்ப்பு'

தலைப்பைப் பார்த்தவுடன் ஜனாதிபதி தேர்தல் பிரசார நினைவு வந்திருந்தால் மாற்றிக்கொள்ளும்.

தெலுங்கில் வெற்றிக்கொடி நாட்டிய படம் ஒன்றை 'நாட்டுக்கு நல்ல தீர்ப்பு' என்ற பெயரில் மொழி மாற்றுகிறார்கள். ஸ்ரீதேவி, நாகார்ஜுன் ஜோடியோடு சில்க்ஸ்மிதாவும் கலந்து அசத்துகிற படம் இது.



## மினிசினி

- சுரேஷ் கிருஷ்ணா இயக்கிய 'அண்ணாமலை'யில் ரஜினிக்கு நண்பனாக நகைச்சுவை வேடத்தில் நடித்த ஜனகராஜிற்கு 'வீரா' படத்தில் நடிக்கும் வாய்ப்பு கிட்டவில்லை. தற்போது 'பாட்சா'வில் நண்பனாக ஆட்டோ டிரைவர் வேடத்தில் நடித்து வருகிறார் ஜனகராஜ்.
- 'சீவலப்பேரி பாண்டி', 'தாமரை' போன்ற படங்களில் அரிவாளைத் தூக்கியபடி ஆவேசமான கிராமத்து வாலிபனாக நடித்துள்ள நெப்போலியன், தற்போது நடித்து வரும் 'வனஜா-கிரிஜா' படத்தில் நகரத்து வாலிபனாக நடிக்கிறார்.
- சத்தியராஜ்-விஜயசாந்தி நடிக்க திட்டமிடப்பட்டிருந்த 'ராஜா ராணி' படம் பின்னர் கைவிடப்பட்டது தெரிந்ததே. இப்போது இந்தக் கதையை மம்முட்டியை வைத்து தயாரிக்க எண்ணியுள்ளார் பிரபல தயாரிப்பாளர் கோவை செழியன். இவர் மம்முட்டி தமிழில் நடித்த 'மௌனம் சம்மதம்', 'அழகன்' போன்ற படங்களைத் தயாரித்துள்ளார்.
- 'அமைதிப்படை', 'தோழர் பாண்டியன்' போன்ற படங்களில் தனது இயக்கத்தில் நடித்து வந்த இயக்குநர் மணிவண்ணன், வேறு இயக்குநர்களின் படங்களிலும் நடித்து வருகிறார். இவர் இப்போது லியாகத் அலிகான் இயக்கும் 'ராணி மகாராணி'யிலும், கார் வண்ணன் இயக்கும் 'தொண்டன்'லும் நடித்து வருகிறார்.
- மோகன் நடித்த 'பிள்ளை நிலா' படத்தைத் தயாரித்தவர் பெருமாள். இவர் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் புதிய படமொன்றைத் தயாரிக்க திட்டமிட்டுள்ளார்.
- தெலுங்கில் வெங்கடேஷ் கதாநாயகனாக நடித்த படமொன்றை தமிழில் 'சூப்பர் போலீஸ்' என்ற பெயரில் மொழி மாற்றுகின்றனர். இப்படத்தில் வெங்கடேஷிற்கு ஜோடியாக நக்மா, சௌந்தர்யா ஆகியோர் நடிக்கின்றனர்.
- 'தம்பிக்கு ஒரு பாட்டு' என்ற படத்தைத் தயாரித்து கதாநாயகியாக நடித்திருந்தார் சில்க் ஸ்மிதா. தற்போது இவர் மீண்டும் ஒரு படத்தைச் சொந்தமாகத் தயாரித்து கதாநாயகியாக நடிக்கவுள்ளார்.
- கே.பாலுவின் 'ஜல்லிக்கட்டுக்காளை' படத்தை இயக்கிய மணிவாசகம், கார்த்திக்-மீனாஜோடியாக நடிக்க கே.பாலு தயாரிக்கும் அடுத்த படத்தையும் இயக்கவுள்ளார்.
- நடிகர் திலகத்திற்கு ஜோடியாக தங்கச் சுரங்கம் படத்தில் நடித்தவரும், கன்னட சுப்பர் ஸ்டார் விஷ்ணுவர்த்தனின் மனைவியுமான பாரதியின் சகோதரர் பிரேம்ராஜ் 'இளைஞர் அணி' படத்தின் மூலம் தமிழில் அறிமுகமாகிறார். இவர் ஏற்கனவே சில கன்னடப் படங்களில் நடித்துள்ளார்.
- சென்னையில் படப்பிடிப்புக்காக அமைக்கப்பட்டுள்ள ஃபிலிம் சிற்றிக்குள் முதன் முதலாக 'ஆணழகன்' படத்தில் இடம்பெறும் பாடல்காட்சி ஒன்று படமாக்கப்பட்டுள்ளது. பிரசாந்த், சார்லி, சின்னி ஜெயந்த் நடித்துள்ள இந்தப் பாடல்காட்சியை தியாகராஜன் படமாக்கினார்.
- நடிகர் நெப்போலியன் 12 அடி நீளமான சாட்டை ஒன்றை மிக பத்திரமாக வீட்டில் வைத்திருக்கிறார். பழைய பொருட்கள் சேகரிப்பதில் நெப்போலியனின் பிரியமே தனி

### காதலும்-ரோகிணியும்

காதல் திருமணம் பற்றி குட்டி விரிவுரை நிகழ்த்தியிருக்கிறார் ரோகிணி. இதோ அது. "காதல் திருமணம் செய்பவர்கள் யாராக இருந்தாலும் முதலில் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள வேண்டும். திருமணத்தின் பின்னர் கணவன்மீது மனைவியும் மனைவி மீது கணவனும் அன்பு மாறாமல் இருக்கவேண்டும். அதுவே உண்மைக் காதல்" என்கிறார் ரோகிணி.

விரும்பினால் ரோகிணிக்கு நன்றி சொல்லலாம்.

### விருப்பப்பட்டால் ஓ.கே

கவர்ச்சி நடிகை ஜெயமாலினிக்கு திருமணமாகிவிட்டது.

"மீண்டும் நடிப்பீர்களா?" என்னும் வழக்கமான கேள்விக்கு, ஜெயமாலினி சொன்ன வழக்கமான பதில்: "என் கணவரின் விருப்பப்படி நடப்பேன். அவர் விருப்பப்பட்டால் தொடர்ந்தும் நடிப்பேன்" அக்கா ஜெயமாலினி விரும்பினால் என்ன, அவர் அத்தான் விரும்பினால் என்ன, ரசிகர்கள் விரும்ப வேண்டுமே, மாலியை எப்போதோ மறந்தார்!

### முக்கனியான வருக்கு மூன்று...

குத்துக்காலிட்டமைனயோ இதயமதை கொத்தி எடுத்தனையோ?

தேனிக்கையாக இருக்குதன்னே திரண்டு பழுத்த பலா. (பாரதிதாசன் மன்னியபாராக)

யாராங்கே. அள்ளி வாருங்கள் இந்த அருந்தரிவைய ஆகுடைமயாக்க

# சினிவிசிட்

## திகாவுக்கு லவ் லெட்டர்

படித்த ராதிகாவுக்கு எரிச்சலோ எரிச்சல்.
கடிதத்தில் இருந்த வாசகங்கள் அப்படி.
எனது இதயத்தில் வைத்து பூஜை செய்கிறேன் உன்னை
நேரமில்லை. நீ இல்லையேல் நான் இல்லை."
பார்த்தார் ராதிகா. அது ஒரு இளம் நடிகரின்
கையெழுத்து என்று தெரிந்தது.
என் மகன் போல நினைத்து நேசித்தேனே!
பரிசா?" என்று ராதிகா துடித்துப் பதறினார்.
ஆனால், அந்தக் கடிதத்தை இளம் நடிகர்
யார்தான் எழுதினாரா என்பதுதான் மர்மம்.
இதுவும் படக்காட்சிதான். படம்-பவித்ரா.
ராதிகா ஜோடி. திரைக்கதை-வசனம்.
இயக்கம் கே.சுபாஷ்.

## ரா தேவையா?

'கால்ஷீட்' தேவையானால்
அழுத்தமான கதையாக
வேண்டும். கனமும், காரமும்
உடனே ரெடியாகி
படத்தில் நடிக்க.
சொன்ன சேதி.
காரமும் வளர்ச்சிக்கு
வருத்தப்படுகிறார்

## இரண்டு

'சாது' எல்லாமே
கள்.
அருக்கு அழுத்திருக்க
தயாரிப்பான
வேடம் ஏற்றுள்ளார்.
காதவர்கள்தான்.
ரஞ்சிதா.
கதை இயக்கிய
இணைத்து இயக்கும்

போன்ற
சண்டைக்
ன்னை.

...ச்சு"

துரைமுருகன்
பார்த்தாச்சு."
முருகனேதான்.



ராம்கி-கஷ்மா
படம்-அலெக் மருது

## கைப்பட எழுதல்

படங்களில் அப்படி இப்படி நடித்தாலும் யுவராணிக்கு கடவுள் பக்தி அதிகம்தானாம். ஆஞ்சநேயர், ஸ்ரீராகவேந்தர் பக்தையான யுவராணி தனது ரசிகர்கள் எழுதும் கடிதங்களுக்கு தன் கைப்படவே பதில் எழுதிப்போட்டுவிடுவாராம். வீடியோவில் பழைய படங்களைப் பார்த்துவரும் யுவராணி, சிவாஜி நடித்த தில்லானா மோகனாம்பாள், நவராத்திரி போன்ற படங்களைப் பார்த்து புல்லரித்துப்போனாராம்.
யுவராணிக்கு மிகவும் பிடித்த நடிகை ரேவதி.

## குஷ்பு யார் வழியில்?

குஷ்புவைப் பற்றி வைரமுத்துவும் பாடல் எழுதவேண்டி இருந்தது. "கூடையிலே என்ன பூ குஷ்பு." இப்போது அந்த பூ சற்று பழைய பூவாக மாறிவிட்டது.
'நாட்டாமை' படத்தில் சரத்குமாரின் ஜோடியாக நடிக்கும் குஷ்பு மீனாவுக்கு அம்மாவாக நடிக்கிறார். இதுபற்றி குஷ்பு என்ன சொல்கிறார்? "நான் ஒரு கவர்ச்சி நடிகையாக முத்திரை குத்தப்பட்டவள். என்னுடைய இரசிகர்கள் வித்தியாசமான பாத்திரத்தில் இனிமேல் நடிப்பதையே விரும்புகிறார்கள். இந்த விடயத்தில் கே.ஆர். விஜயாவைத்தான் நான் பின்பற்ற விரும்புகிறேன். அவர் ஒரு காலத்தில் கிளாமர் ஹீரோயின் இப்போது அந்தக் கண்ணோட்டத்தில் அவரை யாரும் பார்ப்பதில்லை" என்கிறார் குஷ்பு.

## வந்தாச்சு காதலன்!

குஞ்சுமோன் தயாரிப்பில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட, பரபரப்பாகப் பேசப்பட்ட 'காதலன்' படம் திரைக்கு வந்துவிட்டது.
பிரபுதேவா-நக்மா காதல், ஆடல், பாடல் காட்சிகள் கச்சிதம். கெட்டியாகப் பிடித்து கட்டிக்கொள்ளும் நக்மாவுக்கு தமிழில் மேலும் வாய்ப்புக்கள் கிடைக்கலாம். இந்தியில் இருந்து தமிழுக்கு வந்த எதற்கும் துணிந்த நக்மாவால் குஷ்புவாக மாறமுடியாது என்பது மட்டும் மெய்.

## உஷ்.உஷ்

'ஜென்டில்மேன்' படத்தில் வில்லனாக நடித்த சிரஞ்சீவ்ராஜ் அடிக்கடி டிஸ்கோ சாந்தி வீட்டில் காணப்படுகிறார். அவர் சுற்றுவது டிஸ்கோவுடன் அல்ல. டிஸ்கோவின் தங்கை லலிதகுமாரியோடு.

## ரஜினி பாதுகாக்கும் கடிதம்

ரஜினிக்கு தினமும் ஆயிரக்கணக்கான கடிதங்கள் குவிகின்றன. அத்தனைக்கும் அவர் பதில் போட முடியுமா? முடியாது. முக்கியமான கடிதங்கள் மட்டுமே பார்வைக்குச் செல்லுகின்றன.
ரஜினி மிக முக்கியமான கடிதம் ஒன்றைப் பாதுகாத்து வருகிறார். அது யார் எழுதிய கடிதம் தெரியுமோ? உஷ்-இது இரகசியமல்ல. அக்கடிதம் எழுதியது இயக்குநர் கே.பாலசந்தர். 'முள்ளும் மலரும்' படத்தில் ரஜினியின் நடிப்பை பாராட்டி எழுதிய கடிதம் அது.

## சுமிதா தூள்

இந்தியில் வெற்றிபெற்ற கலநாயக் தமிழில் 'ஹீரோ' என்ற பெயரில் திரைக்கு வந்துவிட்டது.
இந்தியில் ரம்யா கிருஷ்ணன் படுகவர்ச்சியாக நடித்த பாடல் காட்சிபோல தமிழிலும் எடுத்துள்ளார்கள். தமிழிலும் நடிக்குமாறு ரம்யா கிருஷ்ணனைக் கூப்பிட்டார்கள். மறுத்துவிட்டார்.
எனவே சில்க் சுமிதாவுக்கு கிடைத்தது வாய்ப்பு. கவர்ச்சியான விதவிதமான ஆடைகளில் வந்து பாடி 'அடி தூள்' என்று இரசிகர்களை தொளைத்து விடப்போகிறார்.

## கமல்–ரஜினி இணைந்து நடிக்கலாமா?

கமல்-ரஜினி இருவருக்குமே பாலசந்தர்தான் குரு. இருவரையும் ஒரே படத்தில் மீண்டும் நடிக்கவைத்து சூப்பர் படம் ஒன்றை வழங்கும் திட்டம் பாலசந்தருக்கு முன்பு இருந்தது.
ஆனால் இப்போது சந்தர்ப்பம் கிடைக்காது. 'டூயட்' படத்தில் பிரபுவை நடிக்க வைத்து அவரது இரசிகர்களை திருப்திப்படுத்த முடியாமல் படம் தோல்வி. அதனால் விஷப் பரீட்சைகளில் இறங்குவதை பாலசந்தர் இப்போதைக்கு விரும்பமாட்டார் என்று நம்பலாம்.



விஜயகாந்த்-ரேவதி
படம்-என் ஆசை மச்சான்



ரோஜா

## கருப்பு நிலா

விஜயகாந்த், ரேவதி, சுந்தரராஜன் கூட்டணியின் 'என் ஆசை மச்சான்' விஜயகாந்த்தின் வெற்றிப்பட வரிசையில் சேரப்போகிறது. தமிழ்நாட்டின் பல திரையரங்குகளில் வசூலுக்கு பழுதில்லாமல் ஓடிக்கொண்டிருக்கிறது.
இன்னொரு செய்தி, விஜயகாந்த்தின் இனிய நண்பர் இப்ராகிம் இராவுத்தர் படத் தயாரிப்பில் இனிமேல் ஈடுபடமாட்டார் என்று கருதப்பட்டது பொய்.
விஜயகாந்த் நடிக்கும் 'கருப்பு நிலா' என்னும் புதிய படத்தை இராவுத்தர் பிலிம்ஸ் தயாரிக்கிறது. தைப்பொங்கல் வெளியீடாக தருவதற்கு திட்டமிடப்பட்டுள்ள கருப்பு நிலாவில் விஜயகாந்திற்கு இரு ஜோடிகள் ஒருவர் ரஞ்சிதா. இன்னொருவர் குஷ்பு. இயக்கப் போவது. ஆர்.அரவிந்தராஜ். இசை-தேவா.
பிரமாண்டமாகத் தயாரிக்கப்படும் 'கருப்பு நிலா' இப்ராகிம் இராவுத்தருக்கு இடைநடுவே ஏற்பட்ட சரிவை சீர்செய்யுமா?

## சத்யராஜ்-பேபி ஷாமிலி ஜோடி

## சத்யராஜ்-ரஞ்சிதா பந்தயம்!


சத்யராஜின் ராசியான பட நாயகிகள் வரிசையில் ரஞ்சிதாவின் பெயரும் அடிபடுகிறது. அமைதிப்படைக்குப் பிறகு தோழர் பாண்டியனில் சத்யராஜோடு நெருக்கமாக நடித்து கிசு-கிசுக்கப்பட்டவர் ரஞ்சிதா.
சத்யராஜுடன் ஏற்பட்ட ஒரு அனுபவத்தை சொல்லிச் சிரிக்கிறார் ரஞ்சிதா.
"அமைதிப்படை படத்தில் சத்யராஜ் மொட்டையடித்துக்கொண்டார். உடனே நான், இருப்பதோ நாலு முடி. இதில் ஏன் மொட்டை என்று கேட்டேன். அதற்கு சத்யராஜ், 'இந்த மொட்டையால் நான் இன்னும் ஐந்து வருசம் நடிப்பேன். இன்னும் 2 வருடத்தில் பேபி ஷாமிலி எனக்கு ஜோடியாக நடிப்பாள். நாங்கள் இருவரும் கல்யாணம் செய்துகொண்டு "அம்மா ஆசிர்வாதம் பண்ணுங்க" என்று காலில் விழுவோம். கமராவை அம்மாவின் முகத்திற்கு நேரே திருப்பினால் அது ரஞ்சிதா முகமாக இருக்கும்' என்று கிண்டல் செய்தார். அதற்கு நான் இன்னும் 2 வருடத்தில் அம்மா வேடத்தில் நடிப்பது நடக்கப்போவதில்லை என்று பந்தயம் கட்டியுள்ளேன்" என்கிறார் ரஞ்சிதா. ரஞ்சிதா பந்தயத்தில் செல்லுவாரா அல்லது கண்ணைக் கசக்கும் அம்மா வேசத்தில் தோன்றுவாரா?

## ஷாருக்கானின் விளையாட்டு

இந்திப் பட கதாநாயகர் வரிசையில் இளம் ரசிகைகள் அதிகம் உள்ளவர்கள் பட்டியலில் ஷாருக்கானின் பெயரும் இருக்கிறது.
நல்ல கதை உள்ள படங்களை தேடி நடிப்பதால் அதிக படங்களில் தோன்றுவதில்லை என்கிறார்.
ஷாருக்கான் சிறந்த விளையாட்டு வீரர் என்பது பலர் அறியாத சங்கதி. கால் பந்து, கிரிக்கெட், ஹாக்கி என்று பல்வேறு விளையாட்டுகளில் கலந்தும் இருக்கிறார்கள்.
திருமணமாகிவிட்ட ஷாருக்கானுக்கு வீட்டில் இருக்கும்போது பிடித்த விளையாட்டு வீடியோ கேம்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்





## நிலாவின் உலா



வட்ட வடிவில்
வெள்ளை நிலா—அது
வானில் நடத்தும்
விதி உலா.

பட்டப் பகல் தரும்
கதிரவனின்—ஒளி
பெற்றுச் சுடரும்
வெள்ளி நிலா.

கற்றோர் அறிவை
நாம் கற்போம்—அதை
கல்லாதோர்க்குக்
கற்பிப்போம்.

என்.என்.மாறன்

"நாமிருக்கும் நாடு நமது என்பதறிந்தோம்-இது நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம்-இந்தப் பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம்-பரி பூரணனுக் கேயடிமை செய்து வாழ்வோம்"

–சுப்பிரமணிய பாரதியார்–

## பாப்பா முரசு சிறுகதை

# வர்ணத் தேவதை

வெகு காலத்திற்கு முன் இந்த உலகம் தோன்றிய புதிதில் மிக அழகாக இருந்தது. அப்போது வாழ்ந்த மிருகங்களும், பறவைகளும் ஒரே மாதிரி வெண்மையாக இருந்தன.

அவைகளைப் பார்த்த கடவுள் ஒரு தேவதையை அனுப்பி மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் அழகான வர்ணங்களைப் பூசும்படி அனுப்பினார்.

வானிலிருந்து மின்னலடித்தது போன்று அந்தத் தேவதை வர்ணக் கலவைகள், தூரிகைகளுடன் பூமியில் வந்து இறங்கிற்று.

உடனே எல்லா மிருகங்களும், பறவைகளும் ஓடிவந்து அந்தத் தேவதையைச் சூழ்ந்து கொண்டு வியப்புடன் பார்த்தன.

அப்போது தேவதை அவைகளைப் பார்த்து,

"நான் கடவுளால் அனுப்பப்பட்ட ஒரு தேவதை. உங்கள் நிறம் எல்லோருக்கும் ஒரே மாதிரி வெள்ளையாக இருக்கிறது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நிறமிருந்தால்தான் அழகாக இருப்பீர்கள். அதனால் உங்களுக்கு வர்ணம் தீட்டவே கடவுள் என்னை அனுப்பியுள்ளார்," என்றது.

உடனே அவை மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தன.

ஒரு காகம் தேவதையிடம் சென்று, "எனக்கு கறுப்பு வர்ணம் பூசிவிடு," என்றது. தேவதையும் அப்படியே செய்தது.

அடுத்து ஒரு கிளி வந்தது.

"கிளியே....கிளியே" உனக்கு என்ன வர்ணம் பூச வேண்டும்?" என்று கேட்டது தேவதை.

"எனக்கு மூக்கிற்கு சிவப்பு வர்ணமும், உடலுக்கு பச்சை நிறமும் பூசு" என்றது. தேவதையும் அப்படியே பூசிற்று.

அடுத்ததாக சிறு மலையொன்று அசைந்து வருவதுபோல யானை ஒன்று துதிக்கையை ஆட்டியபடியே வந்து, "எனக்கு சாம்பல் வர்ணம் பூசிவிடு" என்ற யானைக்கு சாம்பல் வர்ணத்தைப்பூசிவிட்டது தேவதை.



கிளி, காகம், யானை போன்றவற்றிற்கு வர்ணம் தீட்டிய தேவதை களைத்து சோர்வடைந்தது. அப்போது அங்கு வந்த வண்ணாத்திப் பூச்சிகள் தேவதையின் களைப்பு நீங்க தேன் கொடுத்தன. தேனைக் குடித்துக் களைப்பு நீங்கிய தேவதை, அவற்றின் உடலில் நீலம், பச்சை, சிவப்பு மஞ்சள், ஊதா போன்ற வர்ணங்களை சித்திர வேலைப்பாடுகளோடு பூசிற்று. வண்ணத்துப் பூச்சிகள் அழகான தோற்றம் பெற்றன. பின்னர் சந்தோசமாகப் பறந்து சென்றன.

எல்லாப் பறவைகளுக்கும், மிருகங்களுக்கும் வர்ணம் தீட்டிக்கொண்டிருந்ததைப் பார்த்த ஒட்டகம் தானும் வர்ணம் தீட்டிக்கொள்ள விரும்பியது.

"தேவதையே நான் பாலைவனத்தில் வசிக்கிறேன். அங்கு வெய்யில் அதிகம், அதனால் பளிச்சென்று கண்ணைக் கூசச் செய்யும் வர்ணம் இல்லாமல் மணல் நிறத்தைப் போன்று வர்ணம் பூசும்" என்றது. உடனே தேவதையும் மணல் நிறத்தில் வர்ணம் பூசியது.

இவ்வாறு காட்டிலுள்ள மற்ற மிருகங்களான சிங்கம், புலி, ஒட்டகச் சிவிங்கி, கரடி, மான் போன்றவையும், பறவைகளான மயில், புறா, வானம்பாடி, இரட்டைவால் குருவி போன்றவையும் வந்து வர்ணம் பூசிக்கொண்டன.

தேவதையின் முன் அணி வகுத்து நின்று எல்லா மிருகங்களும், பறவைகளும் தங்கள் அழகான நிறத்தைக் காட்டின. தேவதை தான் கொண்டுவந்த வர்ணக் கலவைகளைப் பார்த்தது. எல்லாக் கலவைகளும் முடிந்துவிட்டிருந்தது. தனது வேலை முடித்துவிட்டது என்று புறப்பட ஆயத்தமானது.

அப்போது 'கொக்கரக்கோ' என்று கூவிக்கொண்டு ஒரு சேவல் வந்தது. தான் மட்டும் வெள்ளையாய் இருக்க மற்றப் பிராணிகள், மிருகங்கள் எல்லாம் விதவிதமான வர்ணங்களில் அழகாக இருப்பதைக் கண்ட சேவல்,

"தேவதையே எனக்கும் வர்ணம் பூசு" என்றது.

வர்ணக் கலவைகள் எல்லாம் முடிந்துவிட்டன சேவலே," என்றது தேவதை.

"உலகிலுள்ள மக்களுக்கு எல்லாம் காலைப் பொழுது உதயமாகப் போகிறது என்பதை அறிந்து தூக்கத்தை விட்டு எழச்செய்யும் சிறப்பான பணியைச் செய்யும் எனக்குத் தீட்டுவதற்கு வர்ணம் இல்லையா? என்ன கொடுமை?' என்றது சேவல்.

"நான் என்ன செய்வேன் சேவலே! வர்ணக்கலவை முடிந்துவிட்டதே," என்று வருத்தமாகச் சொல்லிற்று தேவதை.


உடனே சேவல், 'ஓ'வென அழத் தொடங்கியது.

இதைப் பார்த்த மற்ற மிருகங்களும், பறவைகளும் சேவலின்மீது இரக்கம் கொண்டன. தங்கள் உடலில் பூசியுள்ள வர்ணங்களிலிருந்து கொஞ்சம் கொஞ்சம் எடுத்து சேவலின் மீது பூசின. சேவல் பல நிறங்களின் கலவையில் புது விதமாகத் தோன்றிற்று. அழகாகவும் இருந்தது. சேவலின் கவலையும் நீங்கிற்று. தேவதையும் மனநிறைவுடன் கடவுளிடம் சென்றது.

(ஆபிரிக்க நாடோடிக் கதை)

## உப்பு

- **உப்பு எவ்வாறு கிடைக்கிறது?**
  கடல் நீரை ஆவியாக்குவதால் உப்பு கிடைக்கிறது.
- **உப்பு எமது உணவில் கட்டாயம் இருக்கவேண்டுமா?**
  ஆம்.ஏனெனில் நமது உடலுக்கு தேவையான தாதுப்பொருட்கள் உப்பில் உள்ளன.



- **உப்பினால் உடல் நலத்திற்கு கேடு ஏதாவது ஏற்படுமா?**
  உப்பை அதிக அளவில் சேர்த்தால் இரத்த அழுத்தம் போன்ற இரத்த சம்பந்தமான நோய்கள் ஏற்படும்.
- **உணவில் சேர்க்கப்படுவதைத் தவிர உப்பின் வேறு பயன்கள் என்ன?**
  குளோரின், கடதாசி போன்றவை தயாரிக்கப் பயன்படுகிறது. வெளிநாடுகளில் பனியை உருக்குவதற்காகவும் உப்பு பயன்படுகிறது.
- **உலகில் அதிகளவு உப்பை உற்பத்தி செய்யும் நாடு எது?**
  அமெரிக்க ஐக்கிய நாடு.

## தினம் இதுவே

01. எயிட்ஸ் விழிப்புணர்வு தினமாக அனுசரிக்கப்படும் நாள் எது? **டிசம்பர்-01**
02. குழந்தைகள் தினமாகக் கொண்டாடப் படும் நாள் எது? **நவம்பர்-14**
03. உலக சுகாதார தினமாகக் கொண்டாடப்படும் தினம் எது? **ஏப்பிரல்-04**
04. மனித உரிமைகள் தினமாகக் கடைப் பிடிக்கும் நாள் எது? **டிசம்பர்-10**
05. தொழிலாளர் தினமாகக் கொண்டாடும் நாள் எது? **மே.01**
06. தேசிய இளைஞர் தினமாகக் கொண்டாடும் நாள் எது? **ஜனவரி-12**
07. தேசிய புகையிலை ஒழிப்பு நாளாகக் கடைப்பிடிக்கும் நாள் எது? **ஏப்ரல்-07**
08. ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படும் நாள் எது? **செப்டெம்பர்-05**

ஜே.அகிலா.

## விடுகதைகளும் விடைகளும்

01. சின்னத் தம்பி, சிவப்புத் தம்பி, திறந்த வாய் மூடாத தம்பி. அவன் யார்?
02. சட்டையைப் போடாமலே சட்டையைக் கழற்றுவான். அவன் யார்?
03. இரவும் பகலும் ஓய்வு இல்லை. படுத்தால் எழுப்ப ஆள் இல்லை. அது என்ன?
04. உயிர் இல்லாத நீதிபதி ஒழுங்காக நீதி சொல்கிறார். அவர் யார்?
05. உலகமெங்கும் படுக்கை விரித்து உறங்காமல் அலைகிறான். அவன் யார்?
06. எருக்கலை இலை பழுப்பதேன்? எருமைக் கன்று சாவதேன்?

**விடைகள்**

01. தபாற்பெட்டி 02. பாம்பு 03. இதயம்
04. தராசு 05. காற்று 06. பால்வற்றியதால்

கே.கவிதா

01. அகல நெற்றியிலே அழகான பொட்டு. அதுஎன்ன?
02. கொடியோ கோணல்மாணல்; இலையோ தாறுமாறு. பூவோ மஞ்சள்; காயோ கசப்பு. அதுஎன்ன?
03. சோற்றைக் கொட்டி விட்டு பானையை சாப்பிடுவோம். அது என்ன?
04. கறுப்பு கோட்டுக்காரன். காவலுக்கு கெட்டிக்காரன். அவன் யார்?
05. இரவில் பூந்தோட்டம். காலையில் வெறுந் தோட்டம். அது என்ன?

**விடைகள்**

01. வானம், சந்திரன் 02. பாக்காய் 03. பப்பாளிப்பழம் 04.பூட்டு 05.நட்சத்திரம்

செ.சர்மிளா தேவி, சரஸ்வதி கல்லூரி, புசல்லாவ.

01. அம்மான் வீட்டுத் தோட்டத்திலே மஞ்சள் குருவி ஊஞ்சல் ஆடுது.
02. கால்களை விரித்தான். தலையை வெட்டினான். அது என்ன?
03. செய்ததை செய்யும் குரங்கல்ல. சிங்காரிக்க உதவும் சீப்பும் அல்ல. அது என்ன?

**விடைகள்:** 2. பாக்குவெட்டி 3. முகம்பார்க்கும் கண்ணாடி

மோ.தமிழரசி- உவர்மலை விவேகானந்தா வித்தியாலயம், திருகோணமலை.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 03.10.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 59
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.


## வர்ணம் தீட்டும் போட்டி இல. 57

**பரிசுக்குரியவர்**
ச.கோமதி
கோணக்கலை தமிழ் மகா வித்தியாலயம்-பசறை.


**பாராட்டுக்குரியவர்கள்**

சிவானந்தன் ஆனந்தப்பிரகாசன்
கோணேஸ்வரா இந்துக்கல்லூரி, திருகோணமலை.
பொ.சோமன்- அ.த.க.பாடசாலை, பொத்துவில்-03.
ம.நளினி- நாமகள் வித்தியாலயம், கல்குடா.
முகம்மட் இம்ரான்கான்- கண்டி.
பிரசன்னாத் மூர்த்தி-புனித மரியாள் தமிழ் மகாவித்தியாலயம்,எட்டியாந்தோட்டை.
கி.அருணன்-றம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம், வவுனியா.
ஏ.எம்.மன்சூர்-கிண்ணியா-03.
சாமிவேல் ராஜு-பூப்பனை கந்தப்பளை.
செல்வி.அஸ்ரிகா றபீக்-அல்-இர்ஷாத் மகா வித்தியாலயம்,ஹாலி-எல.

## அறிவோம் மனதில் பதிவோம்



உலகில் ஒவ்வொரு ஆண்டும் 20 கோடி மக்கள் மலேரியா நோயால் அவதிப்படுகின்றனர். இந்த நோயைப் பரப்பும் கொசுக்களை ஒழிக்க பல நாடுகளில் கடும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.



பறவைகளிலேயே மிக அதிகமாகப் பறக்கும் பறவை சூட்டிடோன். முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் சமயங்களைத் தவிர மற்ற சமயங்களில் பெருமபாலும் பறந்துகொணடே இருக்கும்.

## விஞ்ஞான விளக்கங்கள்

1. **"ஈரல் நோயினால் பீடிக்கப்பட்டோர் இலிப்பிட்டு உணவுகளை உண்ணுவதை தவிர்க்க அறிவுறுத்தப்படுவர்.**
- இலிப்பிட்டு சமிபாட்டில் ஈரலின் சுரப்பு பித்தம் உதவுகிறது. ஈரல் நோய் பீடிக்கப்படின் பித்தம் சுரக்கப்படாது. அதனால் இலிப்பிட்டு உணவு சமிபாடடையாது. எனவே அவர்கள் இலிப்பிட்டு உணவுகளை உண்ணுவதை தவிர்க்க அறிவுறுத்தப்படுவர்.

2. **"நட்சத்திரங்கள் பகலில் தெரிவதில்லை."**
- நட்சத்திரங்களும் சூரியனைப்போல் ஒளிரும். ஆனால் புவியிலிருந்து நட்சத்திரங்கள் சூரியனைவிட வெகுதூரத்திலுள்ளது. எனவே புவிக்கு அண்மையிலுள்ள சூரியவெளி பிரகாசமாக இருக்கும். ஆதலால் நட்சத்திரங்கள் பலில் தெரிவதில்லை.

3. **"மண்ணெண்ணெய் விளக்கில் திரியைச் சுற்றி இரும்பு வலையம் இடப்படும்"**
- திரி எரியும்போது வெப்பம் வெளிவிடப்படும். இது மண்ணெண்ணெயை எரிக்கக் கூடலாம். இதனைத் தவிர்ப்பதற்கு, வெப்பம் கடத்தப்பட்டு வளிமண்டலத்திற்கு இழக்குமுகமாக திரியைச் சுற்றி இரும்பு வலையம் இடப்படும்.

4. **"இருவித்திலைத் தாவரமான பலாமரத்திலுண்டாகும் காய்களை பருமனில் அதிகரிக்கச் செய்ய பட்டை வளையம் நீக்கப்படும்."**
- தாவர இழையப் பகுதியில் தொகுக்கப்படும் உணவானது தண்டின் மாரிழையத்திற்கு வெளிப்புறமான உரியத்தினால் வேர் நோக்கி கடத்தப்படும். இதனால் காய்களில் சேமிக்கப்படும் உணவு குறைவடையும். மரவுரி வளையத்தை நீக்குவதனால் உணவு வேர் நோக்கி கடத்தப்படுவது தடுக்கப்படும். எனவே மேலதிக தொகுப்புணவு காய்களில் சேமிக்கப்படும். ஆதலால் காய்களின் பருமன் அதிகரிக்கும்.

5. **"சோடியத் துண்டு மண்ணெண்ணெய்யில் வைத்து பேணப்படுகின்றது."**
- சோடியம் தாக்குதிறன் கூடிய ஒரு மூலகமாகும். இது நீருடனும் வளியுடனும் மிகவும் வீரியமாகத் தாக்கம் புரிந்து தீய விளைவுகளை ஏற்படுத்தும். மண்ணெண்ணெய்யில் வளியும் நீரும் கரைவதில்லை. எனவே தாக்கத்தன்மையற்ற மண்ணெண்ணெய்யில் வைத்து சோடியத்துண்டு பேணப்படுகிறது.

6. **"பீற்றூட் கிழங்கை நீரில் வைத்து வெட்டும்போது நீரின் நிறம் சிவப்பாக மாறுகின்றது."**
- பீற்றூட் கலச் சாற்றில் நீரில் கரையும் சிவப்பு நிறமான சாற்று நிறப்பொருள் காணப்படுகின்றது. இது நீரைவிட செறிவு கூடியது. பீற்றூட் கிழங்கை நீரில் வைத்து வெட்டும்போது சாற்று நிறப்பொருள் செறிவு குறைந்த நீரினுள் பரவும். ஆதலால் நீரின் நிறம் சிவப்பாக மாறுகின்றது.

தொகுப்பு: சோ.துளசிதாஸ்
கோளாவில் விநாயகர் மகா வித்தியாலயம்-அக்கரைப்பற்று.

## புதிர்க்கணக்கு

தாமரை தடாகம் ஒன்றில் நாள்தோறும் தாமரை மலர்கள் பின்வருமாறு:

1ம் திகதி 1 பூ மலரும்
2ம் திகதி 2 பூ மலரும்
3ம் திகதி 4 பூ மலரும்
4ம் திகதி 8 பூ மலரும்
5ம் திகதி 16 பூ மலரும்
..............................
..............................
..............................

இவ்வாறு முதல் நாளைப்போல் இரு மடங்கு தாமரை மலர்கள் நாள்தோறும் மலருகின்றன.

அந்த தாமரை தடாகம் முற்றாக தாமரை மலர்கள் மலர 30 நாட்கள் எடுத்தது. அதாவது 30ம் திகதி முற்றாக மலர்ந்தது எனின் (தடாகம் நிறைந்தது) சரி அரைவாசி தடாகம் நிறைய எத்தனை நாட்கள் தேவை? அதாவது எத்தனையாம் திகதி அரைவாசி தடாகம் நிறையும்?

**விடை:**

29ம் திகதி அல்லது 29 நாட்கள் தேவை.

29ம் திகதி அரைவாசி தடாகம் நிறையும் 30ம் திகதி அதைப்போல் இருமடங்கு முழுத் தடாகம் நிறையும்.

**அனுப்பியது:** சதாசிவம் ஜெயராஜா
மட்/மகிழடித்தீவு சரஸ்வதி வித்தியாலயம்.

## எண் விநோதம்

| | |
|---|---|
| 111111111= | 9×123456789 |
| 222222222= | 18×123456789 |
| 333333333= | 27×123456789 |
| 444444444= | 36×123456789 |
| 555555555= | 45×123456789 |
| 666666666= | 54×123456789 |
| 777777777= | 63×123456789 |
| 888888888= | 72×123456789 |
| 999999999= | 81×123456789 |

அனுப்பியவர்:
அனீஸ் எம். ஷாகிர்-கும்புகந்துறை.

மேலே தரப்பட்டுள்ள வலதுபுறமிருக்கும் 123456789 என்ற எண்களை 9,18,27,36 போன்ற எண்களால் பெருக்கினால் இடதுபுறமுள்ள எண்கள் வருவதைக் காணலாம்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# தேன் கிண்ணம்

### நாளைய மயானம்


நேற்றின்
நிகழ்வு
விகாரமானது.


நிகழ்கால
ஏட்டில் வரவிட்டது
சவங்களை மட்டும்தான்.

இக்கால கனவுகளும்
அதுவாகத்தான்
வருகின்றன.

அழுவதற்குக்கூட
அலுப்பாய் இருக்கிறது.
ஒரு மலையை
தொட்டுப் பார்ப்பதாய்
உணராமல்
இனி மனங்கள்கூட
மரத்து விடும்.

உலகின் செவிகளுக்கு
இனிப்பான செய்தி
'கொலைகள்' என
அறிவிக்கப்படும்.





ஒருகாலம் வரும்
மிருகங்களிடம்
கால்மடித்து
'மனிதம்',
பாடம் கற்கும்.

பல்கும்புற ஹனூனா
முஸம்மில்.

### சட்டி முட்டி கட்டி

கவ்வாத்து கட்டி கீறி
கிழிஞ்சி போச்சி வேட்டி
கந்தையினால் எப்படி
கட்டுறது தொட்டி?

அழுகும் பிள்ளை முகத்தைப் பார்த்து
மட்டக்கம்பை காட்டி
தின்னு என்று கொடுக்கிறாரு
தீஞ்சிபோன ரொட்டி.
மூன்று நாள் யோத்து
முடிவு ஒன்று கட்டி
முன்னுக்கு வர எடுக்கிறாரு
மூன்றரையடி மண் வெட்டி
சீமை மாடு இரண்டு வளக்க
அடிக்கிறாரு பட்டி.

சீட்டு போட்டு வாங்கிட்டாரு
தொலைக்காட்சிப் பெட்டி
பணிய லயத்திலிருந்து பல
பொங்கிவரும் போட்டி
லயத்தை விட்டு போயிட்டாரு
சட்டி முட்டி கட்டி.

நமுனுகுல பேரின்பநாதன்
தியத்தலாவை.

### பண்டிதன் ஆகிவிட்டேன்!

1. பாலியல் ஆழியில் பாவையர் கூடவே
பாரினில் மூழ்கியவன் – அந்த
நீலிகள் லீலையில் நிம்மதி பெற்றிட,
நித்தமும் ஓடியவன்!

2. காசுபணம் பொருள் கண்டபடி தினம்
கையிலெடுத் தெறிந்தேன்!–துயர்
மாசுவடுவெலாம் மண்ணிடை, பெற்றிப்போ,
மனிதனாய் மாறிவிட்டேன்!

3. கூடிப் பிறந்தவர் கூழுக்கழுதிடக்
குடித்து மகிழ்ந்திருந்தேன்! – அவர்
வாடி வதங்கிய காட்சிகள் கண்டுமே,
வாழ்வில் சிரித்திருந்தேன்!

4. வீணர் புகழுரை (து) அந்த மயக்கினில்
வேடம் பலதரித்தேன்! – பிறர்
காணும் அழகினை கன்னியர் லீலையில்
கண்டபடி சிதைத்தேன்!

5. என்னைக் குழியினில் வீழ்த்திட வந்தவர்
என்னுயிர்த் தோழரென்றேன்!– அவர்
சொன்ன பணிகளை சொந்தமென் றெண்ணியே,
சோகம் வரவழைத்தேன்!

6. மூடர் வரிசையில் முதல்வனென் றானதால்
முதலை இழந்து கெட்டேன்! – பல
பாடங்கள் கற்றதால்; பட்டங்கள் பெற்றிடாப்–
"பண்டிதன் ஆகி விட்டேன்!"

அ.கௌரிதாசன்–ஆலங்கேணி கிழக்கு.

### 'நான் இறந்த இரவொன்று......'

இத்தனை நாட்களும்
உன் வார்த்தைகள்
என் செவிகளில்
தேனாய்த்தான் இனித்தன!

உன் சின்ன இதழ்களில்
சுழன்று கொண்டிருக்கும்
சிரிப்பும் என் சிந்தையை
பூரிக்க வைத்ததும் உண்மைதான்!

ஆனால்
நேற்றைய இரவு
நீ வார்த்தைத் துப்பாக்கியால்
என் இதயத்தை
குறிவைத்த போதுதான்
உன் சுயரூபம் வெளிப்பட்டு
நான் சிதைந்து போனேன்.

அன்பு,பாசம் என்ற
சொற்கள் அடங்காத
உன் மன அகராதியை
நேற்றுத்தானே நான்
படிக்க முடிந்தது.
படித்து முடித்த பின்
தான் முடிவுரை எழுதியது
நமது உறவுக்கு மட்டுமல்ல,
எனது உயிருக்கும்தான்....!

காத்தான்குடி சுபைர்கான்.

### ஊனம்

இப்போதெல்லாம் பேரூந்தில்
ஊனமுற்றோர் இருக்கையில்தான்
அமர்கின்றேன்.
என் இதயத்தை திருப்பித் தராமலே நீ
இன்னொருவன் இதயத்தில் குடிபோனபின்
இதயம் இழந்த நான் ஊனமுற்றவன் தானே!

பொ. உதயணன்–மட்டக்களப்பு.



### மனிதம் மரணித்த..!

இந்த எம் தேசத்தில்
இரவுகள்
உறங்கியதுமில்லை
பொழுதுகள்
விடிந்ததுமில்லை!

ஏழை–பணக்காரன்
என்னும் ஏற்றத்தாழ்வுகள்
இப்போது
இங்கில்லை!

குடிசை–மாளிகை
என்னும் பேதமும்
இங்கில்லை!
வீடு மனைவி மக்கள்
என்னும் வாழ்வுத்தொடர்
இங்கில்லை!

காலம் செய்யும்
கொடுமையிது
கவனிப்பார்
யாருமில்லை!

அமைதி என்கின்ற
தன்மையே இங்கில்லை.
கொடுமை என்ற
பண்பேயிங்கே
பெருந் தொல்லை!

ஏற்றத் தாழ்வுகள்
ஏற்படுத்திய தொல்லை
என்றும் முடிந்ததில்லை
அகதி அலைகள்
இன்னும் ஓயவில்லை!

மனித உயிர்களுக்கோ
இங்கு மதிப்பில்லை
எமனுக்குக்கூட
இப்போ உறங்க
நேரமில்லை!

ஆசையோடு பிள்ளையை
பள்ளியனுப்ப
பெற்றோருக்கு
விருப்பமில்லை
படித்திருந்தும் இங்கே
வேலையில்லை!

மரண ஊர்வலத்திற்கூட
கூட்டமில்லை...!
மனிதம் என்கின்ற
சொல்லுக்கேயிங்கு
அர்த்தமில்லை....!

கவியுவன்(மனோ)
ஆரையம்பதி.

### புரியவைக்க!

ஷா.....
உன் புன்னகையை
கடத்திச் சென்று
சிறைவாசம் வைத்த
இராவணன் யார்...?

ஷா........
உன் விழியிரண்டும்
உதிர்ந்து விட்ட
நட்சத்திரமா
கண்சிமிட்ட மறுக்கிறதே...?

ஷா........
உன் கூந்தலுக்கு
உத்தரவிட்டதனால் தானோ
நான்
உதிரிப் பூவானேன்?

ஷா........
உன் அன்பு என்ன
அடுப்பா....?
நான் விறகாகிக்
கருகிப்போக....?

ஷா........
உன் இதயம் என்ன
கடைச்சரக்கடா
திடீர் என விலை ஏற?

ஷா........
என் இதயம் ஒன்றும்
பந்தல்ல



நீ உருட்டி விளையாட

ஷா........
நீ என்ன மயிலா
தோகை விரித்தாட?
நான் என்ன
'மோனாலிஸாவா'
புன்னகை சிந்தி
புரிய வைக்க....?

ஷஹிர்ஷா தாஸிம்
தர்கா நகர்.

# நறுக்–நறுக்



**வாசகர்கள் எழுதிக்குவித்த மடல்களுக்குள் இடம்பெறும் வாய்ப்பு பெற்றவை பத்து!**

### "சிரிசிரி ஜோடி"

"ஏய்! விடுங்க.. எனக்கு வெட்கமா இருக்கு"
"ம்ஹும்! விடவே மாட்டான் இன்னிக்கு என்கிட்ட-வசமா நீ மாட்டிக்கிட்ட"

"ஐயோ! நீங்க ஒன்னு! கமெராகாரன் கிளிக் பண்ணாம எங்களையே பார்த்திட்டிருக்கான்"

"எப்பவுமே பிரியாம, இப்படியே இருப்பமா!"
"சரி சரி! கிளிக்பண்ண.. கொஞ்சம் சிரிங்க"

கோட்டைமுனை-வாஹிட்ர குத்தூஸ்-பதுளை.

### விலை குறைந்து போச்சி

"என்னங்க..திடீர்னு..வந்து 'கப்'ன்னு கட்டிப் புடிச்சிட்டீங்க... ரொம்ப சந்தோசம் போல..?
"ஆமா...பாண் விலை குறைந்திடுச்சில்ல அந்த குதூகலம்தான்.."

கே.எஸ்.பாலா-அட்டன்.

### அந்தநாள் ஞாபகம்

அவன்: சிக்-புக்-சிக்-புக் ரயிலே! சிக்-புக்-சிக்-புக்-ரயிலே
அவள்: என்னங்க இது? இப்பவும் அந்த நாள் ஞாபகமா..?

தஸ்கர ராஸிக்-கொழும்பு-12.

### அதுக்காக இப்படியா?

ஆண்: நாங்க ரெண்டு பேரும் காதலிச்சு வீட்டைவிட்டு ஓடிவந்தது வாஸ்தவம்தான். அதுக்காக ஒங்க அப்பாவைப் பார்த்து இப்பிடியா சிரிக்கிறது?

எம்.சுரேஷ்.

### சுமைகள்

கணவன்: "உண்டி சுருங்குவது பெண்டிற்கு அழகு" இது என்ன நீ இந்தப் பிடி பிடிச்சிருக்கே! கொள்ளாதம்மா என் சம்பளம்.
மனைவி: சும்மா போங்க... உங்களுக்கு எல்லாமே பகிடிதான். சுமந்தால்தானே தெரியும் சுமையை! இருப்பதை இறக்கி முடியட்டும் அதற்குப் பிறகு போடுறன் பட்டினி.

நிவேப்பிரியன்-பொத்துவில்-03.

### ஹி...ஹி..

பெண்: கொஞ்சம் இலேசாகத்தான் கட்டிப் பிடிங்களேன். முன்னால் கமராமேன் பார்க்காரு.
ஆண்: அவர் நாம் இருவரும் இப்படி இருப்பதைக்கண்டு கமராக்கு பின்னுக்கல்லவா ஒழிந்து நிக்கிறாரு.
இருவரும்: ஹி....ஹி...ஹி...

ஜே.கே.ராஜா-மட்டக்களப்பு.

### அடைமழை

"ஒரு விஷயம் தெரியுமா?"
"என்னது?"
"நம்ம ஜனங்களெல்லாம் இப்போ பொது ஜனக் கட்சியில் சேர்ந்து விட்டார்களே!"
"அதற்கென்ன நாமும் அவர்களுள் இருவராச்சே! அதுசரி நமக்குள் இருக்கும் ஓர் ஒற்றுமை தெரியுமா?"
"புரியும்படியா கூறுங்களேன்?"
"பதினேழு வருடங்களுக்குப் பின் பொது ஜன கட்சி வெற்றி வாகை சூடியதுபோல, நம்ம காதலுக்கும் எமது பெற்றோர் பதினேழு வயதான பின்தான் பச்சைக் கொடி காட்டியுள்ளார்களே! இனி நம் காட்டில் என்றும் அடை மழைதான்! ஹி..ஹி..ஹி.." (இருவரும் மகிழ்ச்சி வெள்ளத்தில்..)

செல்வி.கமல்நேசி-களுத்துறை.

### கூடிப்போச்சு

பெண்: ஹாப் பாணுக்கு 2 ரூபா குறைச்சாச்சு.
ஆண்: பாணுக்கு 2 ரூபா குறைச்சதை கேட்டதுமே உன் நிறை 10 கி.கி கூடி விட்டதே.

தயாளினி-ஆரையம்பதி-01.

### கவலை இல்லை

காதலி: (செல்லமாக) ம். எடுங்க கையை..
காதலன்: ம்.ஹும் எடுக்கவே மாட்டேன்.
காதலி: நீங்கள் இப்படி செய்தா எமது தினமுரசு இரசிகர்கள் எங்களைப்பற்றி என்ன நினைப்பாங்க?
காதலன்: நினைக்க தெரிந்த அவங்க மனசுக்கு மறக்கவும் தெரியும். கவலையை விடு.

என்.ஜெயஇந்து-கொழும்பு-15.

### ஒருவரல்ல இருவர்

ஜோன்: ஏய் ரோசி! என்ன இவ்வளவு பாரம் உன்னை வீட்டைவிட்டு தூக்கிக் கொண்டு வரும்போது இவ்வளவு பாரம் இல்லையே...?
ரோசி: நீங்க சுமப்பது இப்ப ஒருவரை அல்ல...
ஜோன்: ஆ....

ஏ.கண்ணன்-வத்தளை.

# இந்த வாரம் உங்கள் பலன்

**(02.10.94 முதல் 08.10.94 வரை)**

சோதிட மாமணி 'தில்லை'

### மீனம்: — சுப நேரம்

(பூரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனக்குறை நீங்கும், தொழில் விருத்தி. | பகல் 12 மணி |
| திங்கள்- | பெரியோர் உதவி, பணக்கஷ்டம். | காலை 7 மணி |
| செவ்வாய்- | அந்நியர் நட்பு, முயற்சி பலிதம். | பகல் 1 மணி |
| புதன்- | வீண் முயற்சி, மனக்கலக்கம். | காலை 7 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், பூமியால் இலாபம். | பி.ப 1 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| சனி- | செலவு மிகுதி, காரியத்தடை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 7

### மேடம்: — சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனமகிழ்ச்சி, பொருள் வரவு. | பி.ப 1 மணி |
| திங்கள்- | தொழில் சிறப்பு, காரிய முன்னேற்றம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | அந்நியர் நட்பு, கௌரவம். | காலை 7 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, முயற்சி மேன்மை. | காலை 9 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், பொருளாதார மேன்மை. | பி.ப 2 மணி |
| வெள்ளி- | காரியசித்தி, பொருளாதார நன்மை. | காலை 6 மணி |
| சனி- | மறைமுக எதிர்ப்பு, செலவு மிகுதி. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### இடபம்: — சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரியானுகூலம். | காலை 8 மணி |
| திங்கள்- | மனக்குறை நீங்கும், பெரியோர் உதவி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | அந்நியர் சகவாசம், பணச்செலவு. | காலை 9 மணி |
| புதன்- | உறவினர் பகை, மனக்கலக்கம். | பி.ப 1 மணி |
| வியாழன்- | கடன் தொல்லை, புதிய முயற்சி. | காலை 10 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பயணம், அந்நியர் உதவி. | பி.ப 2 மணி |
| சனி- | வீண் மனஸ்தாபம், உயர்ந்த நட்பு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### மிதுனம்: — சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | முயற்சி பலிதம், தொழில் மேன்மை. | பகல் 12 மணி |
| திங்கள்- | பெரியோர் சகவாசம், மனக்கலக்கம். | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | உறவினர் இழப்பு, செலவு மிகுதி. | காலை 6 மணி |
| புதன்- | தொழில் தடை, மனஸ்தாபம். | பகல் 11 மணி |
| வியாழன்- | அந்நியர் பகை, ஆடம்பர வாழ்க்கை. | காலை 6 மணி |
| வெள்ளி- | மனப் போராட்டம், வெளியிட பயணம். | பி.ப 4 மணி |
| சனி- | கடன் தொல்லை, பணத்தட்டுப்பாடு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: — சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் விருத்தி, பொருள் வரவு. | பி.ப 2 மணி |
| திங்கள்- | முயற்சி மேன்மை, கௌரவ நிலை. | காலை 7 மணி |
| செவ்வாய்- | அந்நியர் நட்பு, தொழில் மேன்மை. | பகல் 12 மணி |
| புதன்- | மனக்குறை நீங்கும், பயணம். | காலை 10 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, உயர்ந்தநிலை. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | தனலாபம், குடும்ப நன்மை. | காலை 8 மணி |
| சனி- | ஆடம்பரச் செலவு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 3

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கன்னி | - சூரியன், புதன் |
| துலாம் | - வியாழன், வெள்ளி, இராகு |
| கும்பம்- | - சனி |
| மேடம் | - கேது |
| மிதுனம் | - செவ்வாய் |

சந்திரன்-சிம்மம், கன்னி, துலாம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்.

### கர்க்கடகம்: — சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | அந்நியர் சகவாசம், தொழில் கேடு. | பி.ப 2 மணி |
| திங்கள- | மனக் கவலை, பயனற்ற செயல். | காலை 7 மணி |
| செவ்வாய்- | காரியத்தடை, செலவு மிகுதி. | காலை 9 மணி |
| புதன்- | பொருள் வரவு, உயர்ந்த எண்ணம். | பி.ப 2 மணி |
| வியாழன்- | வெளியிட பயணம், செல்வாக்கு மிகுதி. | காலை 7 மணி |
| வெள்ளி- | மன மகிழ்ச்சி, செய்தொழில் விருத்தி. | பகல் 1 மணி |
| சனி- | பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

### சிம்மம்: — சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் மேன்மை, கௌரவம். | பி.ப 1 மணி |
| திங்கள்- | கடன் தொல்லை நீங்கும், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, முயற்சி மேன்மை. | காலை 6 மணி |
| புதன்- | வீண் பிரயாசம், துயர் அதிகம். | பி.ப 2 மணி |
| வியாழன்- | அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | காலை 7 மணி |
| வெள்ளி- | தெய்வானுகூலம், முயற்சிதடை. | பகல் 12 மணி |
| சனி- | துயர் நீங்கும், பொருள் வரவு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 8

### மகரம்: — சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உயர்ந்த நட்பு, முயற்சி பலிதம். | காலை 10 மணி |
| திங்கள்- | வெளியிடவாசம், கௌரவம். | பகல் 11 மணி |
| செவ்வாய்- | பயனற்ற செயல், மனப்பயம். | காலை 9 மணி |
| புதன்- | தொழில் பலிதம், பணவரவு. | பகல் 12 மணி |
| வியாழன்- | இடமாற்றம், பெரியோர் உதவி. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | தொழில் மந்தம், பணத்தடை. | காலை 8 மணி |
| சனி- | பொருள் வரவு, செலவு மிகுதி. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம் -6

### தனு: — சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, கௌரவ நிலை. | காலை 6 மணி |
| திங்கள்- | தொழில் சித்தி, முயற்சி மேன்மை. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | வீண் குறை கேட்டல், தெய்வ நம்பிக்கை. | காலை 9 மணி |
| புதன்- | மனப்போராட்டம், தொழில் பிரச்சினை. | பகல் 11 மணி |
| வியாழன்- | பெரியோர் உதவி, பணக்கஷ்டம். | காலை 6 மணி |
| வெள்ளி- | அந்நியர் பகை, தொழில் கேடு. | காலை 9 மணி |
| சனி- | இடமாற்றம், திடீர் பயணம். | பகல் 1 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம் -1

### விருட்சிகம்: — சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் உதவி, முயற்சி மேன்மை. | காலை 7 மணி |
| திங்கள்- | தொழில் பேறு, மனமகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், குடும்பக் கலகம். | காலை 8 மணி |
| புதன்- | துயர் நீங்கும், உயர்ந்த நட்பு. | பகல் 12 மணி |
| வியாழன்- | தனலாபம், தொழில் மேன்மை. | காலை 7 மணி |
| வெள்ளி- | பெரியோர் பகை, மனகலக்கம். | பகல் 11 மணி |
| சனி- | குடும்ப நன்மை, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்: — சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் நீங்கும், பொருள் வரவு. | காலை 7 மணி |
| திங்கள்- | பயனற்ற செயல், கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | மனமகிழ்ச்சி, செலவு மிகுதி. | காலை 8 மணி |
| புதன்- | தொழில் மந்தம், வீண் மனஸ்தாபம். | பி.ப 1 மணி |
| வியாழன்- | வெளியிடப் பயணம், கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| வெள்ளி- | அந்நியரால் உதவி, மனக்குழப்பம். | பகல் 11 மணி |
| சனி- | பொருளாதார நட்டம், அரச விரோதம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 9

### கன்னி: — சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முன்னேற்றம். | காலை 8 மணி |
| திங்கள்- | தெய்வ நம்பிக்கை, பணவரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வீண் துயர் நீங்கும், உறவினர் உதவி. | காலை 6 மணி |
| புதன்- | அந்நியர் சகவாசம், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வியாழன்- | உறவினரால் கஷ்டம், பணச் செலவு | காலை 7 மணி |
| வெள்ளி- | பொருள் வரவு, காரியானுகூலம். | பகல் 1 மணி |
| சனி- | முயற்சி பலிதம், மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 7

அறிந்து கொள்ளுங்கள் — ஆரோக்கியம் பெறுங்கள் — ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ ✚ விந்தைகள்

## உறைபனியில் ஆறு மணிநேரம் உயிருக்காகப் போராடிய குழந்தை

கார்லி கொசோலேஃப்ஸ்கி என்ற 2 வயதுக் குழந்தை 6 மணி நேரம் 40 பாகை உறைபனி அளவுக்குக் கீழ்மட்ட நிலையில் விறைத்துக்கிடந்தது. இருதயத் துடிப்பு நின்று சுவாசமும் நின்றுபோயிருந்தது. ஆனால் பலமணி நேரம் போராடிய மருத்துவர்கள் அக்குழந்தையின் இருதயத்தை ஓடச் செய்ததுடன் சுவாசிக்கவும் செய்து மருத்துவ உலகை வியப்பி லாழ்த்தியுள்ளனர். இச்சம்பவம் இவ்வருட கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் பதிவாக விருக்கிறது.


கார்லியின் தந்தையான ரொபட், கனடாவில் றெஜீனா என்னுமிடத்திலுள்ள தனது வீட்டிலிருந்து அதிகாலை 2.30 மணிக்கு ஒரு பால் பண்ணைக்கு தொழிலுக்காகச் செல்வதுண்டு. வழமைபோல் அன்றும் வீட்டின் அருகேயுள்ள தனது கராஜுக்குச் சென்று தனது மோட்டார் வண்டியில் புறப்பட்டார். தனது 2 வயது மகள் தன்னைப்பின் தொடர்ந்து வந்ததை அவர் கவனிக்கவேயில்லை. அவர் போனபின் குழந்தை கொட்டும் பனியில் வீட்டு வாயிலை அடைந்தது. தானாகவே மூடும் கதவு மூடிக்கொண்டதால் அவள் அழுதும் உள்ளே உறக்கத்தில் கிடந்த அவள் தாயாருக்கு அவள் அழும் குரல்கேட்கவில்லை. தொடர்ந்து கொட்டிய வெண்பனி சார்லியை முற்றுமுழுதாக மூடிவிட்டது.

தாய் காரி காலை 8.00 மணிக்குத்தான் கண்விழித்து குழந்தை கார்லியைத் தேடினாள். பனி உருகத் தொடங்கியபோது உறை பனியில் சிக்குண்டு கிடந்த சிறுமி கார்லியின் சில உறுப்புக்களைக் கண்டதும் திகிலடைந்து கத்தினாள். அயலிலுள்ளவர்களின் உதவியுடன் றெஜீனாவிலுள்ள பிளெயின்ஸ் மருத்துவ மனைக்கு குழந்தையை எடுத்துச் சென்றாள். குளிர்பதனப் பெட்டியில் பல நாட்கள் வைக்கப்பட்டிருந்த இறைச்சித் துண்டுபோல் கார்லியின் உடல் விறைத்துப்போயிருந்தது. அதே மருத்துவமனையின் இருதய சிகிச்சை நிபுணரான டாக்டர் ஜோண் பேர்கஸ் உடனடி சிகிச்சையைத் தொடங்கினர்.

ஒரு மனிதனுடைய உடல் உஷ்ணம் சாதாரணமாக 98.6 பாகை இருக்கவேண்டும். ஆனால், கார்லியின் உடற் சூட்டின் அளவு ஆக 57.2 பாகை மட்டுமே இருந்தது. உடனடியாக செயற்கை இருதயத்துடன் கார்லியின் நாளங்கள் பொருத்தப்பட்டு இரத்தத்தைச் சூடாக்கி மீண்டும் உடலினுட் செலுத்தினர். இருதயத்துக்கும் இருதடவைகள் மின் அழுத்தம் கொடுக்கப் பட்டது. அதுவும் இயங்கத் தொடங்கியதும் உடலில் சூடு 77 பாகைவரை உயர்ந்தது. படிப்படியாக முன்னேற்றம் கண்ட கார்லி 10 வாரங்கள்வரை மருத்துவமனையில் வைக்கப்பட்டாள். இப்பொழுது பெற்றாருடன் சேர்ந்துகொண்டாள். அவளுடைய இடது பாதம் மட்டும் கடும் குளிர் விறைப்பினால் சிறிதளவு பாதிக்கப் பட்டுள்ளதேயல்லாமல் வேறு பிரச்சனைகள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ●



## ஆனந்தமளிக்கும் அருமருந்து



எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பதற்கேற்ற அரிய மருந்தொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. சாதாரண மாத்திரை வடிவில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள இம் மருந்து எந்த வகையான பக்க விளைவுகளையும் ஏற்படுத்தாமல், இதனைப் பாவிப்போருக்கு தொடர்ந்து நான்கு மணி நேரம் மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் தரும் என்று தயாரிப்பாளர்கள் கூறுகிறார்கள்.

மதுபானம் மற்றும் போதைப் பொருட்களைப் பயன்படுத்துவோர் தாங்கள் கவலைகளை மறந்து மகிழ்ச்சியாக இருப்பதற்காகவே அவற்றைப் பயன்படுத்துவதாகக் கூறுவார்கள். ஆனால் இவற்றைப் பயன்படுத்துபவர்கள் அவற்றுக்கு அடிமையாகி விடுகிறார்கள். பக்க விளைவுகளாலும் பாதிப்புக்குள்ளாகி விடுகின்றனர்.

ஆனால் ஆனந்தமூட்டும் மாத்திரை அவ்வாறானதல்ல என்று கூறப்படுகிறது. இதனைப் பயன்படுத்தும் எவரும் தொடர்ந்து நான்கு மணிநேரம் ஆனந்தக் களிப்புடனே இருப்பார்கள். தொடர்ந்தும் அதே நிலையினை அடைய விரும்பினால் அதே மாத்திரையைப் பயன்படுத்திக் கொள்ளலாம். எந்தவிதமான ஆபத்தும் ஏற்படாது.

உற்பத்தி செய்யப்பட்டு பரீட்சார்த்த நிலையில் பயன்படுத்தி வெற்றிகண்ட இந்த மருந்து சந்தைக்கு வருமுன்பே பெரும் எதிர்ப்பினைச் சம்பாதிக்கத் தொடங்கிவிட்டது. இதனை உற்பத்தி செய்ய முயற்சிக்கும் அமெரிக்காவில் மட்டுமல்லாமல் உலகின் பொருளாதாரத்தையே இம்மருந்து ஆட்டிப்படைத்துவிடும் அபாயம் ஏற்படும் என்று பொருளாதார நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

மதுபானங்களை உற்பத்தி செய்யும் பெருமுதலீட்டாளர்களிடமிருந்தே முதல் எதிர்ப்புக்குரல் எழுந்திருக்கிறது. அதுமட்டுமல்லாமல் தொழிலகங்களில் பணிபுரியும் ஊழியரும் தொழிலாளர்களும் ஒழுங்காகத் தங்கள் பணிகளைப் புரியமாட்டார்கள் என்று கூறுவோரும் உளர்.

இம்மருந்தினை உற்பத்தி செய்வோர் இதனை ஏற்க மறுக்கின்றனர். எப்போதும் உற்சாகமுடன் இருக்கும் எவனும் தனது கடமைகளைச் சீராகச் செய்வான் என்று கூறுகின்றனர்.

சந்தைப்படுத்தும் உரிமை கோரும் நிறுவனமும் தங்கள் பெயரை வெளியிட விரும்பவில்லை. இப்பொழுதே பூதாகாரமாகக் கிளம்பியுள்ள எதிர்ப்பினால் விற்பனைக்கு அனுமதி அளிக்கப் படுமா என்பதும் கேள்விக்குறியாகவே இருக்கிறது.



## இருதயக் கோளாறு ஏன்?

நடுத்தர வயதுடையோரை சர்வ சாதாரணமாகத் தாக்கும் நோய் இருதயக் கோளாறுதான். பெரும்பாலான இந்நோய் ஏற்படக் காரணமாக இருப்பது இரத்த நாளங்களில் ஏற்படும் அடைப்பும் குழாய்களில் ஏற்படும் சுருக்கமும்தான்.

இரத்த நாளங்களில் இரத்தம் அதற்குரிய வேகத்தில் செல்லவில்லையானால் பாதிப்பு ஏற்படுகிறது. இருதயமும் தன் இயக்கத்தினை நிறுத்திவிடுகிறது.

இந்நோய்க்கு தற்பொழுது நவீன மருத்துவமுறை ஒன்று நடைமுறைக்கு வந்துள்ளது. அடைப்பெடுக்கும் இடத்தைச் சென்றடையக்கூடியதாக ஒரு சிறு பலூன் போன்ற வஸ்துவை பாதிப்புக்குட்பட்ட நாளத்துக்குள் செலுத்திவிடுகின்றனர். இதனால் நாளம் விரிவடைந்து இரத்த ஓட்டம் சீரடைகிறது.

இருதயக்கோளாறுகள் உடனடி மருத்துவ சேவைக்குட்படுத்தப்பட்டால் நிச்சயம் உயிர் பாதுகாக்க வழியுண்டு. மார்பில் வலி ஏற்பட்டு 90 நிமிடங்களுள் மருத்துவ உதவி கிடைத்தால் நோயாளி பிழைத்துவிட கூடுதலான வாய்ப்பு இருக்கிறது. ●



## படுக்கையில் எது வசதி?

### பிரிட்டன் பல்கலைக்கழக ஆய்வு

தனிமையில் படுக்கையில் தூங்குவோர் நிம்மதியாகத் தூங்குகின்றார்களா? அல்லது பக்கத்தில் ஒருவரை துணையாக வைத்துக் கொண்டு தூங்குபவர்கள் நிம்மதியாகத் தூங்குகிறார்களா? என்ற ஓர் ஆராய்ச்சியினை அண்மையில் நடத்தியிருக்கின்றனர். பிரிட்டனிலுள்ள லௌபரோ பல்கலைக்கழகத்துடனிணைந்த தூக்கவியல் ஆராய்ச்சித்துறையினைச் சார்ந்தவர்களே இந்த ஆய்வினை நடத்தியுள்ளனர்.

இந்த ஆராய்ச்சியின்போது பல்வகை வயதுகளைச் சேர்ந்த பல சோடிகள் பயன்படுத்தப்பட்டனர். இவர்கள் படுக்கும் போது இவர்களுடைய உறக்கத் தன்மையினைக் கணிக்கிடும் சாதனங்கள் உபயோகப் படுத்தப்பட்டன. இவை இந்த சோடிகளின் மணிக்கட்டுகளில் பொருத்தப்பட்டிருந்தன. பெண்களைவிட ஆண்கள், படுக்கையில் துணை இருந்தால், நன்றாகத் தூங்க முடிகிறது என்று பரிசோதனையின் மூலம் காணப்பட்டுள்ளது. இதேவேளை, பெண்கள்—அவர்களைப் பேட்டிகண்டபோது—தாங்கள் ஆண்களால் அடிக்கடி தொந்தரவு செய்யப்படுவதாகத் தெரிவித்துள்ளனர்.

பொதுவாகக் கிடைத்த தரவுகளின் படி பார்த்தால், படுக்கையில் தனிமையில் படுப்பவர்களே நிம்மதியாக உறங்க முடிகிறது என்று கணக்கிடப்பட்டுள்ளது. தங்கள் படுக்கையில் மற்றுமொருவர் படுப்பதனால் ஒருவகை 'பாதுகாப்பு' நிலை கிடைப்பதனால் நிம்மதியான உறக்கம் கிடைக்கிறது என்று பலர் தெரிவித்துள்ளனர். இதுகால வரை ஒரு துணையுடன் படுத்துறங்கியோரில் 44 சதவிகிதமானோர் தனிமையில் படுப்பதையே விரும்புவதாகக் கூறுகின்றனர். ■

## கொல்பவனை கிரைம்+காதல் கொள்ளையடித்த பெண்

போல் பிராண்டோவுக்கு 29 வயது. அழகான மனைவியும் இருக்கிறாள். போல் பிராண்டோ கணக்கியலில் படு கெட்டித்தனம் உள்ளவன். எந்தக் கணக்கையும் உடனே முடித்து விடுவான். அவனது சொந்தக் கணக்கில் இரு அழகிகளை கொலை செய்த விபரமும் மகா இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.



போல் பிராண்டோ

ஆனால் பொலிஸ் தூங்காமல், சோராமல் துப்பறிந்து போல் பிராண்டோவின் கெட்ட நேரம் ஒன்றில் அவனை வசமாக பிடித்து விலங்கு மாட்டிவிட்டது.

பிராண்டோவால் கொல்லப்பட்ட இருவருக்கும் சின்ன வயது. ஒருத்திக்கு 14 மற்றவளுக்கு 15.

கரும்பைச் சுவைத்துவிட்டு சக்கையைத் துப்புவதுபோல இரு பெண்களையும் பிராண்டோவின் வெறி சப்பிவிட்டுத் துப்பிவிட்டது.

கனடா நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட பிராண்டோ வெகு சுவாரசியமாக 'சுவிங்கம்' மென்றுகொண்டு "கொலையா? நானா? நோ" என்று மறுத்துவிட்டான்.

உடனே பொலிஸ் இன்னொரு திடுக்கிடும் விபரத்தை தூக்கிப்போட்டது.

பிராண்டோவின் மனைவியும் கொல்வதில் வல்லவள்.

திருமதி.பிராண்டோவும் கொலைக் குற்றத்திற்காக இருப்பது சிறையில்தான்" என்றது பொலிஸ்.

அவனுக்கு கிடைத்திருப்பது 12 வருட சிறைத் தண்டனை.

விபரங்கள் பத்திரிகைகளில் வெளிவர, படித்தவர்களுக்கு அதிர்ச்சி.


ஆனால் 'லோரி' என்னும் அழகான பெண்ணுக்கு மட்டும் பிராண்டோமீது பயம் ஏற்படவில்லை. பக்தி ஏற்பட்டது. கோபம் வரவில்லை. மோகம் வந்தது. ஓடினாள். பிராண்டோ நீதிமன்றத்திற்கு



கொல்லப்பட்ட அழகிகள்

கொண்டுவரப்படும் நாள் அறிந்து ஓடினாள்.

பிராண்டோவை ஏற்றிவந்த பொலிஸ் வாகனத்தைக் கண்டதும் லோரி விழுந்தடித்து ஓட, பிராண்டோவை பழிவாங்க 'ஒரு பெண் வருகிறாளாக்கும் என்று பொலிசார் வண்டியை வேகமாக்க முயல— அவளோ வண்டியின் ஒரு பகுதியைப் பிடித்து தொங்கிக் கொண்டு, "பிராண்டோ ஐ லவ் யூ." என்று கத்திக்கொண்டிருந்தாள்.



லோரி

"இவள் கொல்ல வரவில்லை. அவன் நெஞ்சை அள்ள வந்திருக்கிறாள்" என்று தெரிந்ததும் பொலிசார் நிம்மதியாக வாகனத்தை நிறுத்திவிட்டு, லோரியை விசாரித்தனர்.

லோரிக்கு 27 வயது. அசத்தலான அழகி. பிராண்டோவை காதலிப்பதை எங்கு வேண்டுமானாலும் சத்தியம் பண்ணிச் சொல்லத் தயார் என்கிறாள். பிராண்டோவுக்கும் அவளைப் பிடித்திருக்க வேண்டும்.


வாகனத்திற்குள் இருந்து கையசைத்து காற்றில் ஒரு முத்தத்தை பறக்கவிட, லோரி அதனைக் கப்பென்று தன் உதட்டால் 'காட்ச்'பிடித்துக்கொண்டாள்.

இப்போது பிராண்டோ வெளியில் வரட்டும் என்று லோரி காத்திருக்கிறாள். கலர் கலராய் கனவு காணுகிறாள்.

## ♥♥♥ சபாஷ் ♥♥♥

சுவை. . யான போட்டி

## அமோகமான 55 நாட்கள்




பிரேசில் நாட்டில் சன்ரோஸ் நகரில் காதலர் இருவருக்கு கட்டுக்கடங்காத ஆசை. சாதனை படைக்க வேண்டும் என்பதே அந்த ஆசை.

ஜவின்ஸ் என்பது காதலன் பெயர். மரிக்சோ ஜோஸ் என்பது காதலியின் பெயர்.

"என்ன சாதனை செய்யலாம்?" என்று கேட்டான் ஜவின்ஸ்.

"செய்யலாம். இருவரும் சேர்ந்தே செய்தால் நன்றாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். நீ என்ன நினைக்கிறாய்?" இது மரிக்கோ. இருவரும் பலத்த யோசனையில் குதித்து இறுதியில் ஒருமித்த முடிவுக்கு வந்தனர்.

தொடர்ச்சியாக 55 நாட்கள் முத்தமிட்டு கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடிப்பது.

முடிவு அரங்கேறியது. நாமும் வருகிறோம் என்று 25 ஜோடிகளும் அவர்களோடு மேடையில் ஏறினார்கள்.

காலை பத்துமணி முதல் இரவு பத்துமணி வரை முத்தமிட்டபடி இருக்கவேண்டும். இடையிலே உணவு உட்கொள்ளவும், ஓய்வும் சில நிமிடங்கள் மட்டும் ஒதுக்கப்படும்.

உற்சாகமாக ஆரம்பித்த 25 ஜோடிகளும் இடைநடுவில் மெல்ல நழுவிக்கொண்டனர்.

ஆனால் ஜவின்சும், மரிக்கோவும் சற்றும் மனம் தளராமல் 55 நாட்கள் முத்.....முத்..முத்..833 மணி 45 நிமிடம்.

பல்லாயிரக் கணக்கானோர் முன்னிலையில் சாதனை படைத்த ஜோடிகளின் வயது 20. விரைவில் கோலாகலமாக திருமணமும் நடக்கப்போகிறது. அதன்பின்னர் என்ன சாதனை படைக்கப் போகிறார்களோ? ●

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# கொலை விழும் நேரம்

## எழுதுவது —ரசிகன்



பின்னால் ஓடிவந்த காயத்திரியை திரும்பிப்பார்த்து வரட்சியாய் புன்னகைத்தாள் இந்திரா. பின்னர் திரும்பி காஸ் அடுப்பை நோக்கிப் போனாள்.

காஸ் அடுப்பை திறந்தாள். காஸ் மணம் நாசியைத் தொட்டது.

எந்த நேரமும் அவளை பாய்ந்து கெட்டியாக அமுக்கும் தயார் நிலையில் நின்று நெஞ்சில் பதட்டத்தோடு கவனித்துக் கொண்டிருந்தாள் காயத்திரி.

இந்திரா நிதானமாக அடுப்பை பற்றவைத்தாள்.

காயத்திரிக்குள் அலாரம் அடித்தது. வன்.ரூ.திறீ. இந்திரா தற்கொலைக்கு தயாராகிறாள். விடாதே மடக்கு.

நெஞ்சுக்குள் அலாரம் தந்த எச்சரிக்கை வாங்கி காயத்திரி பூனைபோல் பாதம் வைத்து இந்திராவின் அருகே போனாள்.

இந்திரா அடுப்பில் 'கேத்தல்' தூக்கி வைத்தாள்.

"என்ன காயத்திரி! தற்கொலை செய்யப் போகிறேன் என்று நினைத்துத்தானே பின்னால் ஓடிவந்தாய்? இப்போது பெரிய ஏமாற்றமாகிவிட்டது பார்த்தாயா?"

கேட்டாள்.

"நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏதுமில்லை..." தன் பாணியில் பாடிக்காட்டினாள்.

"கற்பனை உபயம் கண்ணதாசன், கருத்து ஏ வன்."

சொல்லியபடியே தேநீர் தயாரித்தாள்.

காயத்திரிக்கு யோசனையாகியது. 'திடீரென்று என்ன இவளுக்கு? பைத்தியம் கியித்தியம் ஏதாவது?

'மூளை பிசகிவிட்டதா? சகோதரபாசம் பிரிவைத் தாங்காமல்..'

இந்திரா அழுதுகொண்டிருப்பதே இதைவிடப் பரவாயில்லையோ என்று காயத்திரி பயந்து யோசித்தாள்.

காயத்திரி வார்த்தை இந்திராவின் காதில் ஏறியிருக்காது.

எதிரியாக நினைக்கப்பட்டபின் ஆறுதல் சொல்வது ஏற்கப்படாது. ஒவ்வொரு வார்த்தையும் மறு தரப்பால் சந்தேகக் கண்ணோடு துருவப்படும்.

வருந்துகிறேன் என்று சொன்னால்,

உள்ளே மகிழ்கிறாளோ என்று இந்திராவுக்கு யோசனை வரும். கேலி செய்கிறாள் பார் என்று கோபம் வரும்.

'நடிக்கிறாள் பார்' என்று வெறுப்பு அலை மோதும்.

எனவே-காயத்திரி இந்திராவுக்கு ஆறுதல் சொல்லாமலிருந்தாள்.

எனவே-காயத்திரி இந்திராவிடம் தனது தரப்பு நியாயம் எடுத்துச் சொல்ல முடியாதவளாக இருந்தாள்.

எனவே-காயத்திரி இந்திராவை அவள் போக்கில் விட்டுப்பிடிக்க வேண்டிய நிலையில் தவித்தாள்.

"சீனி அதிகம் போடவா? குறைத்தா?"

'இது என்ன கேலியா? என் அண்ணன் பொலிசில் மாட்டியது உனக்கு சந்தோசம் தானே ராட்சசியே' என்று கேட்பது போன்றதா? காயத்திரி குழம்பினாள் எனினும்,

"அளவாகப் போடு. நன்றி,"

என்றாள் இந்திராவின் முகத்தை ஆராய முயன்றபடி.

இந்திரா முகத்தில் வரட்சியாய் தெரிந்தாள்.

அழுதால் சோகம் கழுவப்படும். பஞ்சால் காயத்தில் ஒற்றுவதுபோல ஆறுதல் சொல்வதும் மனக் காயம் ஆற்றும். சில நேரத்தில் ஆறுதல் சொல்வதே மேலும் சோகத்தை தூண்டிவிடவும் செய்யும்.

ஆறுதல் சொல்வதற்கும் பக்குவம் வேண்டும்.

எப்படி ஆறுதல் சொல்வது என்ற வித்தை தெரிந்திருக்கவும் வேண்டும்.

'உன் அண்ணா இன்று எப்படியெல்லாம் கஷ்டப்படுவான். பொலிஸ் என்ன பாடு படுத்தும்? நினைத்தால் எனக்கும்தான் அழுகையாக வருகிறது. என்ன செய்வது அழுதால் சரியாகிவிடுமா? அழாதே'

என்று ஆறுதல் சொல்ல மேலும் சோகம் கொட்டவே செய்யும்.

'அழாதே! இது சகஜம்! இப்போது என்ன நடந்துவிட்டது? பார்க்கலாம். உஷாராக இரு.'

என்பதே தேவையான ஆறுதல். அழுகிறவனை மேலும் அழவைக்கும் ஒப்பாரி தேவையில்லை.

சோகத்தை பகிர்ந்துகொள்ள ஒப்பாரியும் வேண்டும்தான். அது ஓரளவோடு போதும்.

எழவைக்க தட்டிக்கொடுக்கும் பேச்சுத் தேவை. உருவி விடுவதுபோல மனம் பிடிப்பை உருவிவிட்டு நேர்படுத்தும் ஆறுதல் சொல்ல பக்குவம் தேவை. பக்குவம் பெற அனுபவம் தேவை.

ஆனால்-காயத்திரிக்கு அனுபவம் போதாது. அனுபவம் இருந்திருந்தால்கூட ஆனால், இயல்பாகவே நடந்து கொண்டாள்.

தேநீர் தயாரித்து காயத்திரிக்கும் தனக்கும் இரு கோப்பைகளில் ஊற்றிக்கொண்டு, ஒன்றை எடுத்து காயத்திரியிடம் நீட்டியபோது முகத்தில் விரோதம் இல்லை.

காயத்திரி வாங்கிக்கொண்டு, 'நன்றி' சொல்லி, இந்திரா தேநீர் கோப்பையை எடுத்து உறிஞ்சும்வரை காத்திருந்து தானும் உறிஞ்சினாள். தேநீர் சுவையாக இருந்தது.

இந்திரா ஒருதரம் உறிஞ்சி சுவையை இரசித்துவிட்டு,

"காயத்திரி உனக்கு நிறைய ஆச்சரியம்; குழப்பம்; யோசனை எல்லாம் வந்திருக்குமே?"

என்றாள். அப்படித்தான் என்று ஆமோதிப்பது போல இந்திராவைப் பார்த்தபடி தேநீர் கோப்பையின் விளிம்பை உதட்டால் கௌவினாள் காயத்திரி.

இந்திரா தேநீரின் இதமான சூட்டை உள்வாங்கிக்கொண்டு, தேநீர் கோப்பையை வைத்துவிட்டு,

"அழுதால் மனச் சுமை தீரும் என்று கேள்விப்பட்டிருக்கிறாயா காயத்திரி?"

அதற்கும் தலையசைத்து ஆம் என்பது போல் சைகை செய்தாள் காயத்திரி.

"ஆனால் பார் காயத்திரி, நான் அழுத போது சுமை மட்டுமல்ல, சந்தேகம், கோபம், வெறுப்பு யாவுமே இறங்கிக் காணாமல் போய்விட்டன."

காயத்திரி இந்திராவைச் சந்தேகமாய் ஏறிட்டுப் பார்த்தாள்.

"நம்பவில்லையா? நம்பமுடியவில்லையா காயத்திரி?"

என்றாள் இந்திரா, அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாமல்,

"என்ன சந்தேகம்? என்ன கோபம்? யார் மீது?"

என்றாள் காயத்திரி. இந்திரா தன் சுட்டுவிரலை காயத்திரியின் மார்புக்கு நேராக நீட்டி,

"உன்மீதுதான்!"

என்றாள். சிரித்தாள். வரட்சியில்லாமல் சிரித்தாள். முகத்தின் ஒரு பக்க கொடூரம்கூட உறுத்தாமல் அழகாய் தெரிந்தாள்.

"என்மீதா?"

ஆச்சரியப்பட்டுக் கேட்டாள் காயத்திரி. இந்திரா பதிலுக்குச் சிரித்துவிட்டு,

"உன்மீதல்லாமல் வேறு யார் மீது? காயத்திரி! உன்னை நேரில் காணும் முன்னரே உன்னைப்பற்றி அறிந்திருக்கிறேன் நான். என்னைப் பற்றியும் அறிந்துவைத்திருக்கிறாய் நீ. என் கதை உனக்குத் தெரியும். சில வரிகள், அல்லது சில பக்கங்கள் தவிர மீதிக் கதை முழுக்க உனக்குத் தெரியும். உனக்குத் தெரியும் என்று ஆரம்பம் முதலே எனக்கும் தெரியும். அப்படியிருக்க ஏன் என் அண்ணாவை நீ காதலித்து, கதை கேட்டு, ஐ.மீன் மூக்கைத் தொட தலையைச் சுற்றி... ஏன் காயத்திரி...ஏன்? என் மனதைக் குடைந்த இந்தக் கேள்விக்கு விடை கிடைத்துவிட்டது. எப்போது தெரியுமா? சற்று முன்புதான்."

இந்திராவின் குரலில் ஒரு குழந்தையின் குதூகலம் தெரிந்தது.

காயத்திரி அவளை புதிராகப் பார்த்து,

"எனக்கு எதுவும் புரியவே இல்லை இந்திரா. ஐ.நோ. ஐ.நோ."

என்றாள். தலையை இருபுறமும் அசைத்து உதறிக்கொண்டாள்.

இந்திரா முன்னே நகர்ந்து காயத்திரியின் இடது கர மணிக்கட்டில் பிடித்தாள்.

"வா."

என்றாள்.

"எங்கே?"

இந்திரா அந்தக் கேள்விக்கு உடனே பதில் சொல்லாமல் சிரித்தாள்.

□□

"என்ன சொல்கிறீர்கள் டி.ஐ.ஜி?"

என்றாள் பிரியா பசுபதி. குரலில் பயம் தொற்றியிருந்தது.

"கொலையாளி ஏன் நீயாக இருக்கக் கூடாது என்று கேட்டேன்,"

என்றார் டி.ஐ.ஜி.டென்சில் கொஞ்சம் புன்னகைத்தபடி.

குலாம்ஷா உள்ளே வந்து முதுகில் துளைபோடப்பட்டு, துளை வழியாக இரத்தம் சிந்திக்கொண்டிருந்த சாரங்கன் அருகே குனிந்து-

அவனை மல்லாக்கத் திருப்பி, மூக்கருகில் கை வைத்துப் பார்த்துவிட்டு,

டி.ஐ.ஜி.டென்சிலை நிமிர்ந்து பார்த்து,

"படு சுத்தம்."

என்றார்.

"வாழ்க அவன் நாமம்."

என்று கேலியாகச் சொன்ன டி.ஐ.ஜி.டென்சிலை பயத்தோடு பார்த்துக் கொண்டிருந்த பிரியாவை விட்டு விலகி,

நிர்மலா மறைந்திருந்த அறையை நோக்கி டென்சில் செல்ல,

இதுவரை வெளியே நடப்பவை யாவும் திறப்புத் துவாரம் வழியாக கவனித்தபடி குனிந்திருந்த நிர்மலா, சட்டென்று நிமிர்ந்து விலகிப் போய் நின்றாள்.

டி.ஐ.ஜி.கதவு தட்ட, சற்று தாமதித்து வந்து கதவு திறந்து, ஆச்சரியம்போலப் பார்க்க முயல,

"என்னம்மா நிர்மலா! சாவித்துவாரம் ரொம்ப வசதியாகிவிட்டது இல்லையா?"

என்றார் கேலியாக. நிர்மலா மனதிற்குள் தன் தலையில் குட்டிக்கொண்டாள்.

குலாம்ஷா சாரங்கன் உடல் அருகே நின்று சுற்றிலும் நோட்டமிட்டு,

"நிம்மி உனக்குத் தெரிந்தவன்- வேண்டப்பட்டவன் செத்துக்கிடக்கிறான். சோகமே இல்லையா உனக்கு?"

என்று கேட்டபடி காரியவாசத்தின் உடல் மறைக்கப்பட்டுக்கிடந்த அறையை நோக்கிப் பார்த்து,

"அந்த அறையில் யாராவது இருக்கிறார்களா பிரியா?"

என்றார். பிரியா முழுவதும் அதிர்ந்து. ஆனாலும் அதிர்ந்தது வெளியே காட்டாமல்,

"இ...தெரியாது. இல்லை"

என்றாள். டி.ஐ.ஜி. உடனே நகைக்க, பிரியா அவர் முகத்தை பார்த்தாள்- திகில் படம் பார்ப்பது மாதிரி.

டி.ஐ.ஜி. டென்சில் பிரியாவையும் குலாம்ஷாவையும் பார்த்துக்கொண்டு,

"குலாம்ஷா! பிரியா சொன்னது நூறு வீதம் சரி. அறையில் யாரும் இல்லை. அதாவது உயிரோடு இல்லை."

குலாம்ஷா திரும்பி பிரியாவை 'உண்மையா?' என்பது போல பார்வையால் கேட்க,

பிரியா அவர் பார்வையில் இருந்து தன்னைத் தவிர்த்துக் கொள்ள முயல,

"பிரியா பதில் சொல்லப் பிரியப்படவில்லை குலாம்ஷா. ஏன் என்றால் கொலைக்கு காரணம் தாய்க்குலம் அல்லவா? கையும் களவுமாய் மாட்ட விரும்புவாளோ? நோ! சோ.... பதில் சொல்ல மாட்டாள் பிரியா."

குலாம்ஷா மூடியிருந்த அறை நோக்கி முன்னேற,

டி.ஐ.ஜி. தடுத்து,

"டியர் மிஸ்டர் குலாம்ஷா! உங்கள் அருமை சிநேகிதி உங்களுக்கே உண்மை சொல்லவில்லை பார்த்தீர்களா?"

பிரியா இப்போது வாய் திறந்தாள்.

"டி.ஐ.ஜி. நீங்கள் ஆதாரம் இல்லாமல் பேசுவதற்கு எல்லாம் நான் பதில் சொல்ல வேண்டும் என்று அர்த்தமில்லை."

டி.ஐ.ஜி. கோபப்படாமல் புன்னகை மாறாமல்,

"ஓஹோ.. அப்படியா பிரியா? ரைட்! காரியவாசத்தை சுட்டது யாரம்மா?"

பிரியா முகத்தில் எந்த சலனமும் இல்லாமல்,

நிர்மலாவைப் பார்த்தாள். பின்னர் குலாம்ஷாவைப் பார்த்தாள்.

குலாம்ஷா பிரியாவையே பார்த்துக் கொண்டிருந்தார்.

பிரியா டி.ஐ.ஜியின் பக்கம் முகத்தைத் திருப்பி, நிதானமாக-

தன் ஐந்து விரல்களில் கட்டை விரலுக்கு அடுத்த விரலால்-

குலாம்ஷாவைக் காட்டினாள்.

"இவர்தான் சுட்டார்."

என்றாள்.

டி.ஐ.ஜி. குலாம்ஷாவைப் பார்க்க, குலாம்ஷா-

"யெஸ்... பிரியா சொல்வது நூற்றுக்கு நூறு உண்மை."

என்றார்.

(தொடர்ந்து வரும்)

> "உண்மையில் பொய்யும் உறைவது கண்டேன்
> நன்மையில் தீமை நிறைவது கண்டேன்
> உள்ளத்தில் ஏதோ மலர்வதைக் கண்டேன்
> உறவின் மேன்மை பிரிவினில் கண்டேன்!"
>
> -கவியரசு கண்ணதாசன்-






## அரங்கம்



பெயர்: எஸ். பாஸ்கரன்
முகவரி: 234/5, மகியங்கனை வீதி, பதுளை.
பொழுதுபோக்கு: வானொலி, கதைப் புத்தகம், பேனா நட்பு.




பெயர்: கே.ரமீஸ்
வயது: 17
முகவரி: இலந்தையடி வீதி, நுரைச்சோலை, புத்தளம்.
பொழுதுபோக்கு: வழமையானவை.




பெயர்: எம்.இம்ரான்
முகவரி: 16, தெகியங்க, முறுத்தலாவ.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, பேனா நட்பு.


## பேனா நண்பர்




பெயர்: எஸ். கதிரேசன்
வயது: 24
முகவரி: 104/425, போர்ட் கொமிஷன் றோட், பேரிகாட, வெல்லம்பட்டிய.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி.




பெயர்: எம்.ரிஸாபி
முகவரி: 'ருஸ்மி விலா', 73, புஞகொஹதென்ன, அக்குறணை.
பொழுதுபோக்கு: முத்திரை சேகரித்தல், பேனா நட்பு.




பெயர்: ஏ.அனிதா
வயது: 35
முகவரி: 1150, 10ம் கொலனி, முள்ளிப்பொத்தானை.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, பேனா நட்பு.



பெயர்: சுபைதா
முகவரி: 87/2, பேராறு, கந்தளாய்.
பொழுதுபோக்கு: வானொலி, நண்பர்கள் தொடர்பு, வீட்டுத் தோட்டம்.



பெயர்: எஸ்.சிவகுமார்
முகவரி: F.A.A.C.CO.W.L.L. P.O.BOX-25809 SAFAT-13119 KUWAIT.
பொ.போ: பத்திரிகை, புத்தகம் வாசித்தல், பாடல்கள் கேட்டல்.



பெயர்: எம். சலீம்
வயது: 27
முகவரி: Lab Department, P.O.BOX-30537, Yanbu, Al-Sinayah,K.S.A.
பொ.போக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி, நண்பர்கள் தொடர்பு, கிரிக்கெட்.

பெயர்: கிருஷ்ணகுமார் ஆனந்தன்
வயது: 15
முகவரி: பிரதான வீதி, பாண்டிருப்பு-01, கல்முனை.
பொ.போ: வழமையானவை.

பெயர்: கே. முகமட் நஸார்
வயது: 15
முகவரி: 65, தேசிய வீடமைப்புத்திட்டம், உப்புவெளி, திருகோணமலை.
பொ.போக்கு: கிரிக்கெட், உதைபந்து விளையாடுதல், வானொலி, பத்திரிகை.

பெயர்: கே.புலேந்திரன்
வயது: 24
முகவரி: Ministry of Defence Aviation, P.O.BOX-58952, Riyadh 11515, K.S.A.
பொ.போ: வழமையானவை.

பெயர்: எச்.மொகமட் நசீர்
வயது: 19
முகவரி: 253/ஏ, ஆர்.ஏ.டி. மெல் மாவத்தை, கொழும்பு-03.
பொ.போ: பேனா நண்பர் தொடர்பு, வானொலி கேட்டல்.

பெயர்: என்.யோகச்சந்துரு
வயது: 23
முகவரி: 167, காலி வீதி, மொரட்டுவை.
பொ.போ: வானொலி, பத்திரிகை.

பெயர்: கே. நஸீர்கான்
வயது: 19
முகவரி: முஸ்லிம் பள்ளி, பம்பரகடுபத, கலேவல.
பொழுதுபோக்கு: பத்திரிகை, நண்பர் தொடர்பு.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

# சுகமான சோகங்கள்

-ஓட்டமாவடி அறபாத்-

> “அவளன்றி வேறுயாரும் பேசியிருந்தா இப்படி மனது துடித்திருக்காது. இதயம் கனத்திருக்காது.”

**வா**கநேரி குளம் நிரம்பி வழிந்தது. தோணிகளின் அணிவகுப்பில், அது பூரித்துப்போய் கிடந்தது. கரையை தடவிச் செல்லும், சிற்றலையின் ஸ்பரிசம், சுற்றிவர அடுக்கி இருந்த கற்களுக்கு சுகமாக இருந்தது போல், அது சும்மா கிடந்தது. நுரைப் பூக்கள் கரையெங்கும் குவியலாக வெண் பஞ்சுத் திடலாக திரண்டு கிடந்தன. 'நனையா வெராட்டி'கள் அசைந்தாடும் அலைகளின் மடியில் இதமாக ஆடிக்கொண்டிருந்தன. குளக்கட்டு நெடுக ஓங்கி வளர்ந்த பனைகள் ஒய்யாரமாய் நெஞ்சு விரித்து நின்றன. குளத்துக்கு அப்பால் வளைந்து நெளிந்து, சங்கீதம் பாடி சலசலக்கும் சிற்றருவி. அவன் நுரைகளை மிதித்து மிதித்து நடந்து கொண்டிருந்தான். சவர்க்காரம் பூசியதான வழுக்கலாய் கெண்டைகால்கள் பிசுபிசுத்தன.

தூரத்தில் சிறுவர்கள் 'ஆள்காட்டி' முட்டை தேடி, பரபரப்பாய் இயங்கிக் கொண்டிருந்தனர். அது முட்டையை இட்டு, சிறு கற்களினால் மூடி வைத்து விடுமாம். அவர்கள் குவியலாய் கிடக்கும் சிறு கற்களை ஆவலாய் நெருங்குவதும், மெல்ல அகற்றி, ஏமாற்றி பின் வேறிடம் என்று அலைவதும் வேடிக்கையாய் இருந்தது. மீன் கொத்தி ஒன்று இவன் தலையை உரசிக்கொண்டு, குளத்துக்குள் குதித்து, போன வேகத்தில் இரையுடன் திரும்பியது.

அவன் எண்ணங்களின் சூட்டில் விபரிக்க முடியாத அவஸ்தையான நெருடல்கள். நேற்றைய நிகழ்வுகளின் வெப்பம் இன்னும் அவிந்துகொண்டு தானிருந்தது. மீன் வருமென்று தவம் கிடந்த வெள்ளை கொக்கு அவன் வரவு கண்டு வேறிடம் மாறி பறந்து சென்றது. அவளுக்கு என்ன நடந்தது. ஏன் அப்படி மிருகத்தன மாய் நடந்துகொண்டாள். நினைக்க நினைக்க நெஞ்சு புடைத்தது.

ஒருவேளை என்னை வெறுத்து ஒதுக்க முடிவெடுத்துவிட்டாளோ? 'சே' இருக்காது. முட்டாள் தனமான சிந்தனைகளும் அபரிமித மான கேள்விகளும் மாறிமாறி மனதின் இறுக்கத்தை தளர்த்திக்கொண்டிருந்தன. நனையாவெராட்டி காலில் சிக்கியது. அதை எடுத்து தூர வீசிவிட்டு, குளக்கட்டில் ஏறி ஏகாந்த வெளியை வெறித்தான். பனை நெடுக நுங்கு கிடந்தது. குடிப்பதற்கு ஆசையாகவும் இருந்தது.

முன்பென்றால் நுங்குகளின் மேல் கொள்ளை ஆசை. அவளுக்கும் அப்படித் தான். சாரத்தை மடித்துக்கட்டி, அவதான மாய் பனைமரம் ஏறி இறங்கிவிடுவான். வானத்தை வெறித்தான். அலையலையாய் நீர்க்காகங்கள் பறந்து வந்தன. திணையான் குருவிக்கூட்டம் தாழப் பறப்பதும், மேலெழு வதுமாய் ஜாலம் காட்டின.

கன்னக் கதுப்பில் சூடாய் ஓடியது கண்ணீர். பத்து வருட பிணைப்பில் சிறுபார்வையால்கூட, ஏளனம் செய்யாதவள்– நேற்று.....அதை நினைவுக்கு கொண்டுவர மனசு வெடிக்கும் போல் இருந்தது. எத்தனை எதிர்ப்பினை வெற்றிகொண்டு, இமயத் தடைகளை தாண்டி, அவளும், அவனும் இணைந்து இல்லறம் என்ற கூட்டுக்குள் சிட்டுக் குருவிகளாய் குதா கலித்து.: எல்லாமே நேற்றுடன் மங்கிவிட்டன. திடீரென தாஜ்மஹால் உடைந்ததான அதிர்ச்சி அவனுக்குள். 'முள் குத்திய வலிபாதி முள்ளெடுத்த வலி மீதி' என்பதாய் கஷ்டப்பட்டாள். அவளா இப்படி பேசினாள்? நேற்று அந்த விழிகளில் தெரிந்த இகழ்ச்சியும், கொடூரமும், ஏளனமும் என்னமாய் அவனை குறுக வைத்தது. ஒரு புழுவைப்போல துடிக்க வைத்தது. அடி மனத்தின் ஆழத்தில் அந்த கசப்பான நிகழ்வை பதுக்கிக் கொண்டுதான் என்னுடன் வாழ்ந்தாளா? எங்க மார்க்கத்துல சாதி இல்லண்டு, சொன்னவள் தன் புருஷனையே தலைகுனிய வைத்துவிட்டாளே!

அவளைப் பார்க்கவேண்டும்போல் தேகமெங்கும் ரணங்கள்.

அவளை முதன் முதல் இரயில் பயணத்தில் சந்தித்ததும், பின் கிழக்கு பல்கலைக்கழக 'ராக்கிங்' தொல்லையில் அவனிடம் அவள் சிக்கியதும், பொத்தி வைத்து 'ராக்கிங்' தொல்லைகளில் இருந்து காப்பாற்றியதும், காதல் மலர்ந்ததும் இன்ப மயமான பொழுதுகளும் நினைவில் எழுந்தன.



**இரவிரவாய்**
**புகையிரம்,**
**இருள் கிழித்து ஓட**
**இருவர் மனக் குரங்குகளும்**
**எங்கேயோ தாவ**
**உறங்காமல்**
**என் இதயம்**
**உன்னுடனே பேச,**
**இறங்காமல் நீ வந்து**
**இதயமெல்லாம் உரசி**
**சுணங்காமல் போய் விட்டாய்**
**காதல் மொழி பேசி!**

“ஆட்டோகிராபில் அவள் பொறித்த வைர வரிகள் அவனுக்குள் இரை மீட்டப் பட்டன. பட்டப்படிப்பு முடிந்து, பிரியும் அந்த கொடூர நாளில் அவர்கள் அனுபவித்த வேதனைகள், சோகம் பூசிய பார்வைகள், சிறு குழந்தையைப் போல் அவள் அழுத அழுகைகள். விம்மலினூடே அவன் நெஞ்சில் படர்ந்து கரம் தொட்டு செய்த சத்தியங்கள் எல்லாமே போலியோ, அல்லது இளமைத் துடிப்பின் வெற்று வசனங்களோ.....?

“ஆனந்த் என்ன மறந்துடுவீங்களா...? உங்கள நான் நம்பலாமா?”

“இஞ்சபாரு ஜெஸீ, நீயில்லாம என்னால வாழ முடியாது. உனக்காக என் மதத்தகூட, உதறிட்டு வந்துட்டன். ஆனா உண்ட சமூகம் என்ன ஏத்துக்குமா”?

“முயற்சிப்பன். முடியாட்டி, நீங்க எங்க கூப்பிட்டாலும் உங்ககூட ஓடிவந்து வாழ்ந்து காட்டுறன்.” அவள் வீட்டில் இவர்கள் உறவு வெடிக்க, பூகம்பம் எழும்பி பூதாகார மாய் நின்றது. ஆனந்த் பயங்கரவாதி என்று இராணுவத்திடம் கொடுக்கப்பட்டதும், அவள், வழக்குத் தொடர்ந்து வாதாடி, அவனை விடுவித்து, ஊரைவிட்டு, உறவு மறந்து, அவனுடன் ஓடிப்போனதும், போலியென்று அவனால் ஜீரணிக்க முடியவில்லை.

எவ்வளவு பெரிய தியாகி அவள். இன்பகரமான வாழ்வையும், சமூக உறவு களையும் வீசிவிட்டு, என்னுடன் வந்து இருந்தது. திருமணமான இத்தனை வருஷத் திலும் விழுந்திராத பெரிய திரை இது. அவளின் அந்த வார்த்தைகள் சூடேற்றிய இரும்புக் கம்பிகளாய், பழுக்கக் காய்ச்சிய இரும்புப் பாளமாய் இதயத்தை துளைத்து இம்சைப்படுத்தின. இரவு பள்ளியில் படுத் துறங்கி காலையில் இருந்து ஒன்றுமே ஆகாரம் உண்ணாததால் மயக்கம் வருவது போல் இருந்தது. வானத்திலும் இருள் படர்ந்தது. குளக்கட்டில் உட்கார்ந்திருந்ததால் இலேசாய் இடுப்பு வலித்தது. அவன் அமர்ந்திருந்த இடத்தருகில் பனைமரத்தி லிருந்து காய்ந்த பனையோலை ஒன்று சரசரத்து விழுந்தது. அவன் எழும்பி வீட்டை நோக்கி நடந்தான். நீரினுள் அமுக்கிய இறப்பர் பந்தைப்போல் எகிறி வந்து மீண்டும் அந்த சுடு சொற்கள் நாசூக்காய் • அவள் வார்த்தைகளில் தடவிய விஷக் கொழுப்பு புற்றினுள் இருந்து எட்டிப் பார்த்து ஓடும் உடும்பைப்போல, வருவதும் போவதுமாய் பழிப்புக் காட்டின. நேற்றைய நிகழ்வின் சுவாசம் மெல்ல தலைவிரித்தது...

“என்னங்க, இன்னிக்கு வெள்ளிக்கிழமை பள்ளிக்குப் போகலியா?”

“போவணும், கொஞ்சம் புள்ளய புடிங்க கூல்ட்றிங்ஸ் கலந்துட்டு வர்றேன்.” “நான் ட்றெஸ் பண்ணிட்டு நிற்கன் கெதியா வா. இல்லாட்டி என்னய உண்ட மகள் நனச் சிடுவா” அவள் சற்று தாமதித்துதான் வந்தாள். வருவதற்குள் குழந்தை சிறுநீர் கழித்துவிட, இவனுக்கு கோபம்வர குழந்தையை தடாரென கீழே வைத்துவிட்டு, செல்ல, பக்கத்திலிருந்த தள்ளுவண்டியை மழலை இழுத்து, அது கவிழ, நெற்றியில் இலேசான கீறல் விழுந்து இரத்தம் கசிந்தது.

ஜெஸீமா விழுந்தடித்துக்கொண்டு ஓடி வந்தாள். அவளுக்குள் ஆவேசம். குழந்தைப் பாசத்துடன், கசிகின்ற இரத்தமும் சேர்ந்து, கோபாக்கினியை மூட்டிவிட, சுட்டெரிப்பது போல் அவனைப் பார்த்தாள்.

“மூத்திரம் பேஞ்சா இப்படி போட்டுட்டு போறதா?” “பிறகென்ன பள்ளிக்கு போற டைமும் பாஸ், இந்த சனியன் செஞ்ச வேலையால”, “ஏன் இப்படி பேசுறிங்க? ஈமான் இஸ்லாம் தெரிஞ்சாதானே அதான் இப்ப அந்த புத்தி வேலை செய்யுது.” அவனுக்குள் சுள்ளென்றது. இது எவ்வளவு பெரிய அவமானம்., 'நீ தமிழன்,' என்று ஒரே சொல்லில் எடுத்தெறிந்து பேசி விட்டாளே!

அவளன்றி வேறு யாரும் பேசியிருந்தால் இப்படி மனது துடித்திருக்காது. இதயம் கனத்திருக்காது. அவனை குறுக்கே கடந்து கீரிப்பிள்ளை ஒன்று ஓடியது. காற்று கொஞ்சம் கம்மியமாய் கிடந்தது. சில்வண்டு களின் கடூர ரீங்காரம் காது மடல்களில் அனல் வார்த்தது. தூக்கு மேடை நோக்கிச் செல்லும் நிரபராதியான கைதியைப்போல, மெல்ல மெல்ல நடந்து சென்றான்.

அவள்தான் பெண், மடத்தனமாய் பேசிவிட்டாளென்றால் அதற்குபோய் நான் ஏன் அடிக்க வேண்டும். இதற்கு மேலும் விட்டால், இன்னும் எதையாவது பேசி, சீண்டி விடுவாள். அவளின் அந்த இழி சொற்கள் கேட்டு, அவனுக்குள் மிருகம் விழித்துக்கொண்டது. மயிர்களை சிலிர்த்து, உறுமியது. முன்னங்கால்களை மடக்கி வேகமாய் பிடரியை சிலிர்த்து, பற்களை கோரமாய் கிழித்துப் பாய்ந்தது. பலம்கொண்ட மட்டும், அவளை கிழித்தது. குதறியது. வெறியுடன் வெளியேறியது. அவனுக்குள் வேதனை விம்மியது. பாவம் அடித்திருக் கக்கூடாது. வீட்டின் முன்றலில் இருள் மை பூசியிருந்தது. குரோட்டன் செடிகள் நீரின்றி வாடிக்கிடந்தன. முற்றம் நிறைய சருகுகள். அவள் இல்லயோ அல்லது ஏதாவது ஆகி...., அல்லாஹ் அப்படி ஒன்றும் நடந்திருக்காது துடிக்கும் மனதுடன் கதவிலே கை வைத்தான் திறந்துகொண்டது. வீட்டிற்குள் ஒரே இருட்டு. 'லைட்'டை போட்டான்.

முன்ஹோலில் அவள் பரிதாபமாய் கிடந்தாள். பக்கத்தில் மகள், சுருண்டு கிடந்தாள், மெல்ல மெல்ல அருகில் நடந்தான். மகளை வருடி குனிந்து முத்தமிட்டான். மூச்சுக்காற்று சுட்டிருக்க வேண்டும், கண் திறந்தாள் சடாரென எழுந்தவள், அவனை பார்க்க சக்தியற்று நிலத்தை வெறித்தாள். என்ன பேசுவதென்ற போராட்டம் இருவர் மனசுக்குள்ளும் லொட்டோ உருண்டைகளாய் நினைவுகள் தடுமாறின. அழுதழுது வீங்கியிருந்த விழிகளும், கலைந்த கேசமும் கலைந்துபோய் சரிந்து கிடந்த சேலையும், அவளின் பரிதாப தோற்றத்தை அதிகரித்தன.

“ஜெஸீ,” மெல்ல கிணற்றுக்குள் இருந்து வருவதுபோல் அழைத்தான். தூக்கத்தி லிருந்து விடுபட்ட கோழியாய் தலை நிமிர்ந்தாள். “சொரிடா இனி இப்படி நடக்கமாட்டன்.” அவள் தோள் தொட்டு ஆதரவாய் பேசினான். அணைதாண்ட காத்திருந்த தடை வெடித்ததுபோல, அவன் மார்பில் சாய்ந்து கேவிக் கேவி அழுதாள். அவன் முதுகை தடவி வருடிவிட்டான். கூந்தலில் கரம் புதைத்து சிக்கெடுத்தான். “என்ன மன்னிச்சிடுங்க.” குனிந்து அவன் பாதம் பற்ற, தோள் தொட்டு நிமிர்த்தி, அவள் கண்களை துடைத்துவிட்டான்.

அவள் கரங்களை தடவிக்கொடுக்கும் போது ஏதோ ஒன்று நெருடியது. சட்டென உயர்த்தி, இடது கரத்தின் முன்னங்கையை பார்த்தவன், துடித்துப்போனான். 'சுரூக்' என்று நெருப்புக் கம்பியால் சூடு போட்டி ருந்தாள். பச்சை காயம் ஆழமாய் பழுத் திருந்தது.

“பைத்தியக்காரி என்ன வேல செஞ் சிருக்காய்?” தளதளத்தான்.

“உங்கட மனச புண்படுத்துனதுக்கு தண்டனை.” அவன் அதையே வெறிக்க, இரு சொட்டு நீர்த்துளிகள் விழுந்து, காயத்தில் சுட்டன. அவள் முந்தானை எடுத்து அவன் முகம் துடைக்க, அவன் சின்னக் குழந்தை யாய் அவள் மடியில் முகம் புதைத்து விசும்பிக்கொண்டிருந்தான்.

# வச்ச குறி தப்பாது

-ஹப்புத்தளையூர் எப்.லெனாட்குமார்-

**அ**ன்றைய தினமுரசு இதழின் இலக்கிய நயத்தினுள் மூழ்கியிருந்தார் ராகவன்.

“என்னங்க பேப்பரா படிக்கிறீங்க?” கேட்டபடியே வந்தாள் மனைவி மல்லிகா.

“இல்ல... கடுதாசி பார்த்தா தெரிய லையா?” நக்கலாக சொன்னார் ராகவன்.



“நீங்க இஞ்ச கால்மேல கால்போட்டு பேப்பர் படிங்க. அங்க தோட்டமெல்லாத் தையும் மேல் வீட்டு பொன்னுதுரை அண்ணனுட்டு கோழி நாசப்படுத்துது!”

ராகவனுக்கு உள்ளுக்குள் சூடேறியது. தினமுரசை மடித்து சோபாவில் வைத்து விட்டு முற்றத்துக்கு சென்று இரண்டு மூன்று கல்லெடுத்து வீசியடித்தார். அவை தப்பித்தோம் பிழைத்தோமென வேலி தாண்டி பறந்தோடின.

“இன்னைக்கு அதுக தப்பிட்டது..! இனியும் வந்து தோட்டத்துல மேஞ்சுது... அடிச்சி கறி சமைச்சிடுவேன்! பொன்னு துரை அண்ணனுட்டு பொண்டாட்டி பொன்னம்மாகிட்ட சொல்லி வையும்!”

கோபத்தோடு வந்தமர்ந்தவர் மீண்டும், தினமுரசை எடுத்து புரட்ட ஆரம்பித்தார்.

□□□

**ம**ல்லிகாவைத் தேடி அன்று பொன்னம்மா வீட்டுக்கு வந்திருந்தாள்.

“பொன்னமாக்கா...உங்ககிட்ட நிறைய கோழிகள் இருக்குதுதானே? எங்களுக்கும் வளர்க்க ஒரு ரெண்டு கோழி தாங்களேன்!” மல்லிகாதான் கேட்டாள்.

“ஓமடி தங்கச்சி. இந்த கோழிகளால சரியான கரைச்சல். மத்தவங்க வீட்டு தோட்டமெல்லாம் போய் மேஞ்சிபோட்டு வருது. சும்மா எதுக்கடி வீண் பிரச்சினை? நீ காசு தா...அதுகள உனக்கே தாரன்!”

“ஆமாக்கா...சும்மா கொட்டுற சோறு அது இத திண்ணு வளரட்டுமே!”

இருவரும் பொன்னம்மாவின் வீட்டை நோக்கி சென்றார்கள்.

□□□

**மா**லையில் ராகவன் உற்சாகமாக வீட்டுக்குள் நுழைந்தார்.

“மல்லிகா...! மல்லிகா...!”

“என்னங்க?”

“கேட்டியேடி, சரியா குறி பார்த்து கல்லெறிய முடியுமானு...போய் வெளியில பாரன். பொன்னம்மாவுட்டு கோழி ரெண்டும் என்னா கெதியில கிடக்குதுனு...!” அவர் தன் திறமையை புகழ்ந்து கொண்டார்.

பதறியபடி வெளியில் சென்று பார்த்த மல்லிகா அதிர்ந்து போனாள்.

“பாவி மனுசன்... செஞ்ச காரியத்த பாரன். காலையில காசு குடுத்து பொன்னம்மா அக்காகிட்ட இருந்து வாங்கி வந்த ரெண்டு கோழியையும் இப்பிடி கல்லெறிஞ்சி சாக்கொல்லி போட்டிங் களே!.... கொஞ்சம்சரி புத்தியில்லாத மனுசன் யோசிச்சி பார்க்க தெரியாதா.....?”

அவள் அழுதபடி திட்டிக்கொண்டே போனாள்.

ராகவன், முகத்தில் அசடு வழிந்தபடி நின்றுகொண்டிருந்தார்.

கதைத்துளி

# என் அறிவில்லாதவளுக்கு!

எம்.சுரேஷ்

> கொஞ்சம் நிலவையும், சில முத்தங்களையும், ஒரு தலையணைக் கவிதையையும் பத்திரப்படுத்திக்கொண்டேன்!



**வ**ரவர அந்தப் பட்டாம் பூச்சியின் செய்கைகள் எனக்குப் பிடிக்கவே இல்லை. என்ன ஒரு அசாதாரண புறக்கணிப்பு! அது உணர்ச்சிகளை “செயற்கை” என்று எண்ணுகிறதா? அல்லது பொழுது போக்காக...

என் ஆன்மா சொட்டுச் சொட்டாக எரிந்துகொண்டிருப்பதை மட்டும் அது நன்கு உணர்ந்திருந்தது என்பதை நான் பல வழிகளில் ஊகித்துக் கொண்டேன். அதுவும் அப்படித்தான். மௌனமாய் சோகங்களை விழுங்கிக்கொண்டிருந்தது– தைரியமின்றி!

□□□

ஆனாலும் இனி நான் 'அது' உட்பட யாருக்குமே ஆலோசனை கூறப்போவ தில்லை. வேண்டுகோள்களையும் கருத்துக் களையும் பரிமாறப் போவதில்லை. இனியும் என்னால்.....

மீண்டும் அந்தப் பெரிய, அழகான, கறுத்த பட்டாம் பூச்சியை நோட்டமிட்டேன். அது கோடிக்கணக்கான உணர்ச்சிகளோடு என்னைப் பார்த்தது. எனக்கு விருப்பையும் மீறிய ஒரு வெறுப்பு!

அது தன் வாழ்க்கையில் எப்போ தாவது உணர்ச்சிவசப்பட்டிருந்தால் பரவாயில்லை....ச்சே! கற்பனையை எப்படி நிஜமென்று நம்புவது?

நான் கையில் வைத்திருந்த எல்லாப் பட்டாம் பூச்சிகளையும் பறக்கவிட்டேன். சேர்த்து வைத்திருந்த ரோஜாப் பூக்களை போதி மரத்தடியில் பரப்பி அழகு பார்த் தேன். இதயத்தை தூசி தட்டிக்கொண்டேன். அதற்கும் மேலதிகமாக கொஞ்சம் நிலவையும், சில முத்தங்களையும், ஒரு தலையணைக் கவிதையையும் பத்திரப் படுத்திக்கொண்டேன்.

என் கவிதைகள் எல்லாம் இனிக் குப்பைகள்தானே? பாதையில் சென்ற ஒரு பழைய பேப்பர்காரனை வலுக்கட்டாய மாக அழைத்து, என் எல்லாக் கவிதை களையும்... மன்னிக்கவும் எல்லா பேப்பர் களையும் இலவசமாகக் கொடுத்தேன்.

எல்லாவற்றையும் பெற்றுக்கொண்ட அவன் ஒன்றை மட்டும் வேண்டாமென்று திருப்பித்தந்தான். புதுமையாய் அவனைப் பார்த்த நான், அத்தாளில் இருந்த கவிதையின் தலைப்பை வாசித்தேன். “என் அறிவில்லாதவளுக்கு!!”"

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# நிலவைத் தேடும் ஒரு வானம்

**நர்மி–மட்டுநகர்**

**காணி நிலம் வேண்டும்-பராசக்தி**
**காணி நிலம் வேண்டும்.**

பாரதியின் கவிதையில் தொடர்ந்து கண்ணைச் செலுத்தினான் சிவா.

**பாட்டிற் கலந்திடவே-அங்கேயொரு**
**பத்தினிப் பெண் வேணும்-எங்கள்**
**கூட்டுக் களியினிலே கவிதைகள்**
**கொண்டு தர வேணும்.**

மிகுதியைத் தொடர முடியாமல் விழிகளில் நீர் திரையிட்டது. வாழ்க்கை இப்படி அமைந்தால் ஒவ்வொரு மனிதனுமே கவிஞனாகலாம் என்று தோன்றியது. இந்த அழகான குடும்பத்தில் பிறக்கும் குழந்தைகள் உண்மையில் பாக்கியசாலிகள்தான் என்ற எண்ணம் வந்தது. சரி இப்படியொரு அழகான இளமைப் பருவம்தான் கிடைக்கவில்லை. கடைசி எதிர்காலத்திலாவது எனக்கொரு நல்ல மனைவி கிடைத்து இப்படியொரு வாழ்க்கையை வாழ முடியுமா என்ற வினா கண்முன் பூதாகாரமாக எழுந்தது.

இவ்விடத்தில் சிவாவைப்பற்றிச் சொல்ல வேண்டும். கண்ணுக்கு அழகான, கை நிறைய சம்பாதிக்கும் சிவா ஒரு பட்டதாரியும்கூட. அவனின் வாழ்க்கைப் பின்னணியை அறியாதவர்கள், "இவனுக்கென்னப்பா, ஆள் பார்க்க வாட்டசாட்டமாக இருக்கிறான். கை நிறையச் சம்பளம். சமூக அந்தஸ்து வேற. நான், நீ என்று போட்டி போட்டுக்கொண்டு பெண் கொடுப்பார்கள்" என்று சொல்வார்கள். அவனைக் கொஞ்சம் அறிந்தவர்கள் "சரியான திமிர்ப் பேர்வழிடா, ஒருத்தரோடையும் கதைக்க மாட்டான்" என்று சொல்வார்கள். அவனை நன்கு அறிந்தவர்கள்- முரளியைத் தவிர அப்படி யாராவது இருந்தால்- அவனின் உண்மையான நத்தை ஓட்டுக்குள் சுருங்கும் குணம் தெரியும்.

இதோ இப்போதுகூட, முரளி ஒரு வார லீவில் ஊருக்குப் போயிருப்பதால் வெளியே எங்கும் செல்லாமல், கதைப்பதற்கு வேறு நண்பர்களும் இல்லாததால், பாரதியின் கவிதையுடன் ஒன்றாக இருக்கிறான்.

வெளியாட்களைப் பொறுத்தவரை, சிவா அவர்களின் விமர்சன வட்டத்திற்குள் தொடர்ந்து இருக்கக்கூடிய சுவாரசியமான பேர்வழியல்ல. முரளியும் சிவாவிற்கு எவ்வளவோ எடுத்துச் சொல்லிவிட்டான்.

"இங்க பார் சிவா. நீ இப்படி 'மூடி' டைப்பாக இருப்பதால் உனக்குதான் கஷ்டம். நாலு பேர் உன்னைப்பற்றி என்ன கதைக்கிறார்கள் தெரியுமா? வெளி மனுஷரோட பழகும்போது எவ்வளவு விஷயங்களை அறிந்துகொள்ள முடியும் என்று உனக்குத் தெரியுமா? வெளியிடங்களுக்குப் போவதால் மனம் எவ்வளவு இலேசாகிப் போகும் தெரியுமா?"

முரளியின் கேள்விகளுக்கு சிவா பதில் சொல்லமாட்டான். முரளி இதைப்பற்றித் தொடர்ந்தால் மாத்திரம்,

"எனக்கு என்று நீ இருக்கிறாய். உன்னுடன் நான் மனம் விட்டுப்பேசுகிறேன். உன் ஒருத்தனோட என் கஷ்டங்களைப் பகிர்ந்து கொண்டால் போதும், என்னோடு நேரே ஒன்று கதைத்துவிட்டு, பின்னால் என் சுயசரிதையை அளக்கும் கூட்டம் எனக்குத் தேவையில்லை." அத்துடன் முடித்துவிடுவான்.


"நீ மற்றவர்களுடன் கதைக்காமல் இருந்தால் மட்டும் உன்னைப் பற்றி விமர்சனம் செய்யாமலா இருக்கப் போகிறார்கள்?" இப்படிக் கேட்க முரளிக்கு ஆசைதான். ஆனால் கேட்க மாட்டான். அவனுக்கு சிவாவின் மென்மையான உணர்வுகள், அவனின் தாழ்வு மனப்பான்மை, சிறுவயதில் அவன் பட்ட காயங்கள், அதனால் தொடரும் பயங்கள், எல்லாம் தெரியும். முன்பு ஒருதரம், சிவாவுடன் பழகத் தொடங்கிய சில காலங்களில் இதையெல்லாம் முரளியிடம் சொல்லிப் புலம்பியிருக்கிறான்.

"முரளி நான் ஒருத்தரோடையும் கதைப்பதில்லை என்று ஏசுகிறாயே, நான் ஏன் இப்படி இருக்கிறேன் என்று உனக்குத் தெரியுமா? உனக்கு என்னை எத்தனை காலமாகத் தெரியும்?"

"ஸாரி சிவா. நீயும், நானும் சந்திக்கும்போது எனக்கு டயரி எழுதும் பழக்கமும் இல்லை. இப்போதுள்ள மாதிரி நல்ல கடிகாரமும் இல்லை. அதனால் வருடம், மாதம், திகதி, நேரம் என்பன சொல்ல முடியாத நிலையில் நான் இருப்பதையிட்டு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

"முரளி நான் சீரியஸாகப் பேசுகிறேன். நீ என்னடாவென்றால் பகிடி பண்ணுகிறாய் என்ன?"

"சரி. சரி கோபப்படாதே. நான் கம்பசில் 2வது வருடம் படிக்கும்போது நீ முதலாவது வருட மாணவன். ராகிங்கின்போது எனக்கு அறிமுகமானாய். என்னடா ஒரு பெடியன் பெண்பிள்ளை மாதிரிப் பயப்படுகிறானே என்று பார்த்து நான் உன்னைக் காப்பாற்றப் போக நீ எனக்கு நண்பனானாய். எல்லோரிட்ட இருந்தும் ஒதுங்கி இருந்த நீ என்னோட மட்டும் எப்படி நெருக்கமானாய் என்பதே இன்னமும் எனக்கு ஆச்சரியமான விஷயம். சரி விபரம் போதுமா இன்னமும் தேவையா?" முரளி இதைக்கூட விளையாட்டாகவே கேட்கிறான்.



"முரளி என் இளமைப் பருவம் நன்றாக அமையவில்லை. என் அப்பா முடாக்குடியர். தகப்பன் குடிப்பது ஒன்றும் பெரிய விஷயமில்லை. இதில் என் அம்மாவும் சமத்துவத்தைப் பேணியது தாண்டா கொடுமை. அப்பா, அம்மா இருவரும் குடி. இடையில்நான். வீட்டில் எந்நேரமும் ரகளைதான். இவ்வளவிற்கும் இடையில் எனக்குப் படிக்கும் ஆசை இருந்தது. நான் படித்ததுதான் ஆச்சரியமான விஷயம். ஆரம்ப நாட்களில் மற்ற சிறுவர்கள் தங்கள் அப்பா, அம்மாவைப் பற்றிக் கதைக்கும்போது, அம்மா எனக்கு இதைச் செய்து தந்தார், அப்பா எனக்கு இதை வாங்கித் தந்தார் என்று ஆசையாக சாமான்களைக் கொண்டு வந்து காட்டும்போது எனக்கு எவ்வளவு ஏக்கமாக இருக்கும் தெரியுமா? அவர்களுடன் சேர்ந்தால் எங்கே என் அப்பா, அம்மாவைப் பற்றிக் கேட்டுவிடுவார்களோ என்ற பயத்திலேயே ஒதுங்கத் தொடங்கினேன். இது போதாதென்று ஒருநாள் அப்பா வேறு வெறியுடன் ஸ்கூலுக்கு வந்து கலாட்டா பண்ணினார். அதற்குப் பிறகு பெடியன்கள் சமயம் கிடைக்கும்போது என்னைக் கேலி செய்வார்கள். நான் ஏ.எல்.படிக்கும்போது அப்பா செத்துப் போனார். அப்போ அவரின் மறைவு என்னை பாதிக்கவில்லை. ஆனால் அதற்குப் பிறகு அம்மா இவ்வளவு பெரிய மகன் நான் இருக்கும் போதே தனக்கு குடிக்க வாங்கிக்கொடுக்கும் ஒருத்தனோட சேர்ந்து வாழத் தொடங்கிவிட்டார். அப்போதுதான் நான் முழுமையாக உடைந்து போனேன். குடித்தாலும் அப்பாகூட இருந்திருக்கலாம் என்று தோன்றியது."

சிவாவின் கதை முரளியைப் பாதிக்கத்தான் செய்தது. அன்பென்றால் என்னவென்றே அறியாத அவன் உள்ளம் புரிந்தது. இவ்வளவு இடர்களுக்கு மத்தியில் தீய வழிகளில் செல்லாமல் முன்னேறிய அவன் திறமை கண்டு வியக்க வைத்தது.

பிறர் கேலி செய்வார்களே என்று பயந்து ஒதுங்கும் இவன் சுபாவம்தான் முரளியை சில வேளை எரிச்சல்படுத்தும்.

"என் அப்பா, அம்மா குடிகாரர்கள் தான். அதற்கு நான் என்ன செய்ய முடியும் என்று நிமிர்ந்து நின்று கேள்வி கேட்காத கோழைத்தனத்தை நீ எப்போது விடுகிறாயோ அப்போதுதான் நீ உருப்படுவாய். பிரச்சனைகளுக்குப் பயந்து ஓடாமல் எதிர்த்து நின்றாயானால் பிரச்சனை உன்னைக் கண்டு பயந்து ஓடும்."

முரளி விடிய விடியக் கதைத்தாலும் சிவா தான் மாறப் போவதில்லை என்கிற மாதிரி உட்கார்ந்து இருப்பான்.

இந்த சமுதாய அமைப்பைப் பொறுத்தவரை சிவாவின் பயங்கள் ஓரளவு நியாயமானவைதான் என்பதை ஒருநாள் நிதர்சனமாக உணர்ந்துகொள்கிறான் முரளி.

சிவாவிற்கு தன்கூட வேலை செய்யும் பவித்ரா என்கிற பெண்மேல் ஒரு மெல்லிய ஈர்ப்பு இருப்பதையறிந்த முரளி தான் இதில் முழு மூச்சாக இறங்குகிறான். சிவா தன் விருப்பத்தைக்கூட அவளிடம் தெரிவிக்க மாட்டான் என்பது முரளிக்கு நிச்சயமாகத் தெரியும். பவித்ராவிடம் கதைப்பதைவிட அவளின் பெற்றோரிடம் கதைக்க முடிவு செய்து சிவாவிடம் சொல்லிவிட்டு பவித்திராவின் வீட்டிற்குச் சென்றிருக்கிறான். அங்கு சிவாவைவிட அவனின் குடும்பத்தை அறிவதில் ஆர்வமாக இருந்த அவளின் அப்பாவிடம் முரளி ஒளிவு மறைவின்றி உண்மையைக் கூற அவர் "இது சரி வராது தம்பி" என்று சொன்னார். முரளியும் எவ்வளவோ எடுத்துச்சொல்லி விட்டான்.

"உங்கள் பெண் கட்டப் போவது சிவாவைத்தானே.... அவன் குடும்பத்தையல்லவே? சிவா மாதிரி ஒரு மாப்பிள்ளை கிடைக்க நீங்க கொடுத்து வைத்திருக்க வேண்டும்."

"நீ சொல்வது சரிதான் தம்பி. ஆனால் நாளைக்கு கல்யாணம் என்று வரும்போது நம் சமூகம் அவனை மட்டும் பார்க்காதே. அவனின் தாய் கல்யாண வீட்டில் வந்து கலாட்டா செய்தால் என் கௌரவம் என்னாவது? அதோட பெற்றோரின் பழக்க வழக்கம் இவனுக்குப் பிற்காலத்திலேனும் வராதென்று என்ன நிச்சயம்?"

அவரின் வாதங்கள் மூடத்தனமாகவே தோன்றுகிறது முரளிக்கு. அவர் கடைசியாக சொன்ன வசனம் கோபமேற்படுத்த அவருடன் முறைப்பா கதைத்துவிட்டு வெளியேறிய முரளிக்கு சிவாவிற்கு என்ன பதில் சொல்வது என்ற கவலை வருகிறது.

ஆனால் சிவா புத்திசாலி. முரளி சொல்லாமலே அங்கு என்ன நடந்திருக்கும் என்பதைப் புரிந்து கொள்கிறான். கடைசியில் சிவா முரளியைத் தேற்றும்படிதான் ஆகிறது.

ஆனால் இன்னமும் முரளிக்கு நம்பிக்கை இருக்கிறது. இந்த பவித்திரா போனால் என்ன, சிவாவிற்காக- பாரதி கவிதைகளை நேசிக்கத் தெரிந்த அவனுக்காக- ஒரு கண்ணம்மா வராமலா போய்விடுவாள்? ஆனால் இந்த நம்பிக்கையை அவன் சிவாவிடம் சொல்ல மாட்டான். சொன்னால் என்ன? நம்பிக்கையில்லா ஒரு சிரிப்பு அவனிடம் தோன்றும்.

இதோ இப்போதுகூட முரளி ஊருக்கு என்று சிவாவிடம் பொய் சொல்லிவிட்டு கிளம்பியது சிவாவின் எதிர்காலத் துணையைத் தேடித்தான்.

ஆனால் சிவா முரளியின் இலட்சியமறியாமல், இதோ ஒரு கவிதையாலேயே பாதிக்கப்பட்டு கண்ணீர் சிந்தி... ஓ இனியாவது இவனை இவனுக்காகவே நேசிக்கத் தெரிந்த, இவன் அன்பிற்கு வடிகாலாக, இவன் தேடித் திரியும் இவன் தேவதை கிடைப்பாளா? ■

# என் அழகு நிலா

**வி.வசந்தகுமார்**

மீண்டும், மீண்டும் கைகள் பையினிலிருக்கும் காதலியின் கடிதத்தினைத் தொட்டுப்பார்த்துவிட்டு வெளியில் வந்து ஒட்டிக்கொள்கின்றன. கடிதம் மட்டும் மௌனமாக உறங்கிக்கொண்டிருக்கின்றது. மனம் மட்டும் எங்கோவோர் பிரபஞ்ச தூரத்தை நோக்கி பறந்து கொண்டிருக்கின்றது. வழமையாக வாசிக்கும் இடத்திற்குப் போய்த்தான் ஆறுதலாக, ஆனந்தமாக வாசிக்கவேண்டும். அவள் அழகைப்போல் மிளிரும் ஒவ்வொரு எழுத்துக்களையும் இரசிக்க வேண்டும் என்ற நோக்கில் கால்கள் வேகமாக சென்று கொண்டிருக்கின்றன. மனதிற்குள் துயரம், ஏக்கங்கள், எதிர்பார்ப்புக்கள்.என்ன எழுதியிருப்பாளோ? ஏது எழுதியிருப்பாளோ என்கின்ற சந்தேகங்கள்.

**"காதலி**
**என்**
**பொறுமைகளைப்**
**பரீட்சிப்பதில்**
**உன்னைவிட**
**உன் கடிதங்கள்**
**வென்றுவிட்டன.."**

அன்றொருநாள் எழுதிய கவிதை வரிகள் மங்கிய நினைவுகளாய் மனதை வந்து எட்டிப்பார்த்துவிட்டுச் செல்கின்றன.

என் இடத்தை இன்னும் அடைந்துவிடவில்லை. என் காதலியின் கடிதத்தை என்னையுமறியாமல் பார்த்துக்கொண்டு தங்களுக்குள் ஏதேதோ பேசிக்கொள்ளும் அந்தத் தென்னை மரத்தடிக்கு இன்னும் கால்கள் சென்றுவிடவில்லை. தூரத்தில் பார்த்துக்கொள்கின்றேன்.என் வருகையைத்தான் ஒன்றோடொன்று சொல்லி உரசிக்கொள்வதாக நினைத்துக் கொள்கிறேன். இன்னும் கொஞ்சம் வேகமாக அடிகளைத் தூக்கிப் போடுகின்றேன்.

அதோ...வந்துவிட்டது. என் சொர்க்கலோகம் வந்துவிட்டது. வெறும் எழுத்துக்களுக்குக்கூட இசையூட்டும் அந்த இசைமேடை வந்துவிட்டது. சுற்றும் முற்றும் பார்த்துக் கொள்கின்றேன். என்னைத் தவிர வேறு ஒருவரையும் அங்கு காணவில்லை. இதமான தென்றல்கூட அவள் கடிதத்தைப் பார்த்துவிட வேண்டுமென்ற நினைப்பில் வேகமாக வந்து முத்தமிட்டுச் செல்கின்றது. சூரியன்கூட அவள் கடிதத்தை பார்க்கக்கூடாது என்று எண்ணி மேகங்களுக்குள் மறைந்து கொள்வதாக நினைத்துக்கொள்கின்றேன். தூங்கிக் கொண்டிருந்த கடிதத்தை தட்டி யெழுப்பிக்கொள்கின்றேன். ஓர் இனம் புரியாத மகிழ்ச்சி. எழுத்துக்களுக்கு வலித்துவிடக் கூடாதே என்ற நோக்கில் மெதுவாகப் பிரித்துப் படிக்கின்றேன்.

அன்புள்ள உங்களுக்கு!

இது என் அன்புமடல், ஆசை மடல் என்று எதிர்பார்த்திருப்பீர்கள். என்ன செய்வது- அழுகை மடலாக எழுத வேண்டிய ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டேன். என் பெற்றோர்கள் நம் காதலை நிராகரித்து விட்டார்கள். அவர்களை எதிர்த்து வாழக் கூடிய பெண்ணாக நானில்லை. இன்று அல்லது நாளை, நாளை மறுநாள் தொடர்ச்சியாக ஐந்து நாட்கள் உங்கள் காதலியாக நானிருக்கலாம். அதுவும் தொலைதூரத்தில். ஆறாம் நாள்- 12ம் திகதி வேறொருவரின் மனைவியாவது நிச்சயமாக்கப்பட்டுவிட்டது.

நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான். என்னை மன்னித்து மறந்துவிடுங்கள்.

அன்புடன்
இன்றைய காதலி.

ஓ...என் கண்களையே நம்ப முடியவில்லை. மீண்டும் கடிதத்தைப் பார்க்கின்றேன். என் நேசிப்பிற்குரியவளின், எனக்குப் பிரியமானவளின் அதே முத்து முத்து எழுத்துக்கள். எப்படி அவளால் இவையெல்லாம் எழுத முடிந்தது? மரணம் சம்மதித்தால் மட்டும்தான் எம்மைப் பிரிக்க முடியுமென்று நிமிடத்திற்கு வினாடிகளை விடக் கூடுதலாகச் சொன்னவள் எப்படியின்று இவையெல்லாம் எழுதினாள்..?

'முடியாது...என்னிலிருந்து உன்னைப் பிரிக்க முடியாது. பரமாணுவின் இரண்டு பக்கங்களாக நினைத்திருந்த நானும் நீயும் எப்படிப் பிரிந்து போவது. லைலா-மஜ்னு, அம்பிகாவதி-அமராவதி, ரோமியோ-ஜூலியட், அனார்கலி-சலீம் இவர்களைப் போல் தாங்கள் அழிந்துபோனாலும் தங்கள் காதலை இன்றும் வாழவைத்துக்கொண்டிருக்கும் தெய்வீகக் காதலர்களாக வாழ்ந்து காட்டுவோமென்று அடிக்கடி சொல்வேனே..? அப்படிப்பட்ட என்னை விட்டு எப்படியின்று பிரிந்து செல்ல உனக்கு மனம் வந்தது?

'பிரியா! எப்படியம்மா இவையெல்லாம் எழுதினாய்? நீ எழுதிவிட்டு இருக்கின்றாய். இங்கே வந்து பாரம்மா கொஞ்சம், கொஞ்சமாக நான் இறந்துகொண்டிருப்பதை.



உன்னை இழந்துவிட்டு என்னால் எப்படி கண்மணி வாழ முடியும்? சூரியனைத் தொலைத்துவிட்டு இருட்டுக்குள் இறந்து போகச் சொல்வதற்கு எப்படி கண்மணி உன்னால் முடிந்தது? உன்னில் நான் கொண்ட பாசம் பத்து நிமிடங்களில் மறந்துவிடக்கூடியதா கண்மணி! ஏழேழு ஜென்மம் எடுத்தாலும் அழியாமல் வாழும் தெய்வீகப் பாசமல்லவா நான் உன்னில் கொண்டது.'

மனதில் எழுந்த உணர்ச்சிகள் கண்ணீராக அவள் கடிதத்தை முத்தமிட்டுக் கொண்டிருக்கின்றன. கடந்த காலங்களின் பசுமையான நினைவுகள் எதிரொலியாய் வந்து மனதில் தடம் பதித்துச் செல்கின்றன.

□□□

அன்று ஞாயிற்றுக்கிழமை. அன்றுதான் என் வாழ்க்கையின் முதற்தர அழகியை- இன்றைய காதலியை நான் தெரிந்துகொண்ட நாள். என் மனதை அவளிடம் பறிகொடுத்த நாள். வழமையாக நண்பர்களுடன்கூடி பாதையில் நின்று அரட்டை அடித்துக் கொண்டிருக்கும்போது எதிர்பாராதவிதமாக வந்த அவளுக்கு கிண்டலடித்துவிட்டேன். கிண்டலுக்குப் பதிலாக ஒரு புன்னகையை அல்லவா பரிசாகத் தந்துவிட்டுப் போனாள். அந்தப் புன்னகைக்குப் பதிலாக என் மனதையல்லவா களவாடிக்கொண்டு போய்விட்டாள்.

அன்றுமுதல்- அந்த ஞாயிற்றுக்கிழமை முதல் அவள் பாத அடிகளின் சுவடுகளை நானும் தொடர்ந்தேன். அவள் நிழல்போல போன இடமெல்லாம் போனேன். தினம் தினம் புன்னகையை மட்டும் பரிசாகத் தந்தவள் மனதை மட்டும் ஏனோ காட்டத் தவறிவிட்டாள்.

இன்று இரண்டில் ஒன்று தெரிந்துவிட வேண்டும் என்ற நோக்கில் வழமையாக அவள் நண்பியைச் சந்திக்க வரும் அந்தப் பாதையில் காத்திருந்தேன். காத்திருக்கும் ஒவ்வொரு நிமிஷங்களும் வருஷங்களாய் கழிய வினாடிக்கு ஒருமுறையாக முகத்தை நிமிர்த்தி பார்த்துக்கொண்டேயிருந்தேன்.

அதோ... வந்துவிட்டது என்தங்க ரதம். வந்துவிட்டது. பிரதான பாதையில் இருந்து, இந்தப் பாதைக்கு இறங்கிவிட்டது அந்தச் சித்திரப் பாவை. வானில் ஊர்ந்து வரும் அந்த அழகு நிலாவாய் இந்தப் பாவை நிலா வந்துகொண்டிருந்தது. என் இடமும் நெருங்க, நெருங்க இதயத் துடிப்புக்களையும் மிஞ்சிப்போன துடிப்புக்கள் துடித்துக் கொண்டிருந்தன. என் அருகே வந்துவிட்டது அந்த உயிருள்ள ஓவியம். இவ்வளவு நேரமும் பத்திரப்படுத்தி வைத்திருந்த அந்தக் கடிதத்தை எடுத்து கைகள் நடுங்க நீட்டுகின்றேன்.

அதே புன்னகையை காணிக்கையாகத் தந்தவள், புன்னகைக்குப் பதிலாக என் கடிதத்தை வாங்கிக்கொண்டு மறைந்து விட்டாள், மேகங்களுக்குள் மறைந்து கொள்ளும் நிலாவினைப்போல்.

அன்று முதல் நடந்த கடிதக் கடத்தல்களில் மட்டுமல்லாமல், சில சமயங்களில் நேரில்கூட பாசங்கள் பரிமாறப் பட்டன. ஒரு நாளைக்கு ஒரு முறையேனும் பார்க்கத் தவறாத அந்த அழகு நிலாவை வாழ்க்கை பூராகவும் எப்படி பார்க்காமலிருப்பது?

□□□

பழைய நினைவுகளிலிருந்து மீண்ட நான் கையிலிருந்த கடிதத்தைப் பார்க்கின்றேன். நான் அழுத கண்ணீரில் நனைந்து அதுகூட இப்போது அழுதுகொண்டிருந்தது. நினைக்கும்போது அழுகை அழுகையாய் வந்தது. இனித் தாமதிக்கும் ஒவ்வொரு வினாடியும் அவள் என்னைவிட்டு வெகு தூரம் கொண்டுசெல்லப்படுகின்றாள் என்பதை அறிந்தேன். இறந்த காலத்திற்குள் இறந்து போகாமல் எதிர்காலத்தை நோக்கி ஓட ஆரம்பித்தேன்.

அவள் வீட்டை நோக்கி ஓட ஆரம்பித்தேன். என்னைவிட்டு அவள் பிரிந்துவிடக் கூடாது என்கின்ற நோக்கில் கண்மண் தெரியாதவோர் வேகத்தில் ஓடுகின்றேன். ஓடிக்கொண்டே அந்த பிரதான பாதையை கடக்க எத்தனித்தபோது ஏதோவோர் வாகனம் வந்து என்மேல் மோதியது மட்டும் அறிந்தவனாய் அந்த இடத்திலேயே மயங்கிச் சரிகின்றேன்.

ஓ.. காற்றாடியின் அரவணைப்பில் மெல்ல, மெல்ல கண்களை விழித்துக் கொள்கின்றேன். உடம்பெங்கும் கட்டுக்கள். உடலெல்லாம் அசைக்க முடியாதபடி நோவுகள். சுற்றும் முற்றும் பார்த்துக் கொள்கின்றேன். இப்போதுதான் நானிருப்பது வைத்தியசாலையிலென்பதை அத்தாட்சிப் படுத்திக்கொண்டேன்.

அருகில் இருந்த மேசையில் கிடந்த ஓர் துண்டுப் பேப்பரை மெதுவாக எடுத்துப் பார்க்கின்றேன். என்ன அதிசயம்? என் கண்களையே நம்பமுடியவில்லை. பேப்பரின் பின் புறத்தே என் காதலியும் அவள் கணவனும் மணக்கோலத்தில் அழகாய் காட்சியளித்தார்கள். அருகிலே "எங்கள் திருமணத்திற்கு வருகை தந்த, வாழ்த்துக்கள் அனுப்பிய அனைவருக்கும் எங்களின் நன்றிகள்" என்ற நன்றி நவிலல் வாக்கியங்கள். அப்போதுதான் சுவரில் மாட்டியிருக்கும் கலண்டரைப் பார்த்துக் கொள்கிறேன். ஆகஸ்ட் 15ம் திகதி என்பதை அது அழகாய்க் காட்டியது.

ஓ...என்னையுமறியாமல் மயக்கத்திலேயே கழிந்துபோன எட்டு நாட்களுக்காக இப்போது வேதனைப்பட்டு அழுதுகொள்கின்றேன். சின்னக் குழந்தையாய் விம்மி, விம்மி அழுகின்றேன். அந்த அழகு நிலா இல்லாமல் இந்த வானம் எங்கே வாழப் போகிறது, ஆயிரமாயிரம் நட்சத்திரங்கள் இருந்தாலும் அந்தவோர் நிலாவிற்கு இவையெல்லாம் ஈடாகுமா?

இனி அவள் இல்லாத வாழ்க்கையில் நானெங்கே வாழப் போகிறேன்? இன்றோடு நானும் இறந்து போகக்கூடாதா? நினைக்கும் போதே மறுபடியும் மயக்கமாக வந்து கட்டிலில் சரிந்து போகின்றேன்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

இலக்கிய நயம்



# மறைக்க முடியவில்லை

"இந்த இரவு நீண்டு செல்லக் கூடாதா அத்தான்?"

வேதநாயகி தன் விருப்பத்தை வினாவாக்கிக் கேட்டாள்.

அந்த இருளிலும் தளபதி இடும்பன் அவள் முகத்தில் இருந்த கவலை ரேகைகளை கணக்கிட்டுக்கொண்டான்.

"விடியவேண்டும் என்று வேண்டுவோர் பலர் இருக்க, வேண்டாம் என்று விரும்புகிறாயே ராஜகுமாரி. அடுக்குமா இது?"

வேடிக்கையாகக் கேட்டான். வேடிக்கை வினையில் முடிந்தது.

வேதநாயகி விசும்பினாள். இதழ்களை விரல்களால் அடைத்தபடி தேகம் குலுங்க விசும்பினாள்.

இடும்பன் வேதநாயகியின் முதுகு தொட்டான்.

பரிவோடு இடது கரத்தின் நான்கு விரல்கள் படிய வருடினான்.

"வேடிக்கையாகத்தானே பேசினேன். இதற்குப் போய் விம்முகிறாயே வேதநாயகி?"

## தருவது — ரசிகன்

வேதநாயகி திரும்பி தன் அருகே கருங்கல் சுவர் போல இருக்கும் அவனைப் பார்த்தாள்.

"வேடிக்கைக்கு இதுவா நேரம்? வெந்த புண்ணில் வேல் செருகுவது போலத்தான் அத்தான் உங்கள் வேடிக்கையும் படுகிறது எனக்கு."

மீண்டும் உடையக்கூடும் விழியணை என்று அவள் குரல் காட்டிற்று.

சுற்றியிருந்த இருளுக்குள்ளும் அவள் விழிகளின் படபடப்பு விளங்கிற்று.

இதயத்துடிப்பை விழிகள் எதிரொலி செய்வதுபோல படபடக்கின்றனவோ என்று நினைத்தான்.

அவள் பக்கத்தில் இன்னும் நெருங்கி அமர்ந்தான்.

தோள்கள் இரண்டும் உரசிக்கொண்டன. மூங்கில்மேல் தோள் பட்டதுபோல இருந்தது இடும்பனுக்கு.

மூங்கில்கள் உரச தீ பற்றிக்கொள்ளும்.

இரு தோள்கள் உரசினும் தீ பற்றிக் கொள்ளுமோ? கொள்ளும்.

மூங்கில் தீ காட்டை எரிக்கும்.

மோகத்தீ நாட்டையே எரிக்கும்.

காதலுக்காய் நடந்த போரும் கொட்டிய குருதியும் அதற்கு சாட்சி சொல்லும்.

இடும்பன் மோகத்தீயில் மெல்ல மெல்ல விழுந்து கொண்டிருந்தான்.

ஆனால் வேதநாயகியோ இப்போதும் சின்னதாய் விசும்பிக்கொண்டிருந்தாள்.

தேவநாயகியை வெட்கம் பிடுங்கித் தின்றது.

மார்பு துடித்தது. நெஞ்சுக்குள் ஏதோ ஒரு எதிர்பார்ப்பு தவிப்பாகிப் புரண்டது. நாவரண்டு போனது.

உடல் முழுக்க நெருப்பாகக் கொதிக்க, நெற்றி வியர்த்தது.

"ஏனிப்படி வியர்க்கிறது?"

என்றான். ஒரு பேச்சுக்காய் கேட்டது போல இருந்தது. இடையே நிலவிய மௌன இறுக்கத்தை கலைக்க விரும்பினான் இடும்பன் என்று தெரிந்தது.

"பறித்துக்கொள்ளவா? ராஜகுமாரியின் அனுமதி கிடைக்குமா? இதற்கெல்லாம் ஏன் அனுமதி? பறித்திடத்தானே பழுத்தன இவைகள்!"

வினாவும், விடையும் அவனே நெய்தான்.

வேதநாயகி வெளிக்குச் சீறினாள்,

"என்ன சொன்னீர்கள்?"

இடும்பன் ஒன்றுமறியாத அப்பாவி யல்லவா?

"விடிந்தால் நான் விடைபெற்றுச் செல்லும் நேரம் வந்துவிடும். நீ வருந்திக்கொண்டேயிருந்தால், என் உயிர்ச் செடிக்கு நீரூற்றும் அமுத மழையைப் பொழிவது யார்?"

முழங்கால் மடக்கி அமர்ந்திருந்த வேதநாயகிக்கு அவன் பேச்சின் அர்த்தமும், விடும் மூச்சின் வெப்பமும் புரிந்துபோனது.

அவளுக்கும் வேண்டும்போலவே இருந்தது.

வெளியே சொல்லவா முடியும்? உணவு தேவையென்றால் உடனே சொல்லி விடலாம். உணர்வுக்கு தேவையானதை சொல்ல முடியுமோ?

எதிரே மரத்தில் தொங்கிய செவ்விளநீர் குலையைக் காட்டினான்.

"அங்கே பார். மரம் என்ன பாவம் செய்தது? என்னே திரட்சி. என்னே வளர்ச்சி. அதுதான் கவலை."

"அடடே என்னே இரக்க குணம். அறம் செய்யும் மனம். தளபதி ஐயாவே தங்களுக்கு இருப்பது தயாளமதி."

"போதும் கண்ணே புகழ்ந்தது என்னை! இன்னொரு கவலையும் உண்டு எனக்கு."

"என்னவோ அக்கவலை? செப்புங்கள் தளபதி."

குறும்பை உள்ளே பொத்திவைத்து, இடும்பன் அவள் தொடையில் தொட்டு,

"இங்கே இடம் உண்டா?"

என்று கேட்டான். தொட்ட இடத்தில் உணர்ந்த சிலிர்ப்பு உச்சிக்கும் போனது.

உள்ளே யானை எழுந்து சோகம் என்ற மரக்கிளையை முறித்துப் போட்டுவிட்டு, மிதித்துக்கொண்டு முன்னேறியது.

இடும்பன் அவள் மடியில் மல்லாந்து சாய்ந்தான்.

சாய்ந்தபடி அவள் முகம் பார்த்தான்.

தேவநாயகி சற்று குனிந்தாலும் இசகு பிசகாகிவிடும்.

இடும்பனின் உதடு அவள் சிகர அழகுகளின் சமீபத்தில் இருந்தது.



விழிகளில் நடிப்பைக் காட்டிக்கொண்டு வேதநாயகி பேசியபோது தேகம் அசைந்தது. இடும்பனின் மனமும் அசைந்தது; முகம் எதிரே எழிலாடும் கோலம் கண்டு.

"கைக்கு கிட்டுமா? கிட்டுமாயின் சுவையறியக் கூடுமா?"

வினா முடிவதற்கிடையில் இடும்பனின் மூக்கைப் பிடித்துத் திருகினாள் வேதநாயகி.

இதுதான் தருணம் என்று மூக்கை காப்பதுபோல முன்னே முகம் தூக்கி இடும்பன் எழ...

வேதநாயகி தடுத்துக்கொண்டே தன்னைக் கொடுத்துக்கொள்ளத் தொடங்கினாள்.

□□

இரவு உடைந்தது. சூரிய ஆட்சி பெரும்பான்மையோர் வரவேற்போடு பதவியேற்றது.

போர் நடத்திச் செல்லும் பொறுப்பேற்ற தளபதி இடும்பன் அரச சபையில் மன்னவன் வாழ்த்த விடைபெற்றான்.

"உறைவிட்டுக் கிளம்பும் உறைவாள் வெற்றிப்பறையறையும் ஒலி கேட்காமல் உறைக்கு திரும்பக்கூடாது என்பது நினைவிருக்கட்டும் தளபதி."

"அறிவேன் மன்னா! வெற்றி முழக்கம் தவிர வேறெந்த முழக்கமும் தங்கள் செவிக்குத் தேனாகாது என்று தெரியும் வேந்தே."

மன்னவன் மனதார புன்னகைத்தான். வாழ்த்துப் பெற்று நிமிர்ந்தவன் விழிகள் தேவநாயகியின் விழிகளை சந்தித்து தாமதித்தன. விழியால் விடைபெற்று விலகிப் போனான்.

ஏறுபோல் அவன் நடந்து போக, ஆறுபோல் ஆயின அவள் விழிகள்.

தோழிகள் சுற்றிநின்று தேறுதல் கூறினர். ஆறுதல் மொழிகள் பகன்று தோற்றுப் போயினர்.

இறைக்க இறைக்க சுரந்து வரும் கிணற்று நீராய் விழி நீர் குடம் குடமாய் கொட்டிக்கொண்டிருந்தது. பிறர் அறியாமல் துயர் மறைக்க அவள் முயன்றும் முடியவில்லை.

நாழிகை ஓடியது. மாலையும் மயங்கி இரவுக்குள் சென்றது. அவள் விழிக்கிணறு மட்டும் வற்றாது சுரந்துகொண்டேயிருந்தது.

சுரந்த விழிநீர் அவள்மறைத்த காதல் கதையை பெற்றோர் அறிய வைத்தது. உற்றார் அறிந்து 'அப்படியா?' என்று வியக்கச் செய்தது.

விழிநீர் பிரிவுத் துயரை காட்டிக்கொடுக்கும் என்பதையே திருவள்ளுவரும் ஒரு குறளில் விளக்கிப் போனார்.

**"மறைப்பேன் மன் யானிஃதோ
நோயை இறைப்பவர்க்கு
ஊற்றுநீர்போல மிகும்"**

குறள் 1161
அதிகாரம்-117

## குறுக்கெழுத்துப் போட்டி இல—69

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | 3 | 4 |
| | ■ | 5 | | | ■ | |
| | 6 | | ■ | 7 | | |
| ■ | | | 8 | ■ | ■ | ■ |
| 9 | | ■ | 10 | | | 11 |
| 12 | | | | | ■ | |
| | | ■ | | ■ | 13 | |

### இடமிருந்து வலம்

1. விடயங்களை ஆராய்ச்சிக் கண்கொண்டு அணுகுபவர்.
3. ஒரு கையால் மட்டும் ஏற்படுத்த முடியாது.
5. போக்குவரத்துச் சுலபமாக இருந்தால் இவருக்கு சந்தோசம்.
7. இதில் லாபத்திலும் பொருட்கள் மாட்டிக்கொள்ளுளம்.
10. தமிழர்களுக்கு இது சிறப்பான மாதம்.
12. சுவையான பிட்டுக்கும் உதவும்.
13. முள்ளால் எடுக்கலாம்.

### மேலிருந்து கீழ்

1. 24 மணிநேரத்தில் இதுவும் அடக்கம்.
2. மறதி இதன் எதிரி.
4. மதங்களில் ஒன்று.
6. பல்சுவையும் கொண்டு இது படைக்கப்படுவதுண்டு.
8. தீராத பிரச்சனையை இப்படியும் அழைக்கலாம். (குழம்பியுள்ளது)
9. பாம்பையும் மயக்கும்.
11. மனிதனால் மனிதனை மாய்க்கப் பயன்படுத்தலாம்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 8.10.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-69
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-67க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 மு | 2 கா | ரி | ■ | 3 க | த் | 4 தி |
| த் | ணி | ■ | 5 மு | யி | ■ | னை |
| தி | ■ | 6 ஒ | ற் | று | 7 மை | ■ |
| ரை | ■ | ட் | ற | ■ | சூ | 8 து |
| ■ | 9 லா | ட | ம் | ■ | ர் | தி |
| 10 ச | ண் | டை | ■ | 11 கூ | ■ | க் |
| 12 லை | லா | ■ | 13 ப | டு | க் | கை |

குறுக்கெழுத்துப் போட்டி இல.67இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. ஞா. உமா
   கொழும்பு-06.
2. ஆர். ரவிக்குமார்
   ஹட்டன்.
3. நிஜாம் குறைஷி
   கல்பிட்டி.
4. ஏ. சிஹான்
   கொழும்பு-12.
5. அட்சயா பசுபதிப்பிள்ளை
   நுவரெலியா.
6. ஹென்றி ஸ்பெக்
   திருகோணமலை.
7. எம்.ஐ. சாயிர்
   களுத்துறை.
8. எம்.சலாஹுதீன்
   உக்குவலை.
9. ம.ஸ்ரீவாணி
   மட்டக்களப்பு.
10. சிஹானா தாவூத்
    மாவனல்லை.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்
ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்
ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்

## பெண்கள் கிரிக்கெட்
## "இங்கே ஊக்குவிப்பு இல்லை"

இலங்கைப் பெண்கள் கிரிக்கெட் விளையாட்டில் கணிசமான அளவு முன்னேற்றம் கண்டுள்ளபோதும் உலகப் போட்டிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பினைப் பெறமுடியாமை வருந்தத்தக்கதே' என்று எல்சி பத்மநாதன் கூறுகிறார்.

இலங்கையைச் சேர்ந்த எல்சி தற்போது அவுஸ்திரேலியாவில் வாழ்கிறார். இவர் தற்பொழுது அவுஸ்திரேலியாவில் மெல்போணில் மாரிக்வில் விளையாட்டுக்கழக கிரிக்கெட் அணியில் ஒரு ஆட்டக்காரராக விளங்குகிறார்.

உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆடும் நான்கு வீராங்கனைகள் இக்கழகத்தில் இருப்பதாகக் கூறுகிறார். இங்கிலாந்தில் அண்மையில் நடைபெற்ற பெண்களுக்கான 50 ஓவர் உலகக் கிண்ணப்போட்டியில் அவுஸ்திரேலிய அணி இரண்டாவது இடத்தைப் பெற்றது. அடுத்த போட்டி நியூஸிலாந்தில் நடைபெறவிருக்கிறது.

இலங்கைப் பெண்கள் கிரிக்கெட் ஆட்டத்தில் முன்னணிக்கு வர பலமான வாய்ப்பு இருப்பதாக எல்சி கூறுகிறார். ஆனால் இதற்கு ஊக்கமளிக்கப்படுவதில்லை என்கிறார். கல்வி அமைச்சு பள்ளிக்கூடங்களில் பெண்கள் கிரிக்கெட் அணிகளை உருவாக்குவதற்கு வழிகாட்ட வேண்டும். அதுமட்டுமல்லாமல் பல பகுதிகளிலுமுள்ள பெண்கள் ஒன்றுபட்டு கிரிக்கெட் கழகங்களை அமைத்து ஒரே சம்மேளனம் உருவாக்கப்பட வேண்டும் என்றும் எல்சி பத்மநாதன் ஆலோசனை கூறுகிறார்.

## இலங்கை பங்குகொள்ளாது

உலகப் பிரசித்தி பெற்ற 'ஹொங் கொங் கிரிக்கெட் சிக்சீஸ்' போட்டிகளில் இவ்வருடம் இலங்கை பங்குபற்றப்போவதில்லை. ஸிம்பாப்வேயில் நடைபெறவுள்ள கிரிக்கெட் போட்டிகளில் நாட்டின் தேசிய அணியினர் பங்குபற்ற வேண்டியிருப்பதனால் ஹொங்கொங் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாதிருப்பதாக இலங்கை கிரிக்கெட் சபையின் செயலர் அநுரா தென்னக்கோன் தெரிவித்தார்.

இலங்கை கிரிக்கெட் சபை தேர்வாளர்கள், இரண்டாவது அணி ஒன்றுக்கான விளையாட்டு வீரர்களை ஹொங்கொங் அனுப்பிவைப்பதற்கு தெரிவு செய்தனர். ஆனால் ஹொங்கொங் ஏற்பாட்டாளர்கள் அதனை ஏற்க மறுத்து விட்டனர். கடந்த ஆண்டு நடைபெற்ற போட்டிகளில் இங்கிலாந்து முதல் இடத்தைப் பெற்றது. பாகிஸ்தான், அவுஸ்திரேலியா, ஹொங் கொங் ஆகிய நாடுகளைத் தோற்கடித்து இலங்கை இரண்டாவது இடத்தைப் பிடித்தது.

## ஸிம்பாப்வேக்கு குருசிங்க!

ஸிம்பாப்வேயில் நடைபெறவிருக்கும் கிரிக்கெட் போட்டிகளில் கலந்துகொள்ள குருசிங்கவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இது பெரும் அதிர்ச்சியூட்டும் தகவலாக கிரிக்கெட் உலகம் கருதுகிறது.

இலங்கை கிரிக்கெட் சபையினர் கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர்களை அவ்வப்போது தெரிவு செய்வர். இதில் சிறப்பாக விளையாடும் ஆற்றலுள்ளவர்களும் ஓரங்கட்டப்படுவதுண்டு. அதைப் போல்தான் குருசிங்காவையும் பல போட்டிகளில் பங்குபற்றும் சந்தர்ப்பம் தராமல் தடுத்துவிட்டனர். ஸிம்பாப்வே அணியில் அவருக்கு இடமளிக்கப்பட்டமை பலருக்கு வியப்பாகவே இருக்கிறது.

இவர் 'லெக் ஸ்பின்னர்' அத்தோடு ஓரளவு துடுப்பெடுத்தாடும் ஆற்றலுள்ளவர். இவர் ஒரு சிறந்த ஃபீல்டராகக் கருதப்படுகிறார். ஆனால் ஒரு தேசிய அணியில் ஃபீல்டிங்கில் சிறப்புப் பெற்றிருந்தால் மட்டும் போதுமா? என்னும் சர்ச்சை எழுந்துள்ளது.

துலிப் சமரவீர மற்றும் சஞ்ஜீவ ரணதுங்க ஆகியோரும் ஸிம்பாப்வே செல்லும் அணியில் சேரவிருக்கிறார்கள் என்று தெரிகிறது. இத்தடவை ஸிம்பாப்வே சுற்றுப் பயம் சற்றுக் கடினமானதாகவே இருக்கலாம். இதில் பங்கு பெறவிருக்கும் அணி கப்டன் ரணதுங்காவுக்கு கை கொடுக்குமா? என்பதுதான் கேள்வி!



குரு சிங்க

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# மகாபாரதம்

அங்கம் 48

**இவ்வாரம் (02.10.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

**காலத்தின் குரல்:** பாரபட்சமற்றவன் நான். என்றாலும் படுபாதகச் செயலைப் பார்த்தும் பாராதிருக்கும் பாதகனுமாக இருக்க முடியவில்லை. சக்திதனைப் போற்றும் சான்றோரின் தேசமிது. இருப்பினும் இங்கே அச்சக்தியை சீர் குலைத்து துமிலுரிந்து தூற்றிவிட்டார். பெண்மைக்கு இழைக்கப்படும் பேரிழிவை யவள் என்றும் பேசாமல் பொறுத்திருந்து பார்த்ததில்லை. சூதாடு மண்டபத்தில் சூதறியாத் திரௌபதியாள் சொன்ன சுடு சொற்கள் சாற்றும் வகை கேட்போம்! காலத்தால் சாகாத கொடுஞ் சொற்கள் ஞாலத்தில் என்றும் சுற்றிச் சுழன்று நின்றே சூறாவளிபோல் ஒலிக்கும்!

-காட்சி தொடக்கம்-

**திரௌ:** மன்னர்க்கு மன்னவனே மனுக்குலத்தின் பின்னவனே! திருதராட்டிரன் எனும் குருகுலத்துக்கதிபதியே! பாஞ்சால நாட்டின் பெரும் பேரரசன் துருபதனார் பெற்றெடுத்த பாஞ்சாலி நானின்று அத்தினாபுரத்தின் அரியணையின் முன்னின்று அபகீர்த்திக்காளானேன்! தீக்குண்டத்தில் வுதித்த தூயவள் நான்! என்னுடலை காற்றேனும் தீண்டிக் கறை படிய விட்டதில்லை. கூற்றின் வலியறியாக் கொடியவர்கள் நின் முன்னாலென்கூந்தல் தனைக்கொய்திழுத்தார். மானந்தனைக் காக்க மங்கையிவள் போர்த் திருந்த தூய துயிலுரிந்து தாய்மைக்கே உலை வைத்தார். குரு குலத்தின் பெருமைக்கே பெரும் பழியையே இழைத்தார்.
பெருமை மிகு பாரதத்தின் பெண் குலத்தின் மாண்புதனை சிறுமைக் கிழுத்திங்கு சீரழித்து விட்டீர்கள்!
வில்லேந்தும் வீரர்களும் சொல்லேருழவர்களும் சூதின் கொடுமைதனை சோதனையிட்டறிந்தோரும் கோழைகளாகி விட்டீர்! கொடியவரே உங்கள் குலங்களெல்லாம் கொடியோடறுந்திடவே கொடுஞ் சாபமிடும் கட்டம் கூடி வந்துவிட்டதிப்போ!

**காந்:** (ஓடி வந்த வண்ணம்) வேண்டாம்! பொறு மகளே! பொறு தாயே..! என் மருமகளிடம் என்னை அழைத்துச் செல்லுங்கள்... திரௌபதி..!

**திரௌ:** அத்தை! என் அருகே வர வேண்டாம். மாதவிடாய் கண்டு முழுகாதிருக்கும் நான் உரியபடி உங்களை உபசரிக்க முடியாத நிலையிலுள்ளேன்.

காந்தாரி திரௌபதியை அணைத்துக்கொள்கிறார்.

**காந்:** இல்லை மகளே! (கோபத்துடன்) அடே துரியோதனா...?

**துரி:** அம்மா..!

**காந்:** அண்ணியை அந்நியர் முன் ஆடைகளைந்தெறிந்து அம்மணமாக்கத் துணிந்த கொடியவனே! இதோ உன் அன்னை! எங்கேயடா உன் தம்பி துச்சாதனன்? அவனை ஏவி என்னையும் துயிலுரிந்து உன் ஆணவத்தைக் காட்டிவிடு. ஏன் தயக்கம்! காந்தார நாட்டின் கோனான என் அண்ணா! சகுனி எனும் பேர் பெற்ற சோதரனே! உங்கள் மருமகனாம் துரியனிடம் கூறுங்கள்! அவன் அன்னையின் கட்டளையை நிறைவேற்றி வைக்கட்டும்-கூறுங்கள். (அழுகிறார்) இவன் பிறந்த வேளையிலே விதுரர் இடித்துரைத்தார்...இரக்கமின்றி இவனை இறக்க வதை செய்யுமென்று. ஆன்றோர்கள் ஆக்கிவைத்த அருமை மிகு நாட்டிற்கு அபகீர்த்தி தேடி வைக்க அவதரித்த துட்டனிவன்... அழித்திடுங்கள் என்று விதுரர் உரைத்திட்டார். பெற்ற மனம் கேட்கவில்லை. இரக்கம் வைத்து வளர்த்தோம்- இன்று இழிவு கண்டு ஏங்குகிறோம். பெண்மைக்கு இழுக்கதனை எம் பேரினத்தோரென்றும் எண்ணத்தில் கொண்டதில்லை. எம் முன்னோரே! இக்கொடுமை பொறுத்தருளக் கோருகிறேன். கற்பின் கொழுந்தான காரிகையாள் சாபமிட்டால் காலம் பிழைத்திடுமே! நாட்டின் நலம் கெடுமே! நாட்டிலுள்ள நாற்படைகள் கூட்டி எழுந்தாலும் (சாபத்)தீட்டைத் துடைத்தெறிய தான் வழியும் திறந்திடுமோ..? (திரௌபதியிடம் திரும்பி)
திரௌபதியே என் மகளே! தாயைப் போல் கேட்கின்றேன்! சாபம் தனைக் கொடுத்து சீரழிவைத் தரவேண்டாம். தூயவளே! உனக்குத் தீங்குதனை இழைத்த துன்மார்க்கர் திருந்தட்டும். குலமகளே! உனக்குக் கொடுமைதனை விதைத்தோரு முன்குலத்தின் கிளையினர்தான். உன் மானம்தனைப் பறித்த மடையர்களை மன்னித்திடு தாயே! பேதையிவள் பெற்றெடுத்த பெரும்பழி காரர்களை மாதே மனமிரங்கி மன்னிக்க வேண்டுகிறேன்!

**திரௌ:** இச்சபையி லிருக்கின்ற எவரையும் நான் விடுத்தாலும் எனை இந்த இழிவுக்கு இலக்காக்கி விட்டவரை; எள்ளி நகையாட வைத்த எளிய மதி படைத்தோரை, வெல்லாமல் விடமாட்டேன்! துரியோதனனாணையிட துயிலுரிந்த துச்சாதனன், தூபமிட்ட சகுனி, துணைபோன கர்ணனவன் நால்வரையும் பழி தீராதிருந்துவிட்டால் பத்தினியும் நானல்ல, பாஞ்சால நாட்டதிபன் மகள் பாஞ்சாலியாளுமல்ல!

**காந்:** அருமைத் திருமகளே! அன்னையிவள் கேட்கின்றேன். (என்) அருமைப் புதல்வர்களை சாபமிட்டழிக்காமல் காப்பதுன் கடமையம்மா! (கணவன் திருதராட்டிரன் பால் திரும்பி) அரசே! அரிவையிவள் நிலை காண அந்தகரால் முடியாது- ஆனாலும் அவள் கூறும் வார்த்தைகளைக் கேட்கவும்தான் முடியாதோ?

**திருத:** ஆமாம் காந்தாரி! ஆன்றோர் நமக்களித்த அரிய திருநாட்டில் அனர்த்தங்கள் சூழ நான் காரணனாகி விட்டேன். அறவழியில் வந்தவர்கள் அறிவுரையைக் கேட்காமல் கேடனைத்தும் சூழ கேவலத்துக்கிடமளித்தேன். (அழுது கொண்டு இருக்கைவிட்டு எழுகின்றார்) அருமை மருமகளே என் அன்புடைய பாஞ்சாலி! மன்னித்தருளம்மா! மடமைக் கிடம் கொடுத்த மதியிழந்த மூடனெனை மன்னித்தருளம்மா..! கண்ணீரைத் துடைத்துக்கொள்! எண்ணத்தில் எழுகின்ற எதனை நீ கேட்டாலும் தட்டாமல் தருகின்றேன்-தயங்காமல் கேளம்மா!

**திரௌ:** அடிமைத் தளை பூண்ட எனதருமைத் துணைவர் தருமர்தனை விடுவிப்பீர்!

**திருத:** யுதிஷ்டிரன் தளை அவிழ்ந்தான். தயங்காமல் மேலும் கேள்! தருகின்றேன்.

**திரௌ:** பாண்டவர்கள் விடுதலையும் பறி கொடுத்த பூமி, படைக்கலங்கள் அத்தனையும் விடுவிக்கப்படவேண்டும்.

**திருத:** விடுவித்தேன் மகளே! வேறேதும் கேட்டாலும் விருப்புடனே மறுப்பின்றி வாரியிறைத்திடுவேன்-வேண்டுவதைக் கேள் தாயே!

**திரௌ:** பேராசை எனக்கில்லை! போதும் இந்த விடுதலையே! சத்திரிய குலத்தின் சன்மார்க்க முறைப்படியே இருதடவை தான் எனக்கு வரம் இரக்க வகையுண்டு.

**திருத:** இருக்கலாம் மகளே! இருப்பினும் இன்னும் ஏராளமாகத் தர எனக்கு மனமுண்டு. சதுரங்க ஆட்டத்தில் சசே ராம் பாண்டவர்கள் தோற்று விட்டதத்தனையும் தடையின்றி அவர்களிடம் சேரட்டும்! இது ஆணை!

**திரௌ:** தாயத்தில் தோற்றவற்றை த்ர்மம் போல் மீண்டும் பெற சம்மதமோ என்று தங்கள் மக்களிடம் கேளுங்கள்- மாமா!

**கர்ண:** (சனியிடம்) மாமா! மாதர்கள் பல பேரை பார்த்துள்ளேன் நான் என்றும்.
ஆனாலும் தீயினைப் போன்ற தீட்சண்யம் கொண்ட வளும் வாளினைப்போன்ற வலிமை மிகுந்தவளும் வாழ்வினில் இவள் போன்ற வடிவினளைக் கண்டதில்லை.

**அர்ச்:** அடக்கடா உன் வாயை அங்கதேச மன்னா! அடங்கியிருப்பதற்கு இனி அடிமையில்லை நாங்கள்!

**பீமன்:** உன் வாயை மூடாவிடில் மூடவைப்பேன் இக்கணத்தில்!
இருவரையும் யுதிஷ்டிரர் அடக்குகிறார்.

**யுதிஷ்:** அருமைத் தம்பியரே! அமைதி அடையுங்கள். பெரியப்பா முன்னிலையில் பிதற்றுவது அழகல்ல-வாருங்கள் நாம் உடனே வெளியேறிச் சென்றிடலாம்.
(திருதராட்டிரரிடம் வந்து) பெரியப்பா! நாங்கள் இனி என்ன செய்யவேண்டும்..?

**திருத:** மக்காள்! நடந்தவற்றை மறந்து நல்லதையே நாடுங்கள்! இந்திரப் பிரஸ்தம் சென்று இன்பமாக வாழுங்கள்! பழி தீர்க்கும் எண்ணம் பற்றிக்கொள்ளும் வேளையிலிப்பார்வையற்ற பாவியினை எண்ணிப் பாருங்கள். சாந்தி பெற வாய்ப்புண்டு! போய் வாருங்கள் சேமமுடன்!

-காட்சி மாற்றம்-

அந்தப்புரத்தில் இருள் சூழ்ந்த மூலையில் திரௌபதி காணப்படுகிறாள். குந்தி அவளருகே போகிறார்.

**குந்தி:** திரௌபதி! அழவேண்டாம் மகளே! அஸ்தினாபுரம்தான் அற மார்க்கம் அத்தனையும் அழித்திருக்க அபலை நீ ஏன் அழவேண்டும்? என் மக்கள் தம் பழிக்கு அஸ்தினாபுரம்தான் ஏன் பழி சுமக்க வேண்டும்? அருமைமிகு மைந்தர்களை பெற்றெடுத்தேன் என அன்று அகமகிழ்ந்தேன்.. ஆனால் அவர்கள் அவனியிலே இழிவான சூதாடியானார்கள். மனைவியுனை பணயமென வைத்தாடும் மதியிழந்த மூர்க்கர்களை மக்கள் என்று கூற மனமொப்ப விடுவதில்லை. அழுவதை நான் என்றோ அறவே மறந்துவிட்டேன். காந்தாரி மைந்தர்களின் களிப்பினை கூட்டுதற்கே நம் கண்ணீர் தானுதவும். கண்களைத் துடைத்துவிட்டு கவலைதனை விட்டுவிடு. இழிவு வழி கண்டவர்கள் தன்மானம் தனைத் தானே தானிழந்து இழிந்தார்கள்! எழுந்திரம்மா...!

-காட்சி மாற்றம்-


காந்தாரியின் அந்தப்புரம்- விதுரர் வருவதாக தாதி வந்து கூறுகிறாள்.

**விதுர:** மகாராணிக்கு வணக்கம்!

**காந்:** தனது மருமகளின் மதிப்பும் மானமும் இழிவுபடுத்தப்படுவதைத் தடுக்கும் திராணியற்ற ஒருத்தியான எனக்கு இந்த மரியாதை அவசியமா? இந்தக் கொடுமைதனை பிதாமகரும் துரோணரும் கிருபரும் தாங்களுமே தடுக்க முடியாமல் சாட்சிகளாய் இருந்தீர்கள்! நம்பவே முடியாமல் இருக்கிறது எந்தனற்கு!

**விதுர:** கண்கள் திறந்திருந்தமையினால் காண்பதற்குரிய கட்டாயமுமிருந்ததே மகாராணி!
காந்தாரி கோபமடைகிறார். அவருடைய நடையில் தளர்வு தென்படுகிறது. இருந்தும் சமாளித்துக்கொள்கிறார்.

**காந்:** காண்பதற்கு மட்டும்தான் கண்ணென்றால் உயிருக்கும் உள்ளத்தின் உணர்வுக்கும் காணும் திறனில்லையா? அரியணையைக் காக்கும் அருஞ்சபதமேற்ற பிதாமகரும் என்ன செய்தார்? மன்னவரின் மைந்தர்களால் முடிக்கிழிவு மூண்டுவர மௌனமவர் சாதித்த மர்மமென்ன? துரியனுக்கு அரிய கலை அத்தனையும் புகட்டியவர் துரோணரவர். அரசர் குலத்தினரின் அவைக்கே அறிவூட்டும் அரிய குரு கிருபரவர்-இருவருமே இருந்தங்கே இழிவு இடம் பெற்றிருக்க வழி விட்டிருந்தனரே!



பீஷ்மர்

**விதுர:** பிதாமகரும் குருமாரும் பேசாதிருந்ததற்கு வலுவான விளக்கங்கள் வகையாகத் தரக்கூடும். மகாராணியை நாடி மந்திரி நான் வந்ததற்கு மறுகாரியமுண்டு! குருகுலத்தின் கேடு கடுகி வருகிறது. தடுப்பதற்கு தகுந்த வழி எடுக்கவுமோர் மார்க்கமுண்டோ என்று வினவிடவே நான் வந்தேனிங்கின்று!

**காந்:** சூதாட்டச் சபையினிலே நடைபெற்ற சம்பவங்கள்- சுய சிந்தனைதன்னை சுட்டெரித்து விட்டதையா! கேடுகளைக் காணாதிருப்பதற்கே கண்களை நான் கட்டிவிட்டேன் அன்றே. ஆயிரம் வினாக்கள் எழுந்தென் ஆத்மாவை அரிக்கிறதே! அண்ணாவிடம் போங்கள்! அன்றேல் அரிய பிதாமகரின் அறிவுரையை நாடுங்கள். கொழுந்து விட்டெரிகின்ற கூடாரத்துள் தவிக்கும் கோமாதா போலங்கு கொடுமைகளால் பொசுங்குகிறேன். (அழுதுகொண்டே) பாரத வம்சத்தின் பரந்த பெருமாளிகையில் பாரிய வெடிப்பொன்று பயங்கரமாய் தோணுவதை பார்க்கின்றோமென்பதனால் இணைந்தே மனம் வருந்தி ஈடுசெய்ய நாம் முனைவோம்!

**விதுர:** வருந்துவதால் மட்டும் வேதனைகள் தீர்வதில்லை- மகாராணி...!

**காந்:** மகாராணி என்று ஏன் என்னை அழைத்தீர்கள்? அண்ணாவின் துணைவி நான் அண்ணியாக மாட்டேனோ?

**விதுர:** அவையை விட்டு அப்பாலே போவென்று சொன்னான். அவையினிலே அவமதிப்பை அள்ளி அள்ளித் தெளித்தான். அப்போதெல்லாம் அண்ணன் அருமை மகன் உதிர்த்த அடாத சொற் கேட்டும் அடங்கி இருந்துவிட்டார். இத்தகையதோரிடத்தில் எனக்கெங்கே நன் மதிப்பு? இருந்தும் என் தலைவிதியால் இங்கேயே கிடக்கின்றேன். இத்தனையும் நடந்தபின்பும் அண்ணி என்றழைக்க எனக்குரிமை ஏது சொல்வீர்?
எஜமானர் ஏவும் பணி முடிக்கும் பாங்கியவள் பெற்றெடுத்த பாபி நான்! என்றென்றும் ஏவற்பணி செய்தே இருப்பதுதான் என் கடமை! இழைக்கப்படும் இம்சைகளைத் தொடர்ந்து பொறுத்திருப்பேன்! பொறுமையின் எல்லைவரை பொறுக்குமாற்றல் நிலைக்குமோ (என்று) நினைக்கும் நிலையினிலே நானில்லை மகாராணி-வருகின்றேன்!

**காந்:** எங்கே போகின்றீர்?

**விதுர:** உண்மை உறங்காத உள்ளம் எங்குளதோ அங்கெல்லாம் சென்று அறைகூவப் போகின்றேன்!

**காந்:** அமைதியினை அந்த ஆண்டவன் அருளட்டும்!

**விதுர:** சுடுகாட்டில் மட்டும்தான் சமாதானச் சகமிருக்கும். அது வேண்டாம் எனக்கிப்போ! சூதாட்டத்தில் பணயப் பொருளாக வைத்தாட சடப்பொருளா பெண்மை? சொந்த மனையாளை சொக்கட்டானாட்டத்தில் சந்தைப் பொருளாக்க சட்டத்திலிடமுண்டோ? சான்றோர் விதியுண்டோ? மேம்பாடு என்பதற்கு மதிப்பும் இருக்கிறதோ? தர்மம் என்றாலென்ன? நீதியென்றால் யாது? விடைகாண முடியாதிவ் வினாக்களுக்கு விடை தேடிப் புறப்பட்டேன் அண்ணி! போவதற்கு விடை தருவீர்!

**காந்:** விடைகண்டு கொண்டால் இந்த கடையவளிடம் வந்து கண்டவற்றைக் கூறுங்கள்!

-காட்சி மாற்றம்-

பீஷ்மரின் மாளிகை-கவலையுடன் காணப்படும் அவரிடம் துரோணாச்சாரியார் வருகிறார். பீஷ்மர் அவரை வரவேற்கிறார்.

**பீஷ்ம:** அமருங்கள் ஆச்சாரிய தேவா!

**துரோ:** கங்கையின் மைந்தரே! அஸ்தினாபுரத்திலோர் அங்கமென நினைக்க அஞ்ச வேண்டியிருக்கிறதே! பெண்மையின் பெருமைக்கே பெரும் தீங்கிழைத்து விட்ட கண்ணியமற்ற கொடுமைதனைக் கண்டும் கைகட்டி வாய் புதைத்து களங்கத்தை அணைத்திருந்தோம். முற்பிறவி தனிலிழைத்த கொடுமைக்குத் தண்டனையா? அச்சமது உச்சமதாய் ஆட்டுகின்ற வேதனையால் ஆறுதல் தனைத் தேடி ஓடிவந்தேனையா?

**பீஷ்ம:** தொல்லைக்கோர் எல்லைதனை தேடி அலைந்ததனால் துயரத்தின் எல்லைக்கே துரத்தப்பட்ட தாங்கள் உயிருக்கே உலை வைக்கத் துணிந்திடலாகாது! அமருங்கள் ஐயா ஆசனத்தில் அமருங்கள்!

**துரோ:** அவையினிலே நடந்தவற்றால் அகத்தினிலே ஆறாத புண்ணெதுவும் தோன்றிப் புரையோடவில்லையா சொல்லுங்கள் ஐயா!

**பீஷ்ம:** அடுக்கடுக்காய் ரணங்கள் அகத்தினிலே ஆழமதாய் ஒன்றன்பின்னொன்றாக ஓங்கி அறைந்தமையால் நடுக்க முற்றுக் கிடக்கும் நடைப்பிணமதாகி விட்டேன். 'உங்கள் மகளானால் உறுத்தாதோ உங்கள் உள்ளம்' என்று அவை நடுவே நின்று அரிவையவள் கேட்டாள். அன்றிலிருந்தே அகத்தில் ஆயிரம் அவலக்குரல் ஆர்த்தெழுந்தே உறுத்த அவதியுறுகின்றேன். (இடி முழக்க ஓசை கேட்கிறது) கேட்கிறதா ஐயா கேட்கிறதா? இன்றிந்த மாளிகையின் சுவர்கள் சடசடத்து இடியுமொலி கேட்கிறதா? எம் ஆன்றோர் தேடி வைத்த தேடரிய தருமநெறி குறி கெட்டுத் தறி கெட்டு தடம் புரளும் தீய வளி தோன்றுவதைப் பார்த்தீரா?
துரோணர் பீஷ்மரை நெருங்குகிறார்.

**துரோ:** எம்மில் ஒருவன்தான் எழுந்து பதிலுரைத்தான். விதுரர் மகாத்துமன் தான் வீறாப்புடன் பகன்றான். அமைதி தனைக்காத்து ஆலகால விஷம்தன்னை அருந்த அவன் ஒப்பவில்லை!

**பீஷ்ம:** இருந்தும் பயன் என்ன? மாற்றுவிளை வென்ன? மன்னவர்தான் ஏதும் மாற்றுரைகள் பகன்றாரா? துரியன்பின் விளைவைத்தான் நினைத்துப் பார்த்தானா? அஸ்தினாபுரத்தின் அறம் அழிந்து சிதைவதற்கு அவை நடுவே அரும் சாட்சி அங்கமதாய் தானிருந்தோம்! நாட்டுக்கு நாம் இன்று கடனாளி ஆகிவிட்டோம். நாளை வரவிருக்கும் நன்மைதனை நினைத்து நம்மை நாமிழக்க நல்வேழ்விப் பலியாவோம். நாட்டைவிட்டு ஓடிவிட்டால் நம் பங்குக்கார் வருவார்?

**துரோ:** இவ்வாறு ஏனையா இயம்புகின்றீர்? காலம் கடந்த பின்னர் களிவிரக்கம் காட்டி நின்றார்- கோமகனார். ஆனாலும்....
பாண்டவர்கள் பழி தீர்க்க படை நடத்தத் துணிவாரோ? பகருங்கள் ஐயா..! பகருங்கள்!

**பீஷ்ம:** கண்ணன் இருக்கின்றான் கட்டாயம் போர் நடக்கும்! கடுகி வரும் போரை தடுத்தாள வழியில்லை! சகுனியினால் சூழும் மிகுபகையைச் சாய்ப்பதற்கு வகையறியாதிருக்கின்றோம். அஸ்தினாபுரி அரசின் அபகீர்த்திக்கென்றே அவதாரமாகிவிட்ட அவனை வெல்ல முடியாத அவல நிலை நமக்குண்டு.
இப்போது அர்ச்சுனன் பிரவேசிக்கிறான்.

**துரோ:** உண்மை உரைத்தீர்கள்! ஊழ்வலியை வெல்ல எவராலுமாகாது..!

**அர்ச்:** தாத்தா..! வணக்கம்! குருவே..! வணக்கம்!

**துரோ-பீஷ்ம:** இறைவன் அருளட்டும்.

**பீஷ்ம:** அர்ச்சுனா! ஆசனத்தில் அமரப்பா!

**அர்ச்:** இருக்க வரவில்லை தாத்தா! இந்திரப் பிரஸ்தம் நோக்கி இன்றே போகின்றோம். தங்கள் தாழ்பணிந்து விடை பெறத்தான் வந்துள்ளேன்!

**துரோ:** தனியாக வந்துள்ளாய்..! மற்றவர்களெங்கே.? தாத்தாவின் தாழ் பணிய தமயன்மார் வரவிலையோ...? தம்பிமாரெங்கே..?

**அர்ச்:** அண்ணன் வர விரும்பவில்லை! மூத்தவர்கள் தங்கள் முகம் நோக்கி முகஞ்சுழிக்கும் மார்க்கம்தனைத் தேட அன்னவரும் விரும்பவில்லை. நாங்கள் வந்தாலுடனே பாஞ்சாலியும் வருவாள்..!

**பீஷ்ம:** நீ மட்டும் ஏன் வந்தாய்?

**அர்ச்:** அன்புள்ள தாத்தா! அருமையுள்ள தங்கள் அரவணைப்பினைப் பெறாது அகன்று செல்ல எந்தன் அகத்தில் பொறுமையில்லை. மீண்டும் நாம் காணும் வேளைதான் என்று வரும்? வந்தாலும் அந்தச் சூழல்தான் என்ன சொல்லும்? மற்றுமொரு வினாவுக்கு விடைகாண விளைந்தேன் நான்! பட்ட பெரும் துயருக்குப் பழிவாங்கத் துடிக்கும் சுட்டெரிக்கும் நெருப்பு சுடர் விட்டு எரிகிறதே! என்ன செய்ய வேண்டும் இயம்பிடுங்கள் என்னவரே!

**பீஷ்ம:** பழிவாங்கும் எண்ணம் ஏனின்னும் கண்ணே! சூது விளையாட்டில் சோரவிட்டதத்தனையும் ஏதும் மீதியின்றி எடுத்தேக விட்டனரே! மன்னவர் இட்ட கட்டளையில் மாசுமறு உண்டோ சொல்!

**அர்ச்:** அடிமைத்தளை நீக்கிவிட்டார்...! அரியணையைத் தந்துவிட்டார்...ஆனால் பாஞ்சாலியின் மானம் பறித்ததைத் தந்தாரா? துயிலுரியத் துணிந்த துச்சாதனன் கைக்குத் தண்டனை தானென்ன? தன் தொடைதனிலே அவளை தடையறவே வைக்கச் சொன்ன வாய் தன்னைக் கிழித்தாரா? தீயில் பிறந்த அந்தத் தூயவளை வேசியென ஏசியவன் வாய்க்கு என்ன தண்டனை கொடுத்தார்? அஸ்தினாபுரம் எமக்கு அரிய பொருள் தரவேண்டும். துரியோதனன் உயிரும் துச்சாதனன் உடலும் காந்தார நாட்டதிபன் சகுனியவன் உடலும் கட்டாயம் எங்களுக்குக் காணிக்கை வேண்டுமையா!

**பீஷ்ம:** அருமைத் திருமகனே அர்ச்சுனா! அத்துடன் மற்றுமோருடலும் இணைந்தே தரப்படும் என்பதை அறிவாயா..?

**அர்ச்:** தாத்தா..!

**துரோ:** அதுமட்டுமா மகனே! என்னுடைய உடலும் அவற்றுடனே இணையும்.

**அர்ச்:** குரு பெருமானே...!

**பீஷ்ம:** உண்மைதான் அர்ச்சுனா! உடல்களுடன் உன்மேல் உள்ளன்பு பூண்ட எந்தன் உடலும் நீ எடுத்தேதான் ஏக வேண்டும்! என்னுடன் போர் தொடுக்கும் பராக்கிரமமற்றவனா? அஸ்தினாபுரி நாட்டை அமர் புரிந்து வீழ்த்திடுமுன் அரணான எனை வீழ்த்த வேண்டுமன்றோ வில் விஜயா!

**அர்ச்:** எங்களுக்கேற்பட்ட அவமானம், அவமதிப்பு அத்தனையும் மறந்து அடங்கிவிட வேண்டுமா? அன்புள்ள பிதாமகரே! இயம்புங்கள் இக்கணமே!

**பீஷ்ம:** அபகீர்த்தி உண்டாக யாரப்பா காரணம்? சதுரங்கச் சபையினிலே பணயப் பொருளாக பாஞ்சாலியை வைத்த பாதகத்தை யார் புரிந்தார்? பார்த்திருந்த நீங்களெல்லாம் வார்த்தை உதிர்க்கவில்லை. எதிர்க்க வேண்டாமென்று எதிர்வாதம் புரிந்தவர் யார்? அவமானம், அபகீர்த்தி அடுக்கடுக்காய் நேர்ந்தமைக்கு அவர்கள் மட்டும் பொறுப்பல்ல- நீங்களும்தான் காரணத்தை ஏற்றாக வேண்டுமப்பா!

**அர்ச்:** அண்ணாவின் எண்ணத்தை அவை நடுவே அவமதிக்க தம்பிமார் நாங்கள் துடித்தெழவா முடியும்? மூத்தவரை எதிர்த்து மூர்க்கமுடன் வாதாட முடியுமா தாத்தா? முறையதுவாகிடுமா?

**பீஷ்ம:** சண்டைக்குத் தயாராகும் சகோதரரின் திட்டத்தை சாற்றுதற்கு வந்தாயா? அண்ணன் யுதிஷ்டிரனின் எண்ணத்தைக் கூறி எச்சரிக்க வந்தாயா? என் கண்ணான அர்ச்சுனா! 'கதையைக் கேளப்பா! புண்ணான தென் இதயம்! நடந்துவிட்ட கொடுமைகளால் நலமிழந்த தென்நாடு! திரௌபதியாளின் துயில் உரியப்படவில்லையடா! தொன்று தொட்டு எம் முன்னோர் தேடி வைத்த பெருமையெல்லாம் சீர்குலைக்கப் பட்டதடா..! இதுதானடா உண்மை! உங்கள் நாடு நோக்கி இன்றே புறப்படுங்கள். தங்கள் தங்கள் தகைமைகளை தரம்பிரித்துப் பாருங்கள். பகைமை உணர்வோடு பழிதீர்க்கும் பாங்கினையே நினைத்து வெதும்பாமல் நியாயம்தனை எண்ணி நிதானித்துப்பாருங்கள். உன்னுடைய மூத்தவரும் இழிவுக்கு உடந்தைதான். துரியனுக்கு தரும நெறிதனை புகட்ட முடியாது. புறக்குடத்தைப் போலான பேதையவன் சூது நிறை சகுனியவன் சூழ்ச்சிக்கோர் கைப்பொம்மை! புறப்படு மகனே! போய் வா உன் பதிக்கே-வாழ்த்துக்கள்!

__பின்னணிப் பாடல்:__

**பெண்ணைப் பெருந் தெய்வமதாய்**
**போற்று கின்ற பாரதத்தின்**
**மண்ணுக்கோர் களங்கமதாய்**
**மாறி நின்ற காட்சிகளால்**
**புண்ணாகிப் போயுள்ளம்**
**பெருகி வரும் குருதியுடன்**
**கண்ணீர்க்கடலாடும்**
**காட்சியானார் பீஷ்மர்!**

(தொடர்ந்து வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

www.padippakam.com




# தங்கநகைப் பரிசுப் போட்டி
## முதற் பரிசு 'நெக்லஸ்'









இனி-தெரிந்தெடுக்கப்பட்ட அதிஷ்டசாலிகள் பற்றிய விபரம்.
முதலாவது பரிசான தங்க மாலை (நெக்லஸ்) பெறுபவர்.

செல்வி.எஸ்.ஜெயலட்சுமி
மே/பா ஆர்.சண்முகசுந்தரம்
குசலை, பங்கதெனியா.

ஆறுதல் பரிசுகளைப் பெறுபவர்கள்:

01. எஸ்.எம்.சித்தி ரம்சானி
இல. 763/2, கடற்கரை வீதி, அக்கரைப்பற்று-1.
02. திருமதி சித்தி ஆவிஷா
இல. 51/1, புலக்கொட்டுமுல்லை, பதுளை.
03. ஆர்.எஃப்.றைஹானா
இல. 420, நம்புக்கனவீதி, டிகே-காலெதர.
04. தனலட்சுமி விஸ்வநாதன்
கோட்டொழு, கந்தப்பளை.
05. செல்வி தனலட்சுமி இராமநாதன்
77/1 புதுமுகத்துவார வீதி, கல்முனை.
06. எ.ஜயந்தமாலா
இல. 161, கொடபோல வீதி, மாத்தளை.

→








ஹொலிவூட் படங்களில் பெரும்பாலானவை வயது வந்தவர்களுக்கு மட்டும் என்ற முத்திரையுடன் திரைக்கு வருகின்றன. இளைஞர்களை சாகசம்-குதூகலிப்பிலை அளிக்கும் திரைப்படங்களும் வெளிவருகின்றன. துள்ளாட்டமும் பாட்டுக்களும் இந்திரைப்படங்களில் நிரம்பி வழியும். கொலை வெறி, அடிதடி சண்டைக்காட்சிகள் வேறு சில படங்களை ஆக்கிரமிக்கும். அண்மைக்காலங்களில் வெளியாகி மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுவரும் சில படங்கள் பெரிய திரைப்பட நிறுவனங்களின் தயாரிப்புகளல்ல. மிகக் குறைந்த பொருட் செலவில் தனியாரால் தயாரிக்கப்பட்டுள்ள சில படங்கள் வசூலில் தனி இடத்தைப் பெற்றுவருகின்றன. கெவின் ஸ்மித் தயாரித்துள்ள 'கிளார்க்ஸ்' என்ற படத்துக்கு ஆக 27,575 டொலரே செலவிடப்பட்டுள்ளது.






## ஹொலிவூட் ரவுண்ட்

'உண்மையான பொய்கள்' (TRUE LIES) என்ற திரைப்படத்தை தயாரிக்க 10 கோடி டொலர் செலவிடப்பட்டதாக-பெருமையாகப் பேசப்படுகிறது. இத்தொகையினை கெவின் ஸ்மித்திடம் கொடுத்தால் இத் தொகையில் 3,626 படங்களை அவர் தயாரித்திருப்பார் என்று விமர்சகர்கள் கருதுகிறார்கள். 'கிளார்க்ஸ்' போன்ற படங்களில் நடித்தவர்கள் பெரும்பாலும் சாதாரணமான 'கத்துக்குட்டிகள்'தான் என்று விமர்சகர்கள்சுட்டிக் காட்டிய போதும், செப்ரம்பர் மாத முதல் வாரங்களில் திரைக்கு வந்த சிறந்த 10 படங்களில் இவை போன்ற படங்களும் இடம் பிடித்துள்ளன. இந்த படங்களில் உள்ளவர்கள் பிரபலமாகாத புது நடிகர்கள். ஆனால்

ஹொலிவூட்டில் குறைந்த செலவில் திரைப்பட தயாரிப்புக்களின் நம்பிக்கை




→ மர்லின் மன்றோ தனது கவர்ச்சியில் [illegible] நாட்கள் முன்பாக [illegible] 'இரவு விருந்துக்கான' அழைப்புக்கு செல்ல முடியாத சூழல் ஏற்பட்டதை [illegible] காலத்திலும் [illegible] அதை நினைத்துத்தான் [illegible]

